32°c
கூடிய வெப்பநிலை 40°c
குறைந்த வெப்பநிலை 27°c
மேக மூட்டம், மழையு
டன் கூடிய காலநிலை

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

வலி. தெற்கு பிரதேச சபை
03 MAY 2014
பொது சன நூலகம்
ஏழாலை



விலை: யாழ்.– 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 158 வள்ளுவர் ஆண்டு: 2045 சித்திரை 20, சனி 03.05.2014

# தமிழர்களின் நிலங்களில் இராணுவக் குடும்பங்கள்

## வடக்கில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்கள் வவுனியாவில் படையினர் உதவியுடன் கைங்கரியம்

யாழ்ப்பாணம், மே 3
இராணுவத்தினரின் உதவியுடன் வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களில் சிங்களக் குடும்பங்களை குடியமர்த்தும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்தும் முடுக்கி விட்டுள்ளது. நில அபகரிப்புக்கு எதிராக தமிழர்கள் போராட்டங்களை நடத்தியும், குரலெழுப்பியும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வரும் நிலையில், அவை எதனையும் கருத்தில் கொள்ளாது சிங்கள மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளில் அரசு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது.



வவுனியா வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாவற்குளத்துக்கு அருகில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 100 ஏக்கர் நிலப்பரப்பில் 125 இராணுவக் குடும்பங்களை முதற்கட்டமாகக் குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையில் அரசின் அறிவுறுத்தலுக்கு அமைய இராணுவத்தினரே ஈடுபட்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
வவுனியா வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாவற்குளம் பிரதேசத்தில் 100 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பகுதி இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டு எல்லைப்படுத்தும் நடவடிக்கைகள் கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் முன்னெ

21ஆம் பக்கம் பார்க்க

## கோபியின் மனைவி விடுதலை

யாழ்ப்பாணம், மே 3
பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கடந்த மார்ச் மாதம் கைது செய்யப்பட்டிருந்த கோபியின் மனைவியான சர்மிளா நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். ஆயினும் அதே சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்பட்டு, கைது செய்யப்பட்ட ஜெயக்குமாரி மற்றும் அவரது மகளான விபூசிகா ஆகியோர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த மார்ச் மாதம் தமிழீழத்தின் பாதுகாவலர்கள் என்ற துண்டுப் பிரசுரம் வைத்திருந்த குற்றச்சாட்டில் பளையில் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து

21ஆம்பக்கம்பார்க்க

## ஆஸி. செல்ல முயன்ற 54 பேர் கைது

யாழ்ப்பாணம், மே 3
சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 54 பேர் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைதானவர்களில் 11 பேர் பெண்களும், 13 பேர் குழந்தைகளும் 30பேர் ஆண்களும் அவற்றுள் அடங்குகின்றனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்படைப் பேச்சாளர் கோலச வர்ணசூரிய,
"சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா செல்ல முற்பட்ட 54 பேரை முல்லைத்தீவு கடலுக்கு அப்பால் கடற்படையினர் கைதுசெய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலைக்கு கொண்டு செல்லப்பட்டு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
இதுகுறித்த மேலதிக விசாரணைகளை அவர்கள் முன்னெடுப்பார்கள்' - என்று தெரிவித்தார். (ற)

குடாநாட்டின் நிதி நெருக்கடியும் வங்கி வாடிக்கையாளரின் கடன் சுமையும்
பக்கம் 13

## சீருடை மட்டுமல்ல காவியுடையும் தமிழரை அடக்குவதற்கு முயற்சி

### ஊடகப் பணியாளர்கள் நினைவு நிகழ்வில் மாவை



மாவை சேனாதிராசா அஞ்சலி செலுத்துகிறார்

யாழ்ப்பாணம், மே 3
நாட்டில் இப்போது புதியதொரு நிலைமை தோன்றியிருக்கின்றது. சீருடையினர் மட்டுமல்ல காவி உடையினரும் இப்போது தமிழர்களின் குரலை அடக்க நினைக்கின்றார்கள். அவர்கள் சில வேளைகளில் சீருடையினரைக் கூட அடக்குகிறார்கள். இதுதான் இன்றைய ராஜபக்ஷ அரசின் நிலைமை.
இவ்வாறு நேற்று உதயன் பணிமனையில் நடைபெற்ற கொல்லப்பட்ட ஊடகப் பணியாளர்கள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

21ஆம்பக்கம்பார்க்க

## இராணுவ ஒத்துழைப்புகளை மட்டுப்படுத்தியது அமெரிக்கா

### இலங்கையின் மனித உரிமை நிலை பற்றிய கவலையே காரணம்

வொஷிங்டன், மே 3
மனித உரிமைகள் பற்றிய கவலைகள், மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்கள் என்பவற்றால் இலங்கையுடனான இராணுவ ஒத்துழைப்புகளை அதிகரிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உத

21ஆம் பக்கம் பார்க்க

மூன் - நவிப்பிள்ளை முக்கிய கலந்துரையாடல்
மேலதிக தகவல்கள் 21 ஆம் பக்கத்தில்

## எதேச்சதிகாரமான போக்கு இலங்கையில் வலுக்கின்றது

### சாடுகின்றார் அமெரிக்க உயரதிகாரி

வொஷிங்டன், மே 3
இலங்கையில் எதேச்சதிகாரத்தை வலுப்படுத்தும் போக்கு பலமாக உள்ளது என்று தெரிவித்துள்ளார் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவர் அமைப்பின் ஆசியப் பிரிவின் பதில் உதவி நிர்வாகியான டெனிஸ் ரோலின்ஸ்.
அமெரிக்க வெளிவிவகாரக் குழுவின் ஆசிய-பசுபிக் உப குழுவின் முன்பாக, 2015 ஆம் ஆண்டுக்கான அதிபர் ஒபாமாவின் வரவு - செலவுத்

21ஆம் பக்கம் பார்க்க

## அப்பனுக்கு உதவியவர் கைதாம்

கொழும்பு, மே 3
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைமீளுருவாக்க முயற்சித்தார் என்று தெரிவித்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அப்பனுக்கு உதவினார் என்று தெரிவித்து அநுராதபுரத்தில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
விடுதலைப் புலிகளை மீளுருவாக்க முயற்சித்தனர் என்று தெரிவித்து கோபி, தேவிகன், அப்பன் ஆகியோர் அண்மையில் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் அவர்களுக்கு தங்கு

21ஆம்பக்கம்பார்க்க

## ஊடக சுதந்திரம் இலங்கையில் இல்லை

### குற்றஞ்சாட்டுகின்றார் பிரிட்டன் தூதுவர்

லண்டன், மே 3
இலங்கையில் ஊடகத்துறை தொடர்ந்தும் தொந்தரவுகளுக்கும், அச்சுறுத்தல்களுக்கும் முகம்கொடுத்து வருகின்றது. அந்த நாடு உலக பத்திரிகை சுதந்திரக் கோட்பாடுகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்க மறுத்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் இலங்கைக்கான பிரிட்டன் தூதர் ஜோன் ரன்கீன்.
பிரிட்டன் தூதரக இணையத்தளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-
"தாங்கள் மேற்கொள்ளும் கடமையின் நிமித்தம் உலகமெங்கும் ஊடகவியலாளர்கள் தொடர் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுத்து வருகிறார்கள். இலங்கையில் பணியாற்றும் அநேக ஊடகவியலாளர்களும் தொடர்ந்தும் தொந்தரவுகளுக்கும் மிரட்டல்களுக்கும் இலக்காகி வருகிறார்கள்.
உலக பத்திரிகை சுதந்திரக் கோட்பாட்டு விதிகளை இலங்கை தொடர்ந்து கைவிட்டு வருகின்றது. 2000ஆம் ஆண்டுக்கும் 2009ஆம் ஆண்டுக்கும் இடை

21ஆம் பக்கம் பார்க்க

## ஊடக சுதந்திரம் மோசம்

### சர்வதேச ஊடக அமைப்பு கணிப்பு

நியூயோர்க், மே 3
இலங்கையில் ஊடகச் சுதந்திரம் மிக மோசமான நிலையில் இருக்கின்றது என்று சர்வதேச ஊடகச் சுதந்திரக் கண்காணிப்பு அமைப்பு ஒன்றின் கணிப்பில் கண்டறியப்பட்டுள்ளது. 'சுதந்திர இல்லம்' என்ற அமைப்பு மேற்கொண்ட ஆய்விலேய இந்த முடிவு வெளிப்பட்டுள்ளது.
'0' மிகச் சிறந்த ஊடகச் சுதந்திர நிலை எனவும், '100' படு மோசமான ஊடகச் சுதந்திர நிலை எனவும் கொண்ட அளவீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் இலங்கை 76 புள்ளிகளைப் பெற்றுள்ளது. சுவீடன், நோர்வே ஆகிய நாடுகளில் ஊடக சுதந்திரம் சிறந்த

21ஆம் பக்கம் பார்க்க

## மன்னாரில் இருந்து படகில் தமிழகம் சென்ற ஆஸி.பெண்

கொழும்பு, மே 3
உலக மக்களிடையே சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சான்ட்ரா ரூப்சன் (வயது-41) என்ற பெண் உலகம் முழுவதும் தனியாக, சிறிய படகில் பயணம் செய்கின்றார். இலங்கை வந்த

21ஆம்பக்கம்பார்க்க

## 20 மில். ரூபாவுக்கு நடப்பதுதான் என்ன?

### திங்கட்கிழமை தெரியவரும் என்கிறார் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

யாழ்ப்பாணம், மே 3

வடக்குமாகாணக் கல்வி அமைச்சுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விடவும், மாதாந்தம் 20 மில்லியன் ரூபா மேலதிக செலவு செய்யப்பட்டு வருகின்றது. மேலதிக நிதி ஏன் செலவு செய்யப்பட்டு வருகின்றது என்பதை நாளை மறுதினம் திங்கட்கிழமை வடக்கு மாகாண பிரதம செயலாளருக்குத் தெரியப்படுத்தவுள்ளேன் என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்.

வடக்குமாகாணக் கல்வி அமைச்சில் நேற்று மாலை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

'வடக்குமாகாணக் கல்வி அமைச்சுக்கு மாதாந்தம் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேலதிகமாக 20 மில்லியன் ரூபா செலவு செய்யப்படுகின்றதுதான். அந்த நிதி ஏன் செலவு செய்யப்படுகின்றது என்பதற்கான விளக்கத்தை வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ்ஷை சந்தித்து விளக்கமளிக்கவுள்ளோம். அதன் பின்னர் அது தொடர்பிலான அறிக்கை ஊடகங்களுக்கு வழங்கப்படும்"- என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடும்போது:

"வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் ஒதுக்கப்பட்ட ஆளணியைவிடவும் மேலதிக ஆளணி இருக்கின்றது. கல்வித் திணைக்களத்தைப் பொறுத்த வரையில் ஆசிரியர்கள் ஆளணியிலேயே அதிகரிப்பு இருக்கின்றது. ஏனைய ஊழியர்களுடன் தொடர்புடைய ஏனைய ஆளணி பற்றாக்குறையாகவே இருக்கின்றது.

ஒவ்வொரு வலயத்திலுமுள்ள மேலதிக ஆளணியும் சீர் செய்யப்படவுள்ளது. ஆளணி களை நிர்ணயம் செய்யும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் பாடசாலை ரீதியாக ஆளணி நிர்ணயம் செய்யவுள்ளதால், எதிர்காலத்தில் ஆளணி தொடர்பிலான பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

ஆளணி சீராக்கல் மற்றும் மேலதிக பணம் செலவு என்பன காரணமாக எந்தவொரு ஆசிரியரது கொடுப்பனவும் வழங்கப்படாமல் நிறுத்தப்படமாட்டாது. சகல ஆசிரியர்களுக்கும் அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்"- என்று தெரிவித்தார். ( இது தொடர்பான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செய்தி பக்கம் 17 இல்)

(ற-5)

# இலங்கைக்கு யாரும் பாடம் புகட்ட முடியாது

## சர்வதேச நகர்வுகளுக்கு முகம்கொடுக்க தயார் என்கிறது அரசு

கொழும்பு, மே 3

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்துக்கு அமைவாக முன்னெடுக்கப்படவுள்ள சர்வதேச நகர்வுகளுக்கு இலங்கை அரசு நேர்மையான முறையில் முகங்கொடுக்கும் என்று தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சருமான டலஸ் அழகப்பெரும.

அரசியல் தீர்வுத்திட்ட விவாதத்தில் தென்னாபிரிக்காவின் பங்களிப்பானது நட்புரீதியானதே தவிர, மூன்றாம் தரப்பு தலையீடு அல்லவென்றும், அந்நாட்டிடம் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின்படி இலங்கை அரசுக்கு எதிராக ஜூன் மாதமளவில் ஐ.நா. விசாரணை ஆரம்பிக்கப்படும் என வெளியாகியுள்ள செய்திகள், இன நெருக்கடிக்கான தீர்வு விடயத்தில் தென்னாபிரிக்காவின் பங்களிப்பு ஆகியவை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

"எதனையும் ஒழிக்கவேண்டிய தேவை அரசுக்கு இல்லை. ஆகவே, சர்வதேச நகர்வுகளுக்கு நாம் நேர்மையாக முகம்கொடுப்போம். பேசுவதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. இருப்பினும், போர்க்குற்றச்சாட்டு குறித்தே பெரிதாகப் பேசப்படுகின்றது. ஜனநாயக செயற்பாடுகள், அரசின் மீளிணக்க முயற்சி ஆகியன பற்றியும் பேசுமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். எதிர்க்கோணத்தில் பார்ப்பவர்கள் நேர்கோணத்தையும் பார்ப்பதே நல்லது உதாரணமாக, 500 செங்கற்கள் அடுக்கப்பட்டுள்ளன.

இதைக்கூட இரு கோணங்களில் பார்க்கலாம். அதாவது, 498 செங்கற்கள் ஒன்றாக இருக்கின்றன என்று ஒரு கோணத்திலும் இரு செங்கற்கள் சேதமடைந்துள்ளன என்று மற்றுமொரு கோணத்திலும் கருத்துகளை முன்வைக்கலாம். ஆகவே, விமர்சனங்களை முன்வைப்பது போல் செயற்பாடுகளின் பெறுபேறுகளை ஏற்குமாறும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அதேவேளை, தென்னாபிரிக்காவிடம் கற்றுக்கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. அந்நாட்டில் 8 மொழிகள் அரச கரும மொழிகளாக இருக்கின்றன. அத்துடன், இலங்கையின் நட்பு நாடு என்ற அடிப்படையிலேயே அது தீர்வு விடயத்தைக் கையாள்வதற்கு முயற்சிக்கின்றது. இது வீண் தலையீடோ அல்லது மூன்றாம் தரப்பின் அழுத்தமோ அல்ல. நட்பு ரீதியான அணுகுமுறையாகும். இலங்கை அனுபவங்களைப் பெறும் ஆனால், எவரும் எமக்குப் பாடம் கற்பிக்க முடியாது - என்றும் அவர் கூறினார்.

(ற)

## வெளிநாடு அனுப்புவது தொடர்பில் மோசடி

யாழ்ப்பாணம், மே 3

வெளிநாடு அனுப்புவது தொடர்பாக 8 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலை மோசடி இடம்பெற்றுள்ளது.

2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மாதகல் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த சந்தேக நபர் 6 லட்சம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கியும், கடந்த 29 ஆம் திகதி காரை நகர் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் 2 லட்சம் பெறுமதியான காசோலை வழங்கியும் மோசடி செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-14)

## கடந்த ஆண்டை விடவும் அதிகரித்துள்ளது மீன்பிடி

### கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.மாவட்டத்தில் முதலாம் காலாண்டில், கடந்த ஆண்டை விட மீன்பிடியில் பத்து சத வீத அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் என்.கணேசமூர்த்தி. இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்:

"யாழ்.மாவட்டத்தில் மீன்பிடியில் இந்த ஆண்டு எமக்கு நல்லதொரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு யாழ். மாவட்ட மீனவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தனர். இந்த ஆண்டின் அவ்வாறான சம்பவங்கள் குறைவு. இந்திய மீனவர்களினது அத்துமீறல்களும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. இது மீனவர்களின் மீன்பிடியில் பல்வேறு வகையிலும் அதிகரிப்புக்கள் ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது.

“ இந்திய மீனவர்களினது அத்து மீறல்களும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. இது மீனவர்களின் மீன்பிடியில் பல்வேறு வகையிலும் அதிகரிப்புக்கள் ஏற்படுவதற்கு காரணமாகியுள்ளது.

இந்திய மீனவர்களின் வரத்துக் குறைந்துள்ளமையினால், யாழ்.மாவட்ட மீனவர்கள் பலர் தீவகப் பகுதிகளின் ஆழ் கடலுக்குச் சென்று மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

அதேவேளை, வடமராட்சி கிழக்கு கரையோரங்களிலும் மீன்பாடு வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது. அதனால் யாழ்.மாவட்ட மீனவர்களின் மீன்பிடி முதலாம் காலாண்டில் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பத்து சத வீதத்தால் அதிகரித்துள்ளது"- என்று அவர் குறிப்பிட்டார்.

(ற-5)

# கஷ்டப் பிரதேச சேவை ஜூன் முதல் கட்டாயம்

## தற்காலிக ஆசிரியர் இணைப்புக்களும் இரத்தாகும்; வட மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 03

கஷ்டப் பிரதேச சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் நிபந்தனை அடிப்படையில் கஷ்டப் பிரதேசங்களுக்குப் பணிக்கு அனுப்பப்படுவதுடன், அன்றைய தினத்திலிருந்து வழங்கப்பட்ட தற்காலிக ஆசிரியர் இணைப்புக்கள் யாவும் இரத்துச் செய்யப்படும் என்று தெரிவித்துள்ளார் வடக்குமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன்.

வடக்குமாகாணக் கல்வி அமைச்சில் நேற்று மாலை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

"வலயக்கல்விப் பணிப்பாளர்கள், மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகளுடன் வடக்கு மாகாண ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடல் நடத்தியுள்ளோம். ஒவ்வொரு வலயத்திலுமுள்ள கஷ்டப் பிரதேச சேவைக் காலத்தை பூர்த்தி செய்யாதவர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டியுள்ளோம்.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்தும் ஆசிரியர்கள் புதிதாக இந்த மாதம் எம்முடன் இணையவுள்ளனர். அவர்களும் இணைவதால் ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினை பெரிதும் தீர்க்கப்படும். எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல், கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றாத ஆசிரியர்கள் அங்கு அனுப்பப்படுவர். அங்கு நிபந்தனையுடனேயே அவர்கள் அனுப்பப்படுவார்கள்.

எதிர்காலங்களில் தற்காலிக இணைப்பில் ஆசிரியர்களை இடமாற்றம் வழங்குவது இடம்பெறாது. அத்துடன் அவ்வாறு வழங்கிய தற்காலிக இணைப்புக்களும் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதியுடன் இரத்துச் செய்யப்படும். ஆசிரியர் ஒருவர் அவ்வாறு தற்காலிக இடமாற்றம் கோர வேண்டிய நிலை ஏற்பட்டால், அவருக்கு நிரந்தர இடமாற்றம் நிபந்தனையுடன் வழங்கப்படும்.

மருத்துவக் காரணங்களுக்காகவே[illegible]ல்லது வேறு இன்னோரன்ன காரணங்களுக்காகவோ ஒருவர் நிரந்தர இடமாற்றம் பெற்று வந்தால், புதிய சேவை நிலையத்தில் ஆகக்கூடியது இரண்டு வருடங்கள் கடமையாற்றலாம். அதன் பின்னர் அவருக்கு வழங்கப்பட்ட சேவை நிலையத்தில் குறித்த இரண்டு வருடங்களும் அதனுடன் மேலதிகமாக ஒரு வருடமும் கடமையாற்ற வேண்டும்"- என்று தெரிவித்தார்.

(ற-5)

# நாட்டைப் பிரிக்க இடமளிக்கமுடியாது

## மேதின உரையில் திட்டவட்டமாகத் தெரிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, மே 3

தேசிய ஒருமைப்பாட்டை சவாலுக்குட்படுத்தவோ அல்லது நாட்டை பிளவு படுத்தவோ ஒரு போதும் இடமளிக்க முடியாது என திட்டவட்டமாக அறிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஐ.நாவின் ஓர் அமைப்பைத் தவிர அதன் கீழ் இயங்கும் ஏனைய அமைப்புகள் இலங்கையின் செயற்பாடுகள் குறித்து திருப்தி வெளியிட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை தடுத்துநிறுத்தியவர்கள், இன்னும்எதையெல்லாம்தடுக்கலாம் என் நினைத்து அதற்கான மு[illegible]ரில் ஈடுபடுகின்றனர் என்றும் சர்வதேச அழுத்தங்களுக்கு அடிபணிய தயாரில்லை என்றும் சூளுரைத்தார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மேதினக்கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை பொரளை கெம்பல் மை தானத்தில் நடைபெற்றது. இதன்போது மேதின உரையை ஆற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அதேவேளை, அரசிலிருப்பவர்கள்வரும் எதிரணியில் இணைய மாட்டார்கள் என்றும், அரசுக்குள்ளேயே சிறந்த எதிர்க்கட்சியொன்று இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

" தொழிலாளர்களுக்கு எமது அரசு உரிமைகளைப்பெற்றுக் கொடுத்துள்ளது. 6 லட்சத்திலிருந்த அரச சேவையை 14 லட்சம் வரை அதிகரித்துள்ளோம். அத்துடன், விடுமுறை உள்ளிட்ட வசதிகள் உலகில் வேறு எங்கும் இல்லாத அளவு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, சர்வதேசம் தலையிட்டு எமது நாட்டு தொழிலாளர்களுக்கு பெற்றுக்கொடுத்த உரிமைகள் என்ன? எதுவுமே இல்லை. இவை பற்றி பேசாது, மனித உரிமைகளைப் பற்றியே பேசுகின்றனர். தேவையற்ற அழுத்தங்களுக்கு நாம் ஒருபோதும் அடிபணியமாட்டோம் என்பதை திட்டவட்டமாக கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இளைஞர், யுவதிகளை பாதுகாக்கும் நோக்கில்தான் நாம் அன்று கொழும்பிலிருந்து கதிர்காமத்துக்கு பேரணிசென்றோம். ஆனால், அரசை விமர்சிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன்- அபிவிருத்திதிட்டங்களை முடக்கு வேண்டும் என்ற நோக்குடன் சிலர் செயற்படுகின்றனர். போராட்டங்களை நடத்துகின்றனர். இவற்றுக்கான சுதந்திரத்தை எமது அரசு வழங்கியுள்ளது. அரசுக்கு எதிராக சேறுபூசுவதற்குகூட எதிரணிக்கு சுதந்திரம் இருக்கின்றது.

எதிர்க்கட்சிகள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை. அரசு மீதே அவர்கள் நம்பிக்கை வைத்துள்ளனர் என்பதை இந்த மேதினக் கூட்டம் உணர்த்துகின்றது. அரசுக்குள்தான் இன்று சிறந்த எதிர்க்கட்சியொன்று இருக்கின்றது. அரசு முன்னெடுக்கும் திட்டங்களிலுள்ள குறைபாடுகளை அமைச்சர்கள் துணிகரமாக சுட்டிக்காட்டுகின்றனர். இதையிட்டு பெருமைப்படுகின்றோம்.

ஆகவே, அடுத்த மே தினத்துக்கு முன்னர் நாட்டில் பல மாற்றங்களைச் செய்து, அபிவிருத்தியை நோக்கி மேலும் நகர்ந்துச்செல்வோம். எத்தகையை சவால்கள் வந்தாலும் அவற்றுக்குத் துணிகரமாக முகம்கொடுப்போம்.

இந்த நாட்டை பிளவுப்படுத்த நாமிருக்கும்வரை இடமளிக்க மாட்டோம். தேசிய ஒருமைப்பாட்டையும் எவராலும் சவாலுக்குட்படுத்த முடியாது. எமது செயற்பாடுகள் பற்றி ஐ.நாவின் ஒரு அமைப்பைத்தவிர அதன் கீழ் இயங்கும் ஏனைய அமைப்புகள் சாதகமான பிரதிபலிப்பை வெளியிட்டுள்ளன. தாய்நாட்டையும், பெற்றெடுத்த சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்கு அனைவரும் எம்முடன் ஓரணியில் திரளவேண்டும்" என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

(ற)

# உதயனில் நேற்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில்...



உதயன் சிரேஷ்ட ஆசிரியர் எஸ்.பெருமாள் ஈகச்சுடர் ஏற்றியபோது...



வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன்
மலர் அஞ்சலி செத்தியபோது...



வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட்
மலர் அஞ்சலி செலுத்தியபோது...



வலி.வடக்கு பிரதேசசபை தவிசாளர் சோ.சுகிர்தன்
மலர் அஞ்சலி செலுத்தியபோது...



நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர்
மலர் அஞ்சலி செலுத்தியபோது...



பிரமுகர்கள் , உதயன் ஊழியர்கள் அஞ்சலியில்
பங்குகொண்டபோது..



உதயன் இணைய த்தள ஆசிரியர் எஸ்.அனுராஜ்
மலர் அஞ்சலி செலுத்தியபோது...



உதயன் பொதுசனத் தொடர்பு முகாமையாளர்
திருமதி என்.தங்கராஜா மலர் அஞ்சலி செலுத்தியபோது...

கடந்த 2006ஆம் ஆண்டு மே 2ஆம் திகதி உதயன் வளாகத்தினுள் அத்துமீறி துப்பாக்கிகளுடன் புகுந்த நபர்களால் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்ட உதயன் பணியாளர்களான ஜே.ஜோர்ஜ் சகாயதாஸ், எஸ்.ரஞ்சித்குமாரின் 8ஆவது நினைவுதினம் நேற்று உதயன் வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், இ.ஆனல்ட், வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர் பொ.கனகசபாபதி மற்றும் உதயன் பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (வ-20-21)

# தீவக மற்றும் வன்னி வலய ஆசிரியர்கள் கவனவீர்ப்பு

## இழுத்தடிக்கப்படும் இடமாற்றத்தை விரைவாக வழங்குமாறு வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 3
இடமாற்றங்களால் பாதிக்கப்பட்ட தீவக மற்றும் வன்னி வலய பாடசாலை ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட் டில் எதிர்வரும் 5ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

இது குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளதாவது:-

2007/20 தேசிய இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக வடமாகாண இடமாற்றச் சபையால் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இடமாற்றத்துக்கான தகுதிகளைப் பெற்று அங்கீகரிக்கப்பட்ட தீவகக் கல்வி வலய மற்றும் வன்னிப் பிராந்திய வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படாது. இழுத்தடிக்கப்பட்டு வருகிறது. எனவே குறித்த இடமாற்றத்தை விரைவாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி பாதிக்கப்பட்ட ஆசிரியர்களால் கவனவீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் வடமாகாண கல்வி அமைச்சின் அலுவலகம் முன்பாக இடமாற்றம் வழங்கக் கோரி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர். இதன்போது இவ்வருட இரண்டாம் தவணை ஆரம்பத்தில் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# கலாசார மண்டபங்களை பாதுகாப்பது மக்களின் கடமை

## கலாசார அலுவல்கள் அமைச்சர் தெரிவிப்பு

வலி. வடக்கு, மே 3

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கலை, கலாசாரங்கள் நல்ல முறையில் பேணப்பட வேண்டும், வளர்க்கப்பட வேண்டும் என்பதன் அடிப்படையிலே பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் கலை, கலாசார அமைச்சால் இத்தகைய கலாசார மண்டபங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனை நல்ல முறையில் பேணிப் பாதுகாப்பதும் பயன்படுத்துவதும் மக்களுடைய கடமையும் பொறுப்பும் ஆகும். மேற் கண்டவாறு தெரிவித்தார் கலை, கலாசார அலுவல் கள் அமைச்சர் ரி.வி.ஏக்க நாயக்கா.

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கலாசார மண்டபத்தை அமைச்சர் செவ்வாய்க் கிழமை பிற்பகல் திறந்து வைத்து தொடர்ந்து உரையாற்றும் போது;

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் திறந்து வைக்கப்பட்டுள்ள இம்மண்டபம் கலாசார மண்டபங்கள் வரிசையில் 172 ஆவது ஆகும். உடுவிலில் கலாசார மண்டபம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த கலாசார நிலையத்தை கட்டுவதற்கு காணியை வழங்கியவரையும் ஏனைய உதவி புரிந்தவர்களையும் பாராட்டுகின்றேன். தமிழ், சிங்கள, இந்து கிறிஸ்தவம், பௌத்தம் என்று வேறுபாடுகள் எதுவும் இன்றி தமது கலாசார நிகழ்வுகளை இந்த மேடையில் மேடையேற்ற முடியும்.

இங்கு மாணவர்களுக்கான நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. நூலகத்துக்கான நூல்களும் வழங்கப்பட்டுள்ளன. இந்த நூல்கள் நீண்ட காலத்துக்கு இங்கு இருக்கும் என்பது அல்ல. இது ஒரு சுழற்சி முறையில் ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருக்கும் நூல்கள் இங்கு கொண்டுவரப்படும்.

வெறுமனே இதனை வைத்திருக்காது தொடர்ச்சியான பயன்பாட்டில் இதனை வைத்திருக்க வேண்டும். கலாசார மண்டபத்தில் முன்பள்ளிகளை நடத்தலாம் மற்றும் மனைப் பொருளாதார அபிவிருத்திக்கான தொழில்முயற்சிகளை நடத்தலாம், பயிற்சிகளை நடத்தலாம். இந்தக் கட்டடம் நல்ல பயன்பாடு உடையதாக அமைய வேண்டும். இன்னும் சில காலத்தின் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பு அற்ற நிலையில் பற்றைகள் வளர்ந்து உட்செல்ல முடியாத நிலைமை காணப்படக் கூடாது - என்றார் அமைச்சர். (வ-86)

# இத்தாலியில் புத்தரின் பெயரில் மதுபானக் கடை

## இலங்கையர்கள் எதிர்ப்பு

இத்தாலியில் இயங்கி வரும் மதுபானக் கடையொன்றுக்கு அந்தநாட்டில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். கௌதம புத்தரை இழிவுபடுத்தும் வகையில் இந்த மதுபானக் கடைக்கு பெயரிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த கடைக்கு 'புத்தா பார்' என்று பெயரிடப்பட்டுள்ளது. கடையின் பெயர்ப்பலகையில் புத்தா என்று எழுதப்பட்டுள்ளதுடன், புத்தரின் உருவமும் பொறிக்கப்பட்டு உள்ளதாக இத்தாலி வாழ் இலங்கை யர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். அண்மையில் இந்த புதிய மதுபானக் கடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மதுபானக் கடைக்குச் செல்ல வேண்டாம் என்று இத்தாலி வாழ் இலங்கையர்கள் கோரியுள்ளனர்.

இத்தாலியின் பார்மாவின் சாலா பகான்ஸா என்னும் இடத்தில் குறித்த மதுபானக் கடை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மதுபானக் கடைக்கு எதிர்ப்பை வெளியிடுமாறு இத்தாலி வாழ் இலங்கையர்கள் அந்தநாட்டுக்கான இலங்கைத் தூதரகத்திடம் கோரியுள்ளனர். (வ)

# கோரக்கன்கட்டு கிராமத்தின் அபிவிருத்திகள் புறக்கணிப்பு

## அந்தப் பகுதி மக்கள் விசனம்

கிளிநொச்சி, மே 3

கிளிநொச்சி, கோரக்கன்கட்டு கிராமத்தின் அபிவிருத்தி புறக்கணிக்கப்பட்டு வருவதாக அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கோரக்கன் கட்டு கிராமத்தில் தற்போது 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

> "கடந்த 2010 ஆம் ஆண்டி லிருந்து இன்று வரையும் வீட்டுத் திட்ட வசதிகள் இன்றியும் மின்சார வசதிகள் இன்றியும் ஏனைய அடிப்படை வசதிகள் இன்றியும் இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்

இந்தநிலையில் குறித்த கிராமத்துக்கான ஒரே ஒரு பிரதான வீதி இன்று வரை புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் குறித்த வீதியூடாகப் பயணிப்பதில் அந்தப்பகுதி பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

அத்துடன் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையும் வீட்டுத்திட்ட வசதிகள் இன்றியும் மின்சாரவசதிகள் இன்றியும் ஏனைய அடிப்படை வசதிகள் இன்றியும் இப்பகுதி மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் தொழில் வாய்ப்புக்கள் இன்றியும் வாழ்வாதார வசதிகள் இன்றியும் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு அடிப்படை வசதி கள் இன்றியும் அபிவிருத்திப் பணிகள் புறக்கணிக்கப்பட்ட நிலையிலும் காணப்படும் குறித்த கிராமத்தின் தேவைகளை பூர்த்திசெய்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-55)

# தேவையான விதை நெல்லை சுத்திகரித்து கரைச்சி வடக்கு விவசாயிகள் பயனடைக

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மே 3

கரைச்சி வடக்கு விவசாயிகள் தமக்குத் தேவையான தரமான விதை நெல்லை சுத்திகரித்து அதன்மூலம் குறித்த பகுதி விவசாயிகள் நல்ல பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முரசுமோட்டையில் கரைச்சி வடக்கு விவசாயிகள் தனியார் நிறுவனத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நெல் சுத்திகரிப்பு நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

விவசாயத்தில் முன்னேற்றமடைவதற்கு அது சார்ந்த தொழில்நுட்ப முறைகளைக் கற்றுக்கொள்ளவேண்டும். இவ்வாறு நவீன தொழில்நுட்ப முறையைக் கற்றுக் கொண்டு அதன்மூலம் விவசாயத்தில் ஈடுபடுவதன்மூலம் அதிக இலாபத்தை அடைய முடியும். இந்த விவசாயிகள் தனியார் நிறுவனத்தின் மூலம் குறித்த பகுதியையும் அந்தப்பகுதியைச் சார்ந்து வாழும் விவசாயிகளும் பெரி தும் நன்மையடைவார்கள் என்று நான் நம்புகின்றேன். இந்தப் பிரதேசத்துக்குத் தேவையான தரமான விதை நெல்லை சுத்தப்படுத்திப் பெற்றுக் கொள்ள இது பெரிதும் உதவியாக இருக்கும். அதே நேரம் குறித்த பிரதேசத்தில் குறைந்தது இரண்டு பேருக்கு வேலை வாய்ப்பையும் வழங் கும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கரைச்சி வடக்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் பொது முகாமையாளர் எஸ். சுதர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர், கமநல உதவி அபிவிருத்தி ஆணையாளர், விதைஆராய்ச்சி நிலையப் பணிப்பாளர், விவசாயத் திணைக்களத்தினர், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ-55)

# இலங்கை அகதிகள் மூவருக்கு தமிழகத்தில் ஆயுள்கால சிறை

திருச்சி, மே 3

வாழவந்தான்கோட்டை இலங்கை அகதிகள் முகாமில் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்திக் கொன்ற வழக்கில், மூன்று இலங்கையர்களுக்கு ஆயுள்கால சிறைத் தண்டனை விதித்து திருச்சி நீதிமன்றம் புதன் கிழமை தீர்ப்பு வழங்கியுள்ளது.



கோப்புப்படம்

வாழவந்தான்கோட்டை இலங்கை அகதிகள் முகா மைச் சேர்ந்த சகாயசீலன் (வயது 38) என்ற இளை ஞன், கடந்த 2009 ஒக் டோபர் 5ஆம் திகதி கத்தியால் குத்திக் கொல்லப்பட்டார். பொலிஸார் நடத்திய விசாரணையில், கொட்டப்பட்டிலுள்ள இலங்கை அகதிகள் முகாமில் தங்கியிருந்த ராஜ கோபால் (வயது-52). இவரது மகன்கள் ரகுநேசன் (வயது-23) மற்றும் ஜெயரூபன் (வயது-24) ஆகிய மூவ ரும் அவரைக் கொன்றது தெரியவந்துள்ளது.

கொட்டப்பட்டு முகாமில் இருக்கும் அவர்களுக்குள் ஏற்பட்ட பிரச்சினை மற்றும் முன்விரோதமே இந்தப் படு கொலைக்கு காரணமானது என பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் பொலிஸார் பதிவு செய்த வழக்கை விசாரித்த நீதிப்தி பூர்ணிமா, சந் தேக நபர்களான ராஜகோபால், ரகுநேசன், ஜெயரூபன் ஆகிய மூவருக்கும் ஆயுட் கால சிறைத் தண்டனை விதித்து புதன்கிழமை தீர்ப்பு வழ்ங்கியுள்ளார். (வ).


## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் சிறீதரன்



மாலிசந்தை, துன்னாலை தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Goslar ஐ வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிறீதரன் (22. 04.2014) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் சிற்றம்பலம் - காலஞ்சென்ற பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், கந்தர் - பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், சஞ்சயன், நவீதா ஆகியோரின் அன்புத் தந்தையும், கெங்காதரன் (கனடா), விஜயகுமார் (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவகுமார் மற்றும் நாகேந்திரன், பிரபாகரன், நந்தகுமார் (கனடா), கிருபாகரன், யாதவகுமார் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஜேர்மனியில் இடம் பெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாலி சந்தை,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி. (e/14156)

தகவல்:
சிற்றம்பலம் (தந்தை)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை வனன் புரத்தில் 1½ பரப்பு காணியுடனான சகல வசதிகளுடன் வீடு (3 அறைகள்) விற்பனைக் குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி இல. 0776156236

## காணி விற்பனைக்கு

பண்டியன்தாழ்வு சந்தனமாதா கோவில் அருகில் 2 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய
தொலைபேசி இல. 0777719392

## மரண அறிவித்தல்

### சிவஸ்ரீ சிங்காரவேல் ஸ்ரீ தாயாளக் குருக்கள் (கண்ணன் ஐயா)



(நல்லூர் செல்லப்பிள்ளையார் ஆலய பிரதம குருக்கள்)

கலட்டி, 12, சீனியர் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சிங்காரவேல் ஸ்ரீ தயாளக் குருக்கள் (கண்ணன் ஐயா) நேற்று (02.05.2014) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி துரையப்பாஐயர் அவர்களின் மூத்த பேரனும், சிங்காரவேல், காலஞ்சென்ற கோமலாம்பிகையின் மூத்த மகனும், காலஞ்சென்ற கணேஷஐயா - சாரசாம்பாள் தம்பதியரின் மருமகனும், தெய்வநாயகி (தங்கா) அன்புக் கணவரும், வைஷ்ணவி, சங்கவி ஆகியோரின் அன்புத் தந்தையும், குகநேசனின் சிறிய தகப்பனாரும், சிவதர்சினியின் அன்பு மாமனும், தயாநிதி, வளர்மதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் (முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர்) மற்றும் மகாதேவன் (P.H.I), சிவபாலன், சுரேந்திரன் (முன்னாள் உயர் நீதிமன்ற பதிவாளர், யாழ்ப்பாணம்), விவேகானந்தக் குருக்கள் ஆகியோரின் அன்பு மருமகனும், குகமூர்த்தி லலிதாம்பிகை அவர்களின் பெறாமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12, சீனியர் ஒழுங்கை,
கலட்டி, வண்ணார்பண்ணை. (47620)

தகவல்:
குடும்பத்தினர்

# யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

## கடமையில் இருந்த பிரதம பாதுகாப்பு அதிகாரி பல்கலை மாணவனால் தாக்கப்பட்டமையை கண்டித்து



ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பல்கலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்...

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த புதன்கிழமை கடமையில் இருந்தவேளை பிரதம பாதுகாப்பு அதிகாரி பல்கலைக்கழக மாணவன் ஒருவரால் தாக்கப்பட்டதை அடுத்து நேற்று பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

கடந்த புதன்கிழமை பல்கலைக்கழக மாணவி ஒருவர் பூட்டப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றைத் திறப்பதற்காக பல்கலைக்கழக கலைப்பீட நான்காம் வருட மாணவர்களை அழைத்து வந்து பூட்டப்பட்ட பூட்டை உடைப்பதற்கு முற்பட்ட வேளை அங்கு கடமையில் இருந்த பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் என்ன விடயம் 'ரோக்கன்' உள்ளதா என்று கேட்கவே மாணவர்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும் இடையில் தர்க்கம் ஏற்பட்டது இதன் போது எதிர்பாராத விதத்தில் மாணவரொருவரால் பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டார். இதனைப் பல்கலைக்கழக பதிவாளரும் பார்த்துக் கொண்டு நின்றதாக பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் இடம்பெற்று இரண்டு தினங்களாகியும் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் சம்பவம் குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டி பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்ட பாதுகாப்பு உத்தி யோகத்தர்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான நுழைவாயில் தவிர்ந்த அனைத்து நுழைவாயில்களையும் அடைத்தும் மாணவர்களின் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றுக்கு எந்தவிதமான ரோக்கன்களும் வழங்காமலும் போராட்டத்தைமேற்கொண்டனர்.

போராட்டத்தைத் தொடர்ந்து முற்பகல் 11 மணியளவில் பல்கலைக்கழக நிர்வாகத்தினர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அழைத்துப் பேச்சு நடத்தினர் இதன்போது பாதுகாப்பு உத்தியோகத்தரைத் தாக்கியதாக கூறப்படும் குறித்த மாணவன் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக நிர்வாகத்தினரால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு உறுதிமொழி வழங் கப்பட்டது அதனை அடுத்து பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். அதன் பின்னர் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பின. (வ-21)

# தமிழ்ப் பொலிஸாரை நியமித்தது மக்களின் இலகுவான சேவைக்கே

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மே 3

தமிழ்ப் பொலிஸாரை கடமைக்கு நியமித்தது தமிழ் மக்களுக்கு இலகுவான சேவையை வழங்க வேண்டும் என்பதற்காகவே. தனிப்பட்ட ரீதியில் அவர்களால் எந்தச் செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாது என்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலரத்ன தெரிவித்தார். குடாநாட்டில் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பொலிஸார் தனிப் பட்ட ரீதியில் கடமைக்கு அப்பால் பழி வாங்கும் செயல் களில் பொலிஸார் என்ற துணி வில் ஈடுபடுவது தொடர்பாக வாராந்த செய்தியாளர் சந்திப்பில் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் நிலையங்களில் தமிழ்ப் பொலிஸாரை கடமைக்கு நியமித்தது தமிழ் மக்களுக்கான சேவையை இலகுபடுத்தவே. கடமைக்கு அப்பால் அவர்கள் தனிப்பட்ட ரீதியில் எதுவும் செய்ய முடியாது. அவ்வாறான சம்ப வங்கள் குறித்து தெரிய வந்தால் உடனடியாக எமக்கு தெரியப் படுத்தினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)



முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் சந்தை நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்கின்றனர்.

# குற்றச்செயல்கள் தொடர்பாக 166 பேர் கடந்த வாரம் கைது

## யாழ்ப்பாணம், காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில்

யாழ்ப்பாணம்.மே 3

யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவுகளில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 166 பேர் கடந்த வாரம் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று யாழ். பொலிஸ் நிலையத்தில் இடம் பெற்ற போது இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த வாரம் 87 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெண்ணுடன் அங்க சேட்டையில் ஈடுபட்ட ஒருவரும், மதுபோதையில் வாகனம் செலுத்திய 7 பேரும் பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட ஒருவரும் சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த 12 பேரும், அடித்துக்காயப் படுத்திய குற்றத்துக்காக 28 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12 பேரும், வீதி விபத்துக்கள் ஏற்படுத்தக் காரணமாகவிருந்த 3 பேரும், பொருள்களுக்கு சேதம் விளைவித்த ஒருவரும், மது போதையில் கலகம் விளைவித்த 4 பேரும், களவு தொடர்பாக 3 பேரும், சந்தேக நபர்கள் 15 பேரும் என 87 பேர் கைது செய் யப் பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்டபட்ட பகுதிகளில் கடந்த வாரம் 79 பேர் கது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பாரிய குற்றங்களுக்காக 6 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 12 பேரும், சந்தேக நபர்கள் 13 பேரும், மது போதையில் வாகனம் செலுத்திய 20 பேரும், வெவ்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 28 பேரும் என 79 பேர் கைது செய்யப்படடுள் ளனர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்கள் விளக்கமறியலில் வைத்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தனர். (வ-14-86)

# கொக்குவிலில் நேற்று புதிய சந்தை திறப்பு

யாழ்ப்பாணம், மே 3

நல்லூர் பிரதேச சபையால் கொக்குவிலில் அமைக்கப்பட்ட புதிய சந்தைக் கட்டடம் நேற்றுக் காலை மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

சபையின் 19.5 மில்லியன் ரூபா நிதியில் அமைக்கப்பட்ட இந்தப் புதிய கட்டடத்தின் திறப்பு விழா, நல்லூர் பிரதேச சபை தலைவர் ப.வசந்த குமார் தலைமையில் நடை பெற்றது. பிரதம விருந்தினர்களாக வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொண்டு புதிய கட்டடத்தைத் திறந்து வைத்தனர்.

விருந்தினர்கள் அருகிலுள்ள மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசைகளில் கலந்து கொண்டு மங்கல வாத்திய இசையுடன் ஊர்வலமாக சந்தைப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சந்தையின் பெயர்ப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனும், நினைவுப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் திரைநீக்கம் செய்து வைக்க புதிய கட்டடத்தை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தனர்.

கட்டடத்தைப் பார்வையிட்ட பின்னர் முதல்வர் விக்னேஸ்வரனும் மாவை சேனாதிராசாவும் வியாபாரிகளிடம் மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்தனர்.

அதையடுத்து மங்கல விளக்கேற்றி கூட்டத்தை முதல்வர் ஆரம்பித்து வைத்தார். பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர் மேரி சாந்தசீலன், நல்லூர் ப.நோ.கூ. சங்கத் தலைவர் பொ. கனகசபாபதி, வடக்கு உள்ளூ ராட்சி ஆணையாளர் எஸ்.ஜெகூ, வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், நல்லூர் பிரதேச சபை உப தலைவர் திருமதி கோமதி ரவீந்திரன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்களான அனந்தி சசிதரன், பா.கஜதீபன், இ.ஆனல்ட் ஆகியோர்உரையாற்றினர்.(ஒ-7)

# உள்ளூராட்சி சபைகளின் வருமானம் மக்களுக்குப் பயன்பட வேண்டும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 3

பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி சபைகள் தமக்குக் கிடைக்கும் வருமானங்களை மக்களுக்குப் பயன்படும் வகையில் செலவழிப்பதற்கு முன்வரவேண்டும். அந்த வகையில் நல்லூர் பிரதேச சபை முன்மாதிரியாகச் செயற்படுகின்றமை மகிழ்ச்சி தருகின்றது. இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

கொக்குவில் புதிய சந்தைக் கட்டடத் தொகுதியின் திறப்பு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்றைய தினம் காலை நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்:

இராணுவத்தினரால் பலாலியில் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்பட்ட மரக்கறிகளை திருநெல்வேலி சந்தையில் விற்பனைக்கு விடக் கூடாது என இராணுவத் தளபதி ஆணை யிட்டதால் உள்ளூர் மக்களின் மரக்கறி வகைகள் ஓரளவு நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இதனை நிரந்தரமானதாக நாம் கருத முடியாது. இதனால்தான் மேதினக் கூட்டத்தில் படையினர் வெளியேற வேண்டிய அவசியம் தொடர்பாகத் தெரிவிக்க வேண்டி நேரிட்டது எனவும் அவர் அங்கு குறிப்பிட்டார். (க-7)

# சிறுமியை கடத்தி துஷ்பிரயோகம்

## இளைஞன் கைது

பதினைந்து வயதுச் சிறுமியொருவரைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்த இளைஞரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அராலி மேற்குப் பகுதியில் கடந்த 30 ஆம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த இளைஞரொருவர் அராலி மேற்கு பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய சிறுமியை கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார். சந்தேக நபரான இளைஞன் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளதாக என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர். (வ-14)

# பிரியங்கா காந்தியால் அமேதியில் பரபரப்பு

அமேதி,மே 3

பிரியங்கா அமேதி தொகுதியில் மக்களைச் சந்தித்து பேசப் பாதுகாப்பு வளையத்தை மீறி ஓடியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி நடைபெறும் மக்களவைத் தொகுதியில் உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள அமேதி தொகுதியில் போட்டியிடுகிறார்.

இந்நிலையில், அவருக்கு ஆதரவாக ராகுலின் சகோதரி பிரியங்கா அத்தொகுதி முழுவதும் மக்களைச் சந்தித்து வாக்குச் சேகரித்து வருகிறார். டிலோய் என்ற கிராமத்திற்கு வாக்குச் சேகரிக்கச் சென்ற பிரியங்காவைப் பார்க்க வெயிலையும் பொருட்படுத்தாமல் ஏராளமான மக்கள் நீண்ட நேரமாக காத்திருந்துள்ளனர்.



அவர்களைப் பார்த்ததில் உற்சாகமடைந்த பிரியங்கா, பாதுகாப்பு வளையத்தை மீறி மக்களைச் சந்திக்க ஓடிச் சென்றுள்ளார்.

இதனைக் கண்ட சிறப்புப் பாதுகாப்புப் படை அதிகாரிகள் அவரைத் தொடர்ந்து ஓடிச் சென்று அரண் போல் சூழ்ந்துகொண்டு பாதுகாத்துள்ளனர். இதனால், அங்கு சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டுள் ளது.

மேலும், பாதுகாப்பு வளையத்தைப் பிரியங்கா மீறிய செயல் காங்கிரஸாரிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. (கு)

# அடுத்தடுத்து வெடிகுண்டு புரளி சென்னை பொலிஸ் எச்சரிக்கை

சென்னை,மே 3

வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என மாநகர பொலிஸ் ஆணையர் திரிபாதி தெரிவித்தார். சென்னை ராயப்பேட்டையில் உள்ள ஒரு தனியார் வணிக வளாகத்துக்கு நேற்றுக் காலை வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

தகவல் அறிந்தவுடன் வணிக வளாகத்தில் பொலிஸார் குவிந்தனர். உடனடியாக வணிக வளாகத்தில் இருந்து பொது மக்களும், ஊழியர்களும் வெளியேற்றப்பட்டனர்.

வெடிகுண்டு நிபுணர்கள் தீவிர சோதனை மேற்கொண்டனர். வணிக வளாகம் முழுவதும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் வெடிகுண்டு ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இதேபோல் கல்வி நிலையம் ஒன்றிலும், புறநகர் ரயில் நிலையத்துக்கும் வெடி குண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. இவற்றையும் புரளி என பொலிஸ் தரப்பு தெரிவித்தது. இந்த வெடிகுண்டு மிரட்டல்கள் வெறும் புரளி என மாநகர பொலிஸ் ஆணையர் திரிபாதி தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில்; இது போன்ற வதந்திகளை பரப்புவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். வணிக வளாகத்தில் வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் விடுத்த நபரை பொலிஸார் தேடி வருகின்றனர் என்றார்.

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் கவுகாத்தி எக்ஸ்பிரஸ் ரயிலில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஒரு பெண் பலியானார். 14 பேர் காயமடைந்தனர். (கு)



மேற்குவங்கத்தில் வாக்களிப்பதற்காக நீண்ட வரிசையில் காத்து நிற்கும் பெண்கள்.(கு)

# திருப்பதிக்குப் பாதுகாப்பு

சென்னை,மே 3

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை குண்டு வெடித்த சம்பவத்தையடுத்து திருப்பதி கோயிலில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு, பஸ், ரயில் நிலையங்களில் தீவிர சோதனை செய்யப்பட்டது.

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் துணை இராணுவம், ஆக்டோபஸ் கமாண்டோக்கள், ஆயுதப்படை பொலிஸார், தேவஸ்தான கண்காணிப்பு படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

பக்தர்கள் தங்கும் விடுதி, அன்னதான சத்திரங்கள், தலைமுடிக் காணிக்கை செலுத்துமிடம் ஆகிய இடங்களில் தீவிர சோதனை நடத்தப்பட்டது.

24 மணிநேரமும் துணை இராணுவத்தினர் ரோந்து பணியில் ஈடுபட்டுள்ளனர். திருப்பதி மலை அடிவாரத்தில் அனைத்து வாகனங்களும் தீவிர சோதனை செய்த பின்னரே மலைக்கு அனுமதிக்கப்பட்டன.

இதேபோன்று, திருச்சானூர் பத்மாவதி தாயார் கோயிலில், காணிப்பாக்கம் விநாயகர் கோயிலிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. (கு)

# அசாமில் தீவிரவாதிகள் நேற்றுத் திடீர் தாக்குதல்

## இரு இடங்களில் 11 பேர் சாவு

அசாம்,மே 3

அசாம் மாநிலத்தில் நேற்று அதிகாலை போடோ தீவிரவாதிகள் நடத்திய இரு வேறு தாக்குதல்களில் மொத்தம் 11 பேர் உயிரிழந்தனர்.

தடை செய்யப்பட்ட போடோ லேண்ட் தேசிய ஜனநாயக முற்போக்கு அமைப்பைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் இரண்டு கிராமங்களில் தாக்குதல் நடத்தினர்.

முதலில் போடோலேண்ட் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நடத்திய தாக்குதலில் 2 பெண்கள் உட்பட 4 பேர் உயிரிழந்தனர். இத்தகவலை அசாம் மாநிலம் பொலிஸ் அதிகாரி ஏ.பி.ரவுத் உறுதிசெய்துள்ளார்.

பின்னர் கோக்ரஜார் மாவட்டத்தின் பாலபராஜன் கிராமத்தில் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் போடோ தீவிரவாதிகள் ஒரு வீட்டினுள் புகுந்தனர்.

வீட்டில் இருந்தவர்கள் மீது சரமாரியாகச் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 7 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 2 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இறந்தவர்களில் 3 வயது குழந்தையும் அடங்கும். சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த 4 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 7 பேர் கொல்லப்பட்டதாக பொலிஸ் அதிகாரி எல். ஆர்.பிஷ்னோய் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து அப்பகுதியில் போடோ தீவிரவாதிகளைத் தேடும் வேட்டையில் பொலிஸாரும் துணை இராணுவப் படையினரும் கூட்டாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 2 ஆண்டுகளாகவே கோக்ரஜார் மாவட்டத்தில் போடோ மற்றும் பிற இனத்தினர் இடையே இனவெறி மோதல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது. (கு)

# நரேந்திர மோடியைப் போன்று உண்மையை மறைக்கவில்லை

*திக்விஜய்சிங் பேச்சு*

புதுடில்லி,மே 3

சொந்த வாழ்க்கையில் தான் மிகவும் தெளிவாக இருப்பதாகவும், மோடியை போல தெளிவற்று உண்மையை மறைக்கவில்லை என்றும் திக்விஜய் சிங் கூறினார்.

இது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் திக்விஜய் சிங்கிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அவர் கூறுகையில்; நான் எனது சொந்த வாழ்க்கையை மறைக்கவில்லை, மோடி தான் அவரது சொந்த வாழ்க்கையை 30 ஆண்டுகாலமாக மறைத்து அரசியல் செய்துள்ளார். (கு)

# மோடி மீதான வழக்கு விசாரணை ஆரம்பம்

அகமதாபாத்,மே 3

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தை மீறியதாக பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி மீது பதிவு செய்யப்பட்ட வழக்கில் அகமதாபாத் குற்றப்பிரிவு பொலிஸார் கடந்த வியாழக்கிழமை விசாரணையைத் தொடங்கினர்.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்பேரில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 126(1)(ஏ)ன் கீழ் மோடி மீது புதன்கிழமை வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வாக்குச் சாவடியிலிருந்து 100 மீற்றர் தொலைவுக்குள் நிருபர் கூட்டம் நடத்துவதை இந்தப் பிரிவு தடை செய்கிறது.

அகமதாபாத்தில் உள்ள ராணிப் பகுதி பள்ளிக்கூடத்தில் கடந்த புதன்கிழமை வாக்களித்த பிறகு நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார் மோடி. அப்போது அவர் கட்சியின் தாமரை சின்னத்தைக் காட்டினார்.

அரசு சார்பில் மோடி மீது புகார் செய்தவர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஹர்பால் ரதோட். இந்த குற்றச்செயல் பொலிஸ் விசாரணை வரம்பில் வருகிறது.

மோடி கலந்துகொண்ட நிருபர் கூட்டச் செய்திகளை வெளியிட்டதற்காக தொலைக்காட்சிகள் மீதும் மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் பிரிவு 126(1)(பி) கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. தொலைக்காட்சிகள் மீதான வழக்கை பொலிஸ் விசாரிக்க முடியாது. எனவே நீதிமன்றத்தை அணுகி அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என குற்றப்பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கு)

# ஜெயலலிதா வழக்கில் ரகுமான் வாக்குமூலம்

சென்னை,மே 3

ஜெயலலிதா மீதான சொத்துக்குவிப்பு வழக்கில், சுதாகரன் திருமணத்துக்கு பணம் வாங்காமல் இசை நிகழ்ச்சி நடத்திக் கொடுத்ததாக இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா, வளர்ப்பு மகன் சுதாகரன் மற்றும் இளவரசி ஆகியோர் மீதான சொத்துக்குவிப்பு வழக்கின் விசாரணை பெங்களூர் சிறப்பு நீதிமன்[illegible] கடந்த புதன்கிழமை [illegible]ணக்கு வந்துள்ளது.

அப்போது வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நால்வரும் முன்னிலையாகவில்லை.

இந்நிலையில், தனது இறுதி வாதத்தை தொடர்ந்த அரசு வழக்கறிஞர் பவானி சிங், சென்னையைச் சேர்ந்த வருமான வரி இணை ஆணையர்கள் சீனிவாசன், சுப்பாராவ், சீதாராமன் ஆகியோர் அளித்த 76 பக்க வாக்குமூலத்தை வாசித்துள்ளார்.

அந்த வாக்குமூலத்தில் 1995ஆம் ஆண்டு நடைபெற்ற ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் சுதாகரனின் திருமணத்தில் இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான் இசை நிகழ்ச்சி நடத்தியதைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

> “சுதாகரனின் மனைவி நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் குடும்பத்தைச் சேர்ந்தவர். மேலும்,தமிழ் திரையுலகில் மிக மூத்த கலைஞரின் குடும்ப விழா என்பதால், பணம் வாங்காமல் இசை நிகழ்ச்சி நடத்திக் கொடுத்தேன்.

இது தொடர்பாக ஏ.ஆர்.ரகுமான் அளித்த வாக்குமூலத்தை அவர் வாசித்தார். அதில், சுதாகரனின் மனைவி நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

மேலும்,தமிழ் திரையுலகில் மிக மூத்த கலைஞரின் குடும்ப விழா என்பதால், பணம் வாங்காமல் இசை நிகழ்ச்சி நடத்திக் கொடுத்தேன்.

இதற்காக ஜெயலலிதாவின் வீட்டிலிருந்து வெள்ளி தாம்பாளம், வெள்ளிக் கிண்ணம், குங்குமச் சிமிழ் உள்ளிட்ட சில வெள்ளிப் பொருள்களை எனக்குப் பரிசாக வழங்கினர் எனக் கூறியுள்ளார். (கு)

# கடவுளை உதவிக்கு கூப்பிடும் சோனியா

## நரேந்திர மோடி கிண்டல்

புதுடில்லி,மே 3

உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கலிலாபாத்தில் பேசிய மோடி, கடவுளைக் கூப்பிடும் அளவுக்குச் சோனியா நெருக்கடியில் உள்ளார் என்று கூறியுள்ளார்.

காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சோனியா காந்தி, மோடி பிரதமரானால் நாட்டை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று பேசியுள்ளார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய பா.ஜ.க. பிரதம வேட்பாளர் மோடி, கடந்த 20 முதல் 25 ஆண்டுகளாக சோனியா கடவுளைப் பற்றி பேசியதாக கேள்விப்படவில்லை.

ஆனால், இப்போது கடவுளைப் பற்றி சோனியா பேசி வருகிறார். இதில் இருந்தே காங்கிரஸ் கட்சி எவ்வளவு பெரிய நெருக்கடியில் இருக்கிறது என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளுங்கள் என்று கூறியுள்ளார். (கு)

## சிரிய பாடசாலை மீது குண்டு தாக்குதல்

அலேப்போ,மே 3
சிரியாவின் அலேப்போ நகரிலுள்ள பாடசாலையொன்றின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு ஐக்கிய நாடுகள் சபை கண்டனம் வெளியிட்டுள்ளது. சிரிய அரச படையினர் குறித்த பாடசாலை மீது நடத்திய விமானத் தாக்குதலில் 10 சிறுவர்கள் உட்பட 19 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.
இந்த நடவடிக்கை சட்டத்தைக் கொடூரமாக மீறும் செயல் என ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான சிரேஷ்ட அதிகாரி வலரியா அமோஸ் கூறியுள்ளார்.
சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் என அனைவரும் நாளாந்தம் இலக்கு வைக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.
இதேவேளை, சிரியாவிலுள்ளவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவது தொடர்பில் ஐ.நா. பாதுகாப்புப் பேரவையில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானம் செயலுருப் பெறவில்லை என ஐ.நா. குற்றஞ்சாட்டியுள்ளது. (த)

## காஷ்மீர் பிரச்சினையில் மத்தியஸ்தம் இல்லை

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காண மத்தியஸ்தம் செய்வதை இந்தியா விரும்பாததால் அமெரிக்கா அந்த முயற்சி யில் இறங்காது என பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தானுக்கான அந்நாட்டின் சிறப்புப் பிரதிநிதி ஜேம்ஸ் டாபின்ஸ் தெரிவித்தார்.
பாகிஸ்தான் தொலைக் காட்சிக்குஅளித்தபேட்டியில்ஜேம்ஸ் கூறியதாவது:-மத்தியஸ்த யோசனையை இந்தியா நிராகரிப்பதால் அமெரிக்கா ஒன்றும்செய்ய இயலாது. மூன்றாம் தரப்பினர் இந்த விவகாரத்தில் தலையிடுவதை இந்தியா நிராகரித்து வருகிறது.
நேரடியாகவே பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினை இது என்பது இந்தியாவின் நிலை. மூன்றாம் தரப்பின் தலையீட்டை அது விரும்பவில்லை. எனவே மத்தியஸ்த முயற்சியை அது நிராகரித்துவிட்டது.
இந்தியாவின் இத்தகைய நிலைப்பாடு காரணமாக அமெரிக்காவோ அல்லது இதர தரப்பினரோ குறிப்பிட்ட வரம்புக்குள் தான் இந்த விவகாரத்தில் செயற்பட முடியும். பயங்கரவாதத்தை கருவியாக பயன்படுத்துவதை அரசின் கொள்கையாகக் கொள்வதை இந்தப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் தவிர்க்க வேண்டும். இவ்வாறு தனது பேட்டியில் கூறினார் ஜேம்ஸ் டாபின்ஸ். (த)



நைஜீரியத் தலைநகர் அபுஜாவில் நேற்று முன்தினம் நடந்த குண்டுத் தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்டனர். குண்டு வெடிப்பு நடந்த இடத்தைச் சுற்றி நைஜீரிய மக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். (த)

# சிறுவர்களுக்கும் மாலைதீவில் தூக்கு

## ஐரோப்பிய ஒன்றியம் கண்டனம்

மலே,மே 3
மாலைதீவில் கொண்டுவரப்பட்டுள்ள தூக்குத் தண்டனை தொடர்பான ஒழுங்குபடுத்தல்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன கண்டனம் வெளியிட்டுள்ளன. குறிப்பிட்ட சில குற்றங்களுக் குச் சிறுவர்களுக்கு தூக்குத் தண்டனை வழங்கலாம் என மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றத்துக்கு அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளது.
அதனடிப்படையில் 7 வயதுடைய சிறுவர்களுக்கும் தூக்குத் தண்டனை வழங்கப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாலைதீவின் இந்த நடவடிக்கை கவலை அளிக் கும் விடயம் என ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் அலுவலக பிரதி நிதிகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சிரேஷ்ட பிரதிநிதி கத்தரின் அஸ்டன் ஆகியோர் கூறியுள்ளனர்.
நாட்டில் கொலைகள் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதுள்ள சட்டங்களைப் பின்பற்றி துக்குத் தண்டனையை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் ஜனாதிபதியின் பேச்சாளர் இப்ராஹிம் மூஷா அலி கடந்த பெப்ரவரி மாதம் கூறியிருந்தார். (த)

## தங்க சுரங்கம் சரிவு

கொலம்பியாவில்


பொகோட்டா,மே 3
கொலம்பியாவில் தங்கச் சுரங்கம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் அதில் பணியாற்றிய 30 பேர் சுராங்கத்தினுள் சிக்கிக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்களை மீட்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.
எனினும் அவர்களில் 3 பேரின் சடலங்கள் மாத்திரமே இதுவரையில் மீட்கப்பட்டுள்ளன. மேலும் அங்கு நிலவும் உறுதியற்ற தன்மை கொண்ட மண் காரணமாக மீட்பு பணிகளை மேற்கொள்வதில் சிரமம் எதிர்நோக்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மாயமான விமானப் பயணிகளின் உறவினரை வீடு திரும்ப உத்தரவு

கோலாலம்பூர்,மே 3
மலேசியாவின் கோலாலம்பூரிலிருந்து சீனா நோக்கி பயணித்த எம்.எச்-370 பயணிகள் விமானம், கடந்த மார்ச் மாதம், 8ஆம் திகதி மாயமானது. 239 பேருடன் சென்ற குறித்த விமானம், இந்திய பெருங்கடலில், ஆஸ்திரேலியா அருகே, விழுந்திருக்கலாம் என்ற நம்பிக்கையில் தேடும் பணி நடைபெற்றுவருகின்றது.
விமானத்தில் பயணித்தவர்களுடைய, உறவினர்கள், கோலாலம்பூரில் உள்ள ஹோட்டல்களில் தங்கியுள்ளனர். உறவினர்களைப் பற்றிய தகவல் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் அங்கு தங்கியுள்ளனர்.
இதற்குரிய செலவை, மலேசியன் எயார் லைன்ஸ் நிர்வாகம் ஏற்றுள்ளது.
மாயமான விமா னம் குறித்து, இதுவரை எந்த தடயமும் கிடைக்கவில்லை.
எனவே, உறவினர்கள் வீணாக இங்கு காத்திருக்காமல், வீடுகளுக்குத் திரும்பிச் செல்லும்படி, மலேசியன் எயார் லைன்ஸ் நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.
உடனடியாக வீடுகளுக்கு திரும்பிச் செல்லும் உறவினர்களுக்கு, விபத்தில் மறைந்த பயணிகளுக்கு உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படும் என, மலேசியன் எயார் லைன்ஸ் நிர்வாகம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, விமானம் மாயமானது குறித்த முதல் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (த)



காணாமற் போன பயணி ஒருவரின் உறவினர்



## தென்கொரியாவில் 2 ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

78 பேர் காயம்

தென்கொரியாவின் சியோல் நகரில் சுராங்கப் பாதையூடான இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன
இதன்போது 78 பேர் காயமடைந்துள்ளதாகச் சர்வசேத ஊடாங்கங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எனினும் இந்த விபத்தில் 170 க்கும் அதிகமானோர் இந்த விபத்தில் காயமடைந்துள்ளதாகச் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
ஒரே பாதையில் பய ணித்த இரண்டு ரயில் களில் ஒன்றை இயந்திர கோளாறு காரணமாக நிறுத்தியமையால் தொடர்ந்து வந்த ரயில், நிறுத்தப்பட்ட ரயிலுடன் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது கப்பல் விபத்தினால் பெரிய இழப்பைச் சந்தித்த தென் கொரியா மீண்டும் மற்றுமொரு விபத்தை எதிர் நோக்கியுள்ளது. (த)

## நைஜீரியாவில் பல பெண்கள் திருமணத்துக்கென விற்பனை

அபுஜா,மே 3
நைஜீரியாவில் கடத்தப்பட்ட பெண்கள் திருமணத்துக்கென விற்பனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
போஹோ ஹராம் ஆயுதாரிகளால் கடத்தப்பட்ட இந்தப் பெண்கள் 12 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக நைஜீரிய மனித உரிமைக் குழுவொன்று கூறியுள்ளனர்.
இரண்டு வாரங்களுக்கு முன்னர் பாடசாலையொன்றில் இருந்து 200க்கும் அதிகமான பாடசாலைச் சிறுமிகள் கடத்தப்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.
எனினும் இந்தத் தகவலைச் சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை என சர்வதேசத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. கடத்தப்பட்ட பெண்களை மீட்பதில் அரசு தோல்வி கண்டுள்ளதாகத் தெரிவித்து மக்கள் நாடாளுமன்றத்துக்கு முன்னால் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (த)



## வெள்ளைக் கடற்கரை மண்கும்பான் பள்ளிவாசல் கொடியேற்றம்

யாழ்ப்பாணம் வெள்ளைக் கடற்கரை மண்கும்பான் பள்ளிவாசலின் கொடியேற்ற நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை அஸர் தொழுகையின் பின்னர் கொடியேற்றலுடன் ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து மஃரீப் தொழுகையை அடுத்து மௌலூத்உம் தலைசிறந்த மார்க்க அறிஞர்களால் நடத்தப்பட்டது. இந்த நிகழ்வானது மண்கும்பான் பள்ளிவாசலில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள சங்கைக்குரிய அஸ்-ஸெய்யித். அஷ்-ஷெய்க் சுல்தான் அப்துல் காதர்(றஹ்) ஞாபகார்த்தமாக வருடாவருடம் இடம்பெறும் ஒரு வரலாற்று நிகழ்வாகும். இந்த நிகழ்வின் போது மௌலவி சிராஜுதீன் நஜாஹி, மௌலவி தாஜுதீன், அஸீஸ் மௌலவி, மௌலவி முபாறக் நஜாஹி உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தொடர்ந்து இறுதி நாளான ஹிஜ்ரி ஆண்டு 1435 ரஜப் பிறை 12 மே மாதம் 12 ஆம் திகதியன்று காலை 7.30 மணிக்கு குர்ஆன் தமாமும் அது ஆபிரார்த்தனையும் நடைபெற்று பகல் நாரிசாவும் வழங்கப்படவுள்ளது. (வ-10)

# வறட்சியான காலங்களில் கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்கள் குறித்த செயலமர்வு




செயலர்வில் அமைச்சர், அதிகாரிகள் மற்றும் பங்கு பற்றியோர்

வலி. வடக்கு, மே 3

யாழ்ப்பாணம் திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தின் விவசாயத் திணைக்கள மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் வறட்சியான காலங்களில் கடைப்பிடிக்கக் கூடிய நவீன தொழில் நுட்பங்கள் சம்பந்தமான செயலமர்வு வட மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவசாயபீடத் தலைவர் பேராசிரியர் திருமதி எஸ்.சிவச்சந்திரனும் கலந்து கொண்டார்கள்.

மங்கல விளக்கை பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர் விவசாய பணிப்பாளர் சிவகுமார், பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், விவசாய ஆராய்ச்சி மேலதிகப் பணிப்பாளர் அரசகேசரி உட்பட மற்றும் பலர் ஏற்றினார்கள்.

செயலமர்வில் யாழ். மாவட்ட விவசாயிகளின் பிரதிநிதிகள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (வ-86)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

### POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II [ON ASSIGNMENT BASIS]

Applications are invited by me up to 28.05.2014 from suitably qualified persons for the post of Chief Security Officer, Grade II (on assignment basis).

**QUALIFICATIONS:**

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

   OR

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

   OR

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

**AGE:** Not more than 45 years.
(Note: Retired Officers from the Police or other Armed Services may also apply)

**Salary Scale:** Rs.39,024.00 [fixed] per month.

**Selection:** By Structured Interview.

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non -Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 5/- Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "**Post of Chief Security Officer" Grade II (on assignment basis)** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 28.05.2014.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna,
29.04.2014.

(C/14152)(10.6)


## ஒளிப்படக் காட்சியைத் திரையிடல்

சமகால கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் திரையிடலில் இரண்டாவது நிகழ்வாக சர்வதேச சுதந்திர கலை எடுத்தாளுநர்களின் "செயற்றிட்டம் 35" இன் 2 ஆவது தொடரின் 1 ஆவது பகுதி யாழ்ப்பாணத்தில் திரையிடப்பட வுள்ளது.

மேற்படி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை 199, கோவில் வீதி, நல்லூரிலுள்ள சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக்காப்பகத்தில் இடம்பெறவுள்ளது. (க)

## இலங்கையின் மூத்த ஆதிவாசி தலைவர் சாவு

கொழும்பு,மே 3

இலங்கையின் மூத்த ஆதிவாசி தலைவர் தனது 114 வயதில் உயிரிழந்துள்ளார்.

தெய்யத்தகண்டிய, ஹென்னானிகல ஆதிவாசிகளின் முன்னாள் தலைவரான தலாவரிகே களுஅப்பு புதன்கிழமை உயிரிழந்தார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளன. தமண ஆதிவாசி கிராமங்களில் வசித்து வந்த இவர் முன்னாள் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் கோரிக்கையை ஏற்று மகாவலி காணியை பெற்று ஹெனானிகல பிரதேசத்துக்குச் சென்று குடியேறியமை குறிப்பிடத்தக்கது. (ச)


## மரண அறிவித்தல்

### திருமதி இந்துமதி யோகராஜா

(ஆசிரியை - அறிவகம் கனடா, கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி, கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம், வவுனியா/நெழுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் இவற்றின் முன்னை நாள் ஆசிரியை)



யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், தருமபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது கனடா (Missis - sauga) வை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இந்துமதி யோகராஜா 27.04.2014 ஞாயிற்றுக் கிழமைஇறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்)- வள்ளியம்மை (ஓய்வுபெற்ற மருத்துவ தாதி) தம்பதியினரின் கனிஸ்ட புத்திரி யும், யோகராஜாவின் அன்பு மனைவியும், விஸ்வநாதர்- காலஞ்சென்ற குஞ்சுப்பிள்ளை (செட்டிகுளம்) தம்பதியரின் அருமை மருமகளும், ஆதவன் அவர்களின் அன்புத் தாயாரும், விஜேந்திரராணி (ஆஸ்திரேலியா), மகேந்திரராஜா (தருமபுரம்), விமலேந்திரராணி (ஆஸ்திரேலியா), செல்வேந்திரராணி (வவுனியா), கமலநாதன் (கனடா), விமலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், யோகேந்திரம் (ஆஸ்திரேலியா), தனலட்சுமி (தருமபுரம்), சற்குணராஜா (ஆஸ்திரேலியா), பத்மநாதன் (வவுனியா), ஜெகதீஸ்வரி (கனடா), உதயராணி (கனடா), காலஞ்சென்ற மார்க்கண்டு (வவுனியா), பராசக்தி (வவுனியா), கமலாதேவி (கனடா), கனகராஜா (கனடா), கமலநாயகி (இந்தியா), கணேச லிங்கம் (வவுனியா), புண்ணியமூர்த்தி (ஜேர்மனி), யோகரட்ணம் (கனடா), இராசலிங்கம் (கனடா), சண்முகநாதன் (கனடா), மோகனதாஸ் (கனடா), விமலாதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.மகேந்திரராசா
வைத்தியசாலை வீதி,
தர்மபுரம்.
024 324 7421
077 578 2590

(41259)(7.8)

# அடிப்படை வசதியின்றி இயங்குகிறது சந்தை

புதுக்குடியிருப்பு,மே 3
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள பொதுச் சந்தை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகிறது. அதனால் வர்த்தகர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
மீள் குடியமர்வின் பின்னர் கோம்பாவில் பகுதியில் இயங்கிய இந்தப் பொதுச்சந்தை கடந்த ஆண்டு முதல் புதுக்குடியிருப்பு நகரில் தனியார் ஒருவர் நன்கொடையாக வழங்கிய காணியில் இயங்கி வருகிறது.
எனினும் இந்தப் பொதுச் சந்தை இன்று வரை அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகிறது என்று மக்கள் கூறுகின்றனர்.
எனவே இந்தச் சந்தைக்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-55)



பாற்பொருள் உற்பத்தி நிலையத்தின் பெயர்ப் பலகையை ஐ.ஓ.எம். நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி வ.வரதாபரன் திரைநீக்கம் செய்தபோது...

# காட்டு யானைத் தொல்லை; தொடர்ந்து மக்கள் பாதிப்பு

## ஐயன்கன்குளம் பகுதியில்

முல்லைத்தீவு,மே 3
முல்லைத்தீவு, ஐயன்கன்குளம் பகுதியில் தொடர்ந்து காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு, புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம் ஆகிய பகுதியில் கடந்த காலங்களை விட தற்போது காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.
தற்போது நிலவும் வறட்சியான காலநிலையால் தண்ணீர் தேடி அலையும் காட்டு யானைகள் குடியிருப்புகளுக்குள் நுழைகின்றன என்று மக்கள் கூறுகின்றனர்.
கடந்த புதன்கிழமை ஐயன்கன்குளம் பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் விவசாயப் பயிர்களை சேதப்படுத்தியுள்ளன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.
காட்டு யானைகளின் தொல்லையால் தாம் பெரும் அச்சத்துடன் வாழ்வைக் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர். (ச-55)

# பாற்பொருள்கள் உற்பத்தி நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,மே 3
கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தியாளர்களால் வழங்கப்படும் பாலைப் பயன்படுத்தி ஏனைய உற்பத்திகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பாக இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு கிளிநொச்சி நகரில் பாற்பொருள்கள் உற்பத்தி நிலையமொன்றைத் திறந்து வைத்துள்ளது.
கிளிநொச்சி மாவட்ட கால்நடை உற்பத்தியாளர்கள் பாலைச் சேமிப்பதிலும், பாலைப் பதப்படுத்தி அதிலிருந்து யோக்கட், நெய், வெண்ணெய் மற்றும் கட்டிப்பால் போன்றவற்றைத் தயாரிப்பதிலும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவற்றைக் கருத்தில் கொண்டே இந்தப் பால் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.
கரைச்சிப் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ச.சந்திரசேகரத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கட்டட திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனும், சிறப்பு விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வட மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் சி.வசிகரன், ஐ.ஓ.எம். நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகப் பொறுப்பதிகாரி வ.வரதாபரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச-14)

# மீன்பிடிக்கத் தடைகளை ஏற்படுத்தும் படையினர்

## நன்னீர் மீன்பிடியாளர்கள் குற்றச்சாட்டு

*கிளிநொச்சி,மே 3*
*கிளிநொச்சி, வன்னேரிக்குளத்தில் மீன்பிடிக்க இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தி வருகின்றனர் என்று நன்னீர் மீன்பிடியாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.*
*படகுகளை மீன்பிடிக்க கொண்டு செல்கின்ற போது படையினர் தடைகளை விதித்து வருகின்றனர் என்று அவர்கள் கூறினர்.*
*வன்னேரிக்குளத்துக்கு படகுகளைக் கொண்டு செல்லும் போது படையினர் தடைகளை விதிப்பதால் பல்வேறு சிரமங்களை நாங்கள் எதிர்கொண்டு வருகின்றோம் என்று அவர்கள் தெரிவித்தனர்.*
*எனவே வன்னேரிக்குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும்போது இராணுவம் தலையீடு செய்வதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-18)*

# மன்னார் செயலகத்துக்கு புதிய கட்டடத் தொகுதிகள்

## ரூ.100 மில்லியன் ஒதுக்கீடு

மன்னார்,மே 3
மன்னார் மாவட்டச் செயலகத்தின் நிர்மாணப் பணிகளுக்காக அரசு 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது என்று மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போது மாவட்டச் செயலகம் அமைந்திருக்கும் வளாகத்தில் அதி நவீன வசதிகளுடன் கூடியதாக புதிய கட்டடத் தொகுதிகள் அமைப்பதற்கான திட்ட வரைபுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



எம்.வை.எஸ்.தேசப்பிரிய

2014 ஆம் ஆண்டின் சித்திரைப் புத்தாண்டின் அன்பளிப்பாக அரசு இந்த நிதியை ஒதுக்கியுள்ளது.
மன்னாருக்கான புதிய மாவட்ட செயலக நிர்மாணத்துக்காக வழங்கப்பட்ட குறித்த தொகையில் 25 மில்லியன் ரூபா உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக கிடைத்துள்ளது.
முதல் கட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 25 மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் இந்த வருடம் ஜூன் மாதம் அளவில் ஆரம்பிக்கப்படும்-என்றார். (ச-56)

### நடத்துநர்கள் மீதிப்பணம் வழங்குவதில்லை

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் போக்குவரத்தில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்து சபை பஸ்களில் பயணிக்கும் பயணிகளுக்கு பஸ் கட்டண மீதிப் பணம் வழங்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
முல்லைத்தீவு- அக்கரைப்பற்று, முல்லைத்தீவு - யாழ்ப்பாணம் ஆகிய வழித் தடங்களில் சேவைகளில் ஈடுபட்டு வரும் இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களில் பயணிக்கும் மக்கள் செலுத்த வேண்டிய பஸ் கட்டணத்துக்கான பணத்தைப்பெற்று பற்றுச் சீட்டு வழங்கும் நடத்துநர்கள், மீதிப்பணம் வழங்குவதில்லை என்று பாதிக்கப்பட்ட பயணிகள் தெரிவித்தனர்.
இந்த விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-55)

# பொலிஸ் நிலையத்தை அகற்ற பிரதேச சபையில் தீர்மானம்

மாங்குளம்,மே 3
கனகராயன்குளப் பகுதியில் நெடுங்கேணி பிரதேசத்துக்குச் சொந்தமான கமநல சேவை அலுவலகத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் பொலிஸ் நிலையத்தை உடன் அகற்றுவதற்கான தீர்மானம் பிரதேச சபையால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நெடுங்கேணியின் பிரதேச சபைக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இந்தக் கூட்டத்தில் நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர் ஜெயக்கொடி ஜெயரூபனால் கனகராயன்குளப் பொலிஸ் நிலையம் உடன் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும் என்று பிரேரணை முன்மொழியப்பட்டபோது

> மக்களின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் பொலிஸார் நடந்து கொள்கின்றனர்.

சபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.
2010 ஆம் அண்டு மக்கள் மீள்குடியமர்த்தப்பட்ட போதும், கமநல சேவை அலுவலகத்திலேயே பொலிஸ் நிலையம் இயங்கி வருகிறது. கனகராயன்குளப் பகுதியில் விவசாயத்தை நம்பியே பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. அதனால் அவர்களது அடிப்படைத் தொழிலைப் பாதிக்கும் வகையில் பொலிஸ் நிலையம் இயங்கி வருகிறது என்று மக்கள் கூறுகின்றனர்.
நெடுங்கேணி பிரதேச சபையின் எல்லைக்குள் விவசாய களஞ்சியத்தை கொண்டு இயங்கும் ஒரே ஒரு அலுவலகம் இதுவாகும்.
குறித்த நிலையக் கட்டடத்தை தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் வைத்து மக்களின் பொருளாதாரத்தை முடக்கும் வகையில் பொலிஸார் நடந்து கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று நெடுங்கேணி பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.
குறித்த விவசாய அலுவல கக் கட்டடத்தைத் தாம் மீள ஒப்படைப்பதாக பல தடவைகள் பிரதேச செயலகத்துக்கு பொலிஸார் வாக்குறுதி அளித்தும் இதுவரை விவசாய அலுவலகக் கட்டடம் மீளக் கையளிக்கப்படவில்லை என்று அவர் கூறினார். (ச-422)

# ரூ.14.75 மில்லியன் செலவில் 295 மலசலகூடங்கள்

## கிளிநொச்சி மாவட்டத்தில்

கிளிநொச்சி,மே 3
இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்ற அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ் 295 மலசலகூடங்களும் 10 கிணறுகளும் அமைக்கப்படவுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தில் மீள் குடியேற்ற அமைச்சினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர்கள் பிரிவுகளில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
295 மலசல கூடங்கள் 14.75 மில்லியன் ரூபா செலவிலும், 10 கிணறுகள் 1.8 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்படவுள்ளன.

> " 295 மலசல கூடங்கள் 14.75 மில்லியன் ரூபா செலவிலும், 10 கிணறுகள் 1.8 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவு இடம்பெற்று வருவதாக மாவட்டச் செயலக புள்ளி விவரங்களின் மூலம் தெரியவந்துள்ளது. (ச-55)

### காகித விழா

கிளிநொச்சி, பாரதிபுரம் ஒக்ஸ்போட் கல்லூரியின் காகித விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கல்லூரி அதிபர் எம்.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-9)

### கலைப் பூங்கா

கிளிநொச்சி, மே 3
கிளிநொச்சி பண்டிதர் பரந்தாமன் கவின்கலைக் கல்லூரியின் மாணவர் மன்றத்தின் முதலாவது கலைப் பூங்கா நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் நடனம், நாட்டார் பாடல், காவடி உட்பட பல கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-18)

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

## துணைவேந்தரை இடமாற்றக் கோரி



போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள்

மட்டக்களப்பு,மே 3

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் கடந்த புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் கிழக்கு பல்கலைக்கழக வந்தாறு மூலை வளாகத்தின் முன்பாக நடைபெற்றது.

துணைவேந்தர் அரசியல் ரீதியாகச் செயற்படுகிறார் என்று குற்றஞ்சாட்டியுள்ள கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் கள் துணைவேந்தரை இடம் மாற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஒரு மாதகால இடைவெளியின் பின்னர் பல்கலைக் கழகம் மீளத் திறக்கப்பட்ட போதும், 2ஆம் மற்றும் 3ஆம் வருட மாணவர்களுக்கான வகுப்புக்கள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகம் மாணவர்களின் நலன்களில் அக்கறை செலுத்த வேண்டும் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

புதிதாக ஜனாதிபதியினால் திறந்துவைக்கப்பட்ட நூலகம் உள்ளிட்ட கட்டடங்கள் மாணவர்களது பயன்பாட்டுக்கு வழங்கப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# ஏறாவூரில் சிக்கியது இராட்சதத் திருக்கை



மீனவர்கள் வலையில் இராட்சத திருக்கை

ஏறாவூர்.மே3

சுமார் 400 கிலோ நிறையுடைய இராட்சத கொம்புத் திருக்கை மீன் நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஏறாவூர். சவுக்கடியில் ஆள்கடல் மீன்பிடியாளர்களின் வலை யில் சிக்கியுள்ளது.

நீண்ட இறகுகளையும் இரு கொம்புகளையும் கொண்ட இந்த திருக்கையை மீனவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் கரைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

இந்த ஒரு கொம்புத் திருக்கை மீன் சுமார் 80 ஆயிரம் ரூபாவுக்கு விலை போகலாம் என்று மீனவர்கள் கூறினர். (ச)

# தமிழர்களை ஏமாற்றி வருகிறது மஹிந்த அரசு

## மட்டு.மேதினம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

எருவில்,மே 3

நாட்டில் தமிழ் மக்கள் எந்த உரிமையும் அற்ற சுதந்திர மற்ற இனமாக வாழ்ந்து வருகின்றனர். தமிழ் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகிறது அரசு, தொழிலாளர்களை மாத்திரமல்ல ஏனைய அரச துறைகளில் உள்ளவர்களையும் அரசு ஏமாற்றிக்கொண்டு தான் இருக்கின்றது என்று கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதின நிகழ்வு மட்டக்களப்பில் சாள்ஸ் மண்டபத்தில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தமிழ் மக்கள் எந்த உரிமையும் அற்ற சுதந்திர மற்ற இனமாக வாழ்ந்து வருகின்ற னர்.அரசு எமக்கு எந்தத் தீர்வையும் தருவதாக இல்லை. எமக்கு நிலையான சமாதானம் கிடைக்கும் வரை எமது போராட்டங்களை தொடர்ந்து நடத்திக் கொண்டுதான் செல்ல வேண்டும்.

இந்த நாட்டில் ஒரு இனத்தின் நிலங்களை அபகரிப்பதும் அவர்களது [illegible]யங்களை அழிப்பது மாகத்தான் பல செயற்பாடுகள் நடை பெற்று வருகின்றன.



த.கலையரசன்

அவர்களது நியாயமற்ற செயற்பாடுகள் காரணமாக இன்று சர்வதேசம் அரசைப் பார்த்து பல கேள்விகளைத் தொடுத்து நிற்கின்றது. நாட்டில் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப் பட்டுவிட்டது.

கிழக்கு மாகாணத்தில் தமிழ் இனத்துக்கு எதிராகப் பல பிரச்சினைகள் தொடர்ந்து நடந்து கொண்டுதான் வருகின்றன.

எனவே இனிவரும் காலங்களிலாவது எமது இனத்துக்காக அனைவரும் ஒன்றுபட்டு எமது இலக்கை அடைவதற்குத் தொடர்ந்து போராட முன்வருவது காலத்தின் கட்டாயமாகும் -என்றார்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பாஅரியநேத்திரன்,பொன்.செல்வராசா உட்பட பல உறுப்பினர்கள் உரையாற்றியுள்ளனர். (ச-31)

# அறிவிப்பு இன்றி மின்தடை

மட்டக்களப்பு, மே 3

மட்டக்களப்பு மாவட்டத்தில் பகலிலும் இரவிலும் அடிக்கடி மின் தடை நடைமுறைப் படுத் தப்படுவதால் மின் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

முன்னறிவித்தலின்றி இவ்வாறு திடீரென மின் துண்டிக் கப் படுவதால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று மக்கள் கூறினர்.

மின்தடைகுறித்து முன்கூட்டியே பாவனையாளர்களுக்கு அறிவுறுத்த இலங்கை மின்சார சபை யின் மட்டக்களப்பு அலுவலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)


பிறந்தநாள் வாழ்த்து

ஜெகன் வைதேகி தம்பதிகளின்

செல்வப் புதல்வன்

பாரித் அவர்களின்





இரண்டாவது பிறந்தநாள் விழா

03.05.2014

பாரி என்னும் குறிஞ்சி மலர்
எங்கள் பேரன்! உள்ளங்கவர் கள்வன்
ஆண்டு இரண்டில் இன்று பிறந்தநாள் விழா
ஆண்டவன் தந்தமுத்து! வாழ்க பல்லாண்டு.

சந்திரன் சித்தப்பா
சூட்டி சித்தி
ஹம்சி அக்கா
சந்தோஷ் அண்ணா

சாளம்பை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(C/14121)(7.6)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாலசுப்பிரமணியம்
கஜேந்திரன் (பாலகஜன்)
B.Com (Jaf)-H.N.Dip.in.Acc
(ATI), M.Com (Acc.Spl)
[யாழ். புகழ் பூத்த கணக்கீட்டு ஆசிரியர்]
27.04.2014 ஆம் திகதி யாழ்.
பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்ட சான்றிதழ் வழங்கும் விழாவில் B.Com (வணிகமாணி) பட்டம் பெற்றதை இட்டு இவரை வாழ்த்துகின்றோம்.
மேலும் இவர்பல்வேறு பட்டங்களைப் பெறவும் இவரது கணக்கீட்டு புகழ் பரவவும் எல்லாம் வல்ல இறைவன் ஆசிபுரிய வேண்டும் என வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துபவர்கள்:

NB.கஜீதரன் [யாழ்.கொழும்பு பிரபல பொருளியல் ஆசிரியர்]
S.K.பாலசபேஷ் [வணிககல்வி ஆசிரியர்]
மாணவர்கள் [2014, 2015, 2016,Day batch) (47508) (8.6.4)



ஹற்றன் நஷனல் வங்கி பிஎல்சி
யாழ்ப்பாணம்

அரசடி வீதியில் பிரதான வதிவிட சொத்துக்கள் விற்பனைக்கு

அமைவிடம்
இல. 119/7 அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

அளவு
காணி - 3 Lms, V.C. and 2.7/10kls
கட்டடம்: 2,280 சதுரஅடி

மேலதிக விவரங்களுக்கு அலுவலக நேரங்களில் அழைக்கவும்:
021 226 4149, 077 365 2460, 011 266 1827

விலைக்கோரல்களை 2014 மே 04 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்

The Deputy General Manager [R&COM]
Hatton National Bank PLC (45511) (45.8.3)
Recoveris Department, Level 18,HNB Towers,
479, T.B. Jayah Mawatha, Colombo - 10.

# கூட்டமைப்புடனான எமது உறவை எவராலும் சீர்குலைக்க முடியாது

## இனவாதம், மத வாதத்தை எதிர்த்துப் போராடுவோம் என்கிறார் மனோ

கொழும்பு, மே 3

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான ஜனநாயக மக்கள் முன்னணியின் உறவு, உணர்வுபூர்வமானது. அதை எவராலும் சீர்குலைக்க முடியாது. அந்த உறவு, வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு என்று நாடு முழுவதும் அரசியல் வடிவம் பெறுகின்ற, அகில இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக மாறும் காலம் வந்தே தீரும்.

ஜிந்துப்பிட்டி மைதானத்தில் நடைபெற்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் மேதினக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய போது அம் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேற்கண்டவாறு கூறினார் அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசு இன்று மேற்கிலும், மலையகத்திலும், வடக்கிலும், கிழக்கிலும் வாழும் எங்கள் மக்களை அடக்கி, ஒடுக்கி, சுரண்டி தனது பெரும்பான்மை இனவாத, மதவாத, அரசியல் பயணத்தை மேற்கொள்கிறது.

இந்தப் பயணத்துக்கு எதிராகத்தான் நாம் இன்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் போராடுகிறோம்.

இன்று எங்கள் இணைந்த போராட்டம் வெற்றியளிக்க ஆரம்பித்துவிட்டது. அரசின் பயணம் இன்று எந்த பக்கம் திரும்புவது என்று வழி தெரியாமல் முச்சந்தியில் விழி பிதுங்கி நிற்கிறது.

அதனால் தான் ஜனாதிபதித் தேர்தலா அல்லது நாடாளுமன்றத் தேர்தலா என்று இரண்டையும் பற்றி அரசு பேசி வருகிறது.

எதிர்க்கட்சிகள் தூங்கும்போது தேர்தலை நடத்தி தங்கள் பேரினவாத பயணத்தைத் தொடரலாம் என்று மஹிந்த அரசு கனவு காண்கிறது. அது கெட்ட கனவு. இந்தக் கனவுகள் கலையும் காலம் வந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் தூங்கவில்லை. நாங்கள் விழித்துக் கொண்டுதான் கனவு காண்கிறோம்.



மனோ கணேசன்

பொது வேட்பாளர் தொடர்பாகவும், பொதுத் தேர்தல் தொடர்பாகவும் எம்மிடையே பேச்சுக்கள் நடைபெறுகின்றன. நாங்கள் பொது வேட்பாளருக்கும் தயார். பொதுத் தேர்தலுக்கும் தயார். பொதுத் தேர்தலில் தனித்தும் தயார். கூட்டணிக்கும் தயார். அவசியமானால் வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு இணைந்த அகில இலங்கை தமிழ் தேசிய கூட்டணி யோசனை பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பரிசீலிக்கவும் தயார்.

**மேதின தீர்மானங்கள்**

நாட்டைப் பிரிக்காமல், அதிகாரத்தைப் பிரிப்போம். அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம். மலையக மக்களின் காணி- வீட்டுரிமைக்காகக் குரல் கொடுத்து மலையக தொழிற் சங்கக் கூட்டமைப்பில் இணைந்து போராடுவோம். கொழும்பிலே வீட்டுடைப்புக்கு எதிராகக் குரல் கொடுத்து போராடுவோம். உழைக்கும் மக்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்துக்காகப் போராடுவோம். இனவாதத்தை, மத வாதத்தை எதிர்த்து ஒன்று சேர்ந்து போராடுவோம்.

**எமது இரட்டை நோக்குக் கொள்கை**

மேல்மாகாணத்தில் தமிழ் பேசும் மக்களின் பாதுகாவலராக நாம் பணியாற்றுகிறோம். எங்கள் உரிமைகளைப் பேசியும், போராடியும் நாம் பெறுவோம். இருப்பதை விட்டுக் கொடுக்கவும் மாட்டோம். எனக்குப் பொறுப்பு இருக்கிறது: எம்முடன் வாழும் சகோதர இனங்களுடன் நேர்மையான இன நல்லிணக்கத்துக்கும் தயாராக இருக்கின்றோம் என்பதை எப்போதும் நாம் எமது செயற்பாடுகளின் மூலம் வெளிப்படுத்தி வருகிறோம். எங்கள் இந்த இரட்டை நோக்கு கொள்கையை நமது சமூகம் இன்று புரிந்து கொண்டுள்ளது.

நாங்கள் அரசுக்கு எதிரான எதிரணிக் கட்சி ஐக்கிய தேசிய கட்சியுடன் எமது உறவு இருக்கும் அதேவேளையில், நாம் ஜே.வி.பி, பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி ஆகிய கட்சிகளுடனும் எங்கள் உறவை வளர்க்க விரும்புகிறோம் - என்றார். (ச-5)

# தலங்களை அமைக்கவும் அனுமதி தேவை

கொழும்பு,மே 3

பௌத்த மற்றும் மத விவகாரங்கள் அமைச்சின் அனுமதியின்றி எதிர்காலத்தில் நாட்டில் எந்தவொரு வழிபாட்டுத் தலத்தையும் நிறுவ முடியாது என்று அமைச்சின் செயலர் எம்.கே.டி. திஸாநாயக்க தெரிவித்தார். புதிய மக்கள் குடியேற்றங்கள் ஏற்படும் இடங்களில் வணக்க ஸ்தலங்களும் ஏற்படுத்தப்படுவது வழமை என்று அவர் கூறினார்.

நாட்டுக்குள் 20 ஆயிரம் வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன. அவற்றில் 10 ஆயிரம் வழிபாட்டுத் தலங்கள் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் என்று அவர் தெரிவித்தார்.

புதிய குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படும்போது வழிபாட்டுத் தலங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. சட்டத்துக்கு அப்பால் சென்று மேற்கொள்ளப்படும் இத்தகைய நடவடிக்கைகளினால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார். நாட்டு மக்கள் தாம் விரும்பியபடி தமது மதங்களைப் பின்பற்றும் உரிமை இருக்க வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சிறப்பு விருதுகள் பெற்றுக் கொண்ட 8 இராணுவத்தினர்

கொழும்பு,மே 3

நெடுங்கேணி, வெடிவைத்த கல்லு காட்டுப் பகுதியில், விடுதலைப் புலிகளுக்கு மீண்டும் புத்துயிர் உயிர்கொடுக்க முயன்ற மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் திறமையாகப் பணியாற்றிய இலங்கை இராணுவ அதிகாரிகளுக்குச் சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இராணுவத் தலைமையகத்தில் புதன்கிழமை நடந்த நிகழ்வில், இராணுவத் தளபதி இந்த விருதுகளை வழங்கினார்.



தளபதியிடம் விருது பெற்றவர்கள்

இந்த விருது வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா, சிறப்புப் படைப் பிரிவின் பிரிகேட் தளபதி பிரிகேடியர் ஆர்.எம். வை. ஜே.ரத்நாயக்க, இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் கேணல் ரி.எஸ்.சாலி, 2 ஆவது சிறப்புப் படைப் பிரிவின் கட்டளை அதிகாரி லெப்.கேணல் எம்.பி.கே. எல்.அமரசிங்க, லெப். டி. எம்.திசநாயக்க, கோப்ரல் தினேஸ்குமார, கோப்ரல் ஜெயசிங்க, கோப்ரல் கமகே ஆகிய எட்டுப் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்களே, கோபி, அப்பன், தேவிகன் ஆகிய மூவரும் கொல்லப்பட்ட தாக்குதலுக்கு பொறுப்பாக செயற்பட்டவர்களாவர். (ச)

# இளைஞர் மாநாட்டுக்கென ஞாபகார்த்த தபால் உறை

## வெளியிட்டு வைப்பார் மஹிந்த

கொழும்பு,மே 3

இலங்கையில் நடைபெறும் உலக இளைஞர் மாநாட்டுக்கென ஞாபகார்த்த தபால் உறை வெளியிடப் படவுள்ளது என்று இளைஞர் விவகாரத் திறன் அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.



மஹிந்த ராஜபக்ஷ

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுக்கும் உலக இளைஞர் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவினருக்கும் இடையே விசேட கூட்டம் நடைபெற்றபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இளைஞர் விவகாரத் திறன் அபிவிருத்தி அமைச்சும், தகவல்திணைக்களமும்இணைந்து இந்த தபால் உறையை வெளியிடவுள்ளன.

இளைஞர்கள் தொடர்பாக ஒரு மாபெரும் மாநாடு ஆசிய வலய நாட்டில் நடத்தப்படுவது இதுவே முதல் தடவை என்பதால், இதற்கு சரித்திர முக்கியத்துவம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதாலேயே தபாலுறை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது' என்று அமைச்சர் டலஸ் தெரிவித்தார். தபால் உறையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டு வைக்கவுள்ளார். (ச)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும்
74ஆவது பிறந்த நினைவு தினமும்
அமரர் இராமலிங்கம் கந்தையா
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)
திதி : பூர்வபக்க பஞ்சமி



அன்னை மடியில் 15.04.1940
மாவடியான் பாதக்கமலத்தில் 15.04.2013

அன்பு அப்பாவே!
அன்புமொழி பேசி எம்மை வளர்த்த
அன்பு தெய்வமே!
நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்றாகிவிட்டது
ஆனாலும் உங்கள் நினைவுகள்
எம்முடனே இருக்கின்றது
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா என்று அழைக்க
நீங்கள் இப்பூவுலகில் இல்லை
பாசமிகு கணவராகவும், தந்தையாகவும்
நீங்கள் இருந்து இப்போது தெய்வமாகிவிட்டீர்கள்.

இன்று (03.05.2014) எமது இல்லத்தில் நடைபெறும் சமயக் கிரியைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"மணியகம்"
ஐயா கடையடி,
சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி.

மனைவி,
பிள்ளைகள்.

விண்ணக வாழ்வில்
35ஆம் ஆண்டு ஞாபகார்த்தம்



"சீவியத்தில் நேசித்தவர்களே
மரணத்திலும் மறவாதீர்கள்"
அமரர் S.J. மாட்டீன்
(இளைப்பாறிய ஆசிரியர்)
மலர்வு 12.11.1918
உதிர்வு 06.05.1979

மண்ணுலகை விட்டு மறைந்துவிட்ட எங்கள்
பப்பாவே, அப்பப்பாவே!
முப்பத்தைந்து ஆண்டுகள் சென்றாலும் உங்கள்
அன்பு முகம் மறையாது. அன்பினைப் பகிர்ந்தீர்கள்.
பண்போடு வளர்த்தீர்கள். உங்களை சீவியத்திலும்
நேசித்தோம், மரணத்திலும் மறவோம். இறைவனில்
நீங்கள் இளைப்பாற என்றும் வேண்டுவோம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 06.05.2014 ம் 10.05.2014 ம் காலை 6 மணிக்கு
"யாழ். கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில்" திருப்பலி நிறைவேற்றப்படும்

அன்புடன் நினைவுகூறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

181, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்நகர்.

தகவல்:
"குடும்பத்தினர் அனைவரும்".

(47098) 145 (6.3)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சென்னை குண்டு வெடிப்பால் எழுந்துள்ள சிக்கல்கள்

சென்னை மத்திய ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்கும் பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடையவராக இந்திய காவல்துறையால் கைது செய்யப்பட்டிருக்கும் இலங்கை நபருக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்ற வகையில் ஆராயப்பட்டு வருவதாக செய்திகள் வெளி வந்துள்ளன.

இலங்கையைச் சேர்ந்த சாகிர் ஹுசேன் என்பவரைத் தமிழகப் பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகிறார்கள். பாகிஸ்தான் பயங்கரவாத அமைப்பால் இரண்டு ஆண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ள இவர், சென்னையிலுள்ள அமெரிக்கத் தூதரகம், பெங்களூரிலுள்ள இஸ்ரேலிய துணைத் தூதரகம், கொச்சி மற்றும் விசாகப் பட்டினத்திலுள்ள கடற்படை அலுவலகங்களை குண்டு வைத்துத் தகர்க்க வேண்டுமென பணிக்கப்பட்டிருந்ததுடன், இந்தச் சம்பவங்களில் இறப்பவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அவருக்குப் பணம் வழங்கப்படுவதற்கும் ஏற்பாடாகியிருந்ததாகக் கூறப்படுகின்றது. முதலில் வந்த இந்தியச் செய்திகளின்படி குறித்த நபரை பயிற்றுவிப்பதில் பாகிஸ்தான் தூதரக அதிகாரி ஒருவர் சம்பந்தப்பட்டிருந்ததாக மட்டுமல்ல சாகீர் ஹுசேன் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் மூலமே தமிழ்நாட்டுக்கு அனுப்பப்பட்டிருந்ததாகவும் கூடத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சாகிர் ஹுசேன் தொடர்பான செய்திகள் முழுவதையும் பாகிஸ்தான் தூதரகம் நிராகரித்துள்ளது. அவருக்கும் தங்களுக்கும் எந்த விதத் தொடர்பும் கிடையாது என்று அது கூறியுள்ளது. சென்னை மத்திய ரயில் நிலையத்தில் கவுஹாத்தி சென்னை கடுகதி ரயிலில் அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்ததில் ஓர் இளம் பெண் உயிரிழந்ததுடன் பலர் காயமுற்றனர். இந்தச் சம்பவத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இலங்கையரான பாகிஸ்தான் பயங்கரவாத இயக்க உளவாளிக்கும் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கும் சம்பந்தம் இருக்கலாம் என்ற வகையில் சென்னைப் பொலிஸார் இப்போது தீவிர ஆய்வில் இறங்கியிருக்கிறார்கள்.

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இலங்கையைத் தளமாகக் கொண்டு செயற்படுகிறார்கள் என்பதாக முன்னரும் செய்திகள் வந்ததுண்டு. ஆனால் அவைகளும் அவ்வப்போது இலங்கை அதிகாரிகளாலும் பாகிஸ்தான் தூதரகத்தாலும் மறுக்கப்பட்டிருந்தன. இப்பொழுது முஸ்லிம் இனத்தவரான இலங்கையர் ஒருவரே பாகிஸ்தான் பயங்கரவாதிகளால் மூளைச் சலவைக்குட்படுத்தப்பட்டு இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தப்படுவதான செய்தி பாரதூரமானது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பகை இருக்கலாம். ஆனால் அந்தப் பகையை மூன்றாவது நாடொன்றைப் பயன்படுத்தி தீர்த்துக்கொள்ள முயல்வார்களாகில் அது பாரதூரமாகும். பாகிஸ்தான், இந்தியா இரண்டுக்குமே இலங்கை நட்பு நாடு. இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்தியா காட்டுகின்ற அக்கறையை பகைமை நடவடிக்கையாக இலங்கை எடுத்துக்கொள்ள முடியாது. மனக் கசப்புகள் ஏற்படுவது வழமைதான். அதனை இரண்டு நாடுகளுக்குமிடையிலான பகைமையாக வளர்த்துவிட யாரும் முயலக்கூடாது. இலங்கை அரசு கண்ணை மூடிக்கொண்டு அதை அனுமதித்துவிடவும் மாட்டாது.

தீவிரவாதிகள், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமது குறிக்கோளை அடைவதற்கு எந்த நடவடிக்கையிலும் இறங்கத் தயங்கமாட்டார்கள். எத்தனை உயிர்கள் பலியானாலும், அவர்கள் தமது சொந்த உறவினர்களே ஆனாலும் தயங்க மாட்டார்கள்.

எனவே இலங்கை நபரை இந்தியாவில் பயன்படுத்திக் கொண்டு தம் திட்டத்தை அவர்கள் நிறைவேற்ற முயன்றிருக்கலாம் என்று இந்தியப் பொலிஸார் கருதுவதில் நியாயமிருக்கலாம். அந்த நபரிடமிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி சென்னை குண்டு வெடிப்பில் அவருக்கு தொடர்பிருந்துள்ளதா வென அவர்கள் ஆராய முற்படுவதும் சரியாகவே இருக்கும்.

அதைவிட குறித்த சாகிர் ஹுசேன் தொடர்பான ஏனைய தகவல்களை, சிறப்பாக அவரது இலங்கைப் பின்னணி பற்றி ஆராயவும் அவர்கள் விரும்பக்கூடும். அதற்காக இலங்கை அரசின் அனுசரணையையும் நாடி வரலாம்.

இந்தியாவுக்குப் பகையான பல நாடுகளுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொண்டு அந்த நாட்டுக்கு பொருளாதார மற்றும் மூலோபாய சிக்கல்களைக் கொடுப்பது ராஜபக்ஷ அரசின் இன்றைய ராஜ தந்திரமாக இருந்தாலும், அதனை இந்தியாவுக்குப் பகையான நாடுகள் அல்லது அந்த நாடுகளில் காணப்படும் அமைப்புகள் பயன்படுத்திக் கொண்டு சீரழிவுகளை ஏற்படுத்த முயல்வதை அனுமதிக்கலாகாது. ஏனென்றால் அண்டை நாடான இந்தியாவில் ஏற்படுத்தும் அவ்வாறான கலை, கலாசார மற்றும் பொருளாதார சீர்குலைவுகள் காலப் போக்கில் இலங்கையிலும் பிரதிபலிக்கும். சமீப காலத்தில் உலக பௌத்தர்களுக்கு மிக முக்கியமான இந்தியாவிலுள்ள புனித தலம் ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு இலங்கையிலுள்ள பௌத்தர்களையும் வேதனைக்குள்ளாக்கியிருந்தது.

இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து சென்று ஏறத்தாழ ஒரு லட்சம் தமிழர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்து வருகிறார்கள். தொழில் மற்றும் வர்த்தக மருத்துவக் காரணங்களுக்காக ஏராளமான இலங்கையர் இந்தியாவுக்கு அனுதினமும் சென்று வருகிறார்கள். இந்திய கலை, கலாசார மற்றும் துறைகளில் இருந்துவரும் பரிவர்த்தனைகள் வரலாற்றுக் கால முக்கியத்துவமிக்கவை.

எனவே அவைகள் சீரழிந்து போக இரு நாடுகளுமே இடம் தரலாகாது. இந்தியாவில் பயங்கரவாத வன்முறைகளுக்கு இலங்கை ஒரு தளமாக அமைந்துவிட அதிகாரிகள் இடம் தர மாட்டார்கள் என்றே நம்புவோம்.

# மஹிந்தவைத் தோற்கடிக்க மூன்றாம் தரப்பு வேட்பாளர்

## போடும் கணக்கு சரி வருமா?

சிங்கள மூலம் : மவ்பிம
தமிழில் : வீஎஸ்ரீ

ஜனாதிபதி பிரேமதாசவின் நிர்வாக வேளையில் அடுத்து இடம்பெறவேண்டிய ஜனாதிபதித் தேர்தலில் மூன்றாம் தரப்பு வேட்பாளரொருவர் நிறுத்தப்பட வேண்டுமென அவ்வேளையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுடன் முரண்பட்டுக் கொண்டு ஐ.தே.கட்சியிலிருந்து வெளியேறியிருந்த - ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரான அத்துலத்முதலி தெரிவித்து வந்தார்.

எதற்காக அவ்விதம் மூன்றாம் தரப்பு வேட்பாளரொருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படவேண்டுமென்ற வினாவுக்கு, சுதந்திரக் கட்சி தனது சார்பாக கட்சியின் தலைவி சிறிமாவோவை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தினாலும், சிறிமாவோவிடம் ஐ.தே.கட்சியின் வாக்கு வங்கியைச் சுதந்திரக் கட்சியின் பக்கம் திருப்பவல்ல திறமை கிடையாது. அதை மூன்றாம் தரப்பான எம்மாலேயே நிறைவேற்ற இயலும். ஆதலால் ஜனாதிபதி பிரேமதாசவை எதிர்த்து சிறிமாவோ போட்டியிட்டாலும் கூட நானும் மூன்றாம் தரப்பு வேட்பாளராகப் போட்டியிடவுள்ளேன் என அத்துலத்முதலி கூறி வந்தார். இது பிரேமதாசவுக்கே சாதகமான பயனைப் பெற்றுக் கொடுக்குமென விமர்சிக்கப்பட்டாலும் பிரேமதாசவை எவ்விதத்திலாவது தோற்கடித்தேயாக வேண்டும் என்ற முனைப்பில் செயற்பட்ட அத்துலத்முதலி அந்த விமர்சனங்களை யெல்லாம் நிராகரித்துத் தமது முடிவில் உறுதி யாகவிருந்தார்.

சிறிமாவோவின் நலிவுற்ற தலைமைத்துவம் காரணமாக அவரால் பிரேமதாசவைத் தோற்கடிக்க இயலாது. தொடர்ச்சியாகத் தேர்தல்களில் தோல்வியைத் தழுவியதுடன் உடல் நிலையிலும் நலிவு கண்டிருந்த சிறிமாவோவால் வாக்காளர்களைக் கவர இயலாதென்பது அத்துலத்முதலியின் வாதமாக அமைந்திருந்தது. அதுவுமன்றி ஐ.தே.கட்சிக்காரர்கள் சிறிமாவோ மீது கொண்டிருந்த வைராக்கியம் காரணமாக, பிரேமதாசவைத் தோற்கடிக்க, பிரேமதாச மீது அதிருப்தி கொண்டுள்ள ஐ.தே.கட்சி ஆதரவாளர்களையே தமது தரப்பின் ஆதரவாளர்களாக ஆக்கிக் கொள்ள இயலாத நிலையில் சிறிமாவோ இருப்பதாக அத்துலத்முதலி கருதினார். ஆதலால் சிறிமாவோ சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளது ஆதரவாளர்களின் வாக்குகளைத் திரட்டும் அதே வேளை, தாம் மூன்றாவது தரப்பு வேட்பாளராகி, ஐ.தே.கட்சி ஆதரவாளர்களது வாக்குகளை பெறுவதன் மூலம் பிரேமதாசவைத் தோற்கடிக்க இயலுமென அத்துலத்முதலி கருதினார். பிரேமதாசவைத் தோற்கடிக்க இயலாவிட்டாலும், ஐம்பது சதவீத வாக்குகளைப் பெறாது பிரேமதாச ஜனாதிபதியாக இயலாது போய், இரண்டாவது தடவை வாக்குகள் எண்ணப்பட நேருமானால், தமக்கு வாக்களித்தவர்களின் இரண்டாவது விருப்பு வாக்கும் சிறிமாவோவுக்கு கிட்டுமானால் சிறிமாவோவால் பிரேமதாசவைத் தோற்கடித்து வெற்றியீட்ட முடியுமென அத்துலத்முதலி கணக்குப் போட்டார்.

சுதந்திரக் கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டு முன்னணியில் இணைந்து கொள்ளுமாறு 1993 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் சமயத்தில் அத்துலத்முதலிக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், ஜனாதிபதித் தேர்தலில் தமது மூன்றாம் தரப்பு வேட்பாளர் திட்டத்தைப் பரீட்சித்துப் பார்க்கும் முனைப்பில் அத்துலத்முதலி அந்த அழைப்பை நிராகரித்தார். பின்னர் அத்துலத்முதலி படுகொலையுற நேர்ந்த போதிலும் அவரது அந்தப் பரீட்சார்த்த முயற்சி வெற்றி கண்டது. 1993 ஆம் ஆண்டின் மாகாண சபைத் தேர்தலில் அத்துலத்முதலியின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐ.தே.கட் சியின் பத்தாயிரம் வரையிலான வாக்குகளைப் பிரித்தெடுத்துக் கொண்டது. அந்த முன்னணிக்குக் கிடைத்த ஆசனங்களின் உதவியுடனேயே சந்திரிகாவால் மேல் மாகாண சபை முதலமைச்சராக முடிந்தது. பிரேமதாச மீது அதிருப்தி கொண்டுள்ள ஐ.தே.கட்சி தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சிறிமாவோவைத் தவிர்த்து தமக்கே ஆதரவளிப்பார் என அத்துலத்முதலி போட்ட கணக்கு தப்பாகிவிடவில்லை.

2005 ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலிலும் இத்தகைய மூன்றாம் தரப்பு வேட்பாளர் திட்டம் ஜாதிக ஹெல உறுமய தரப்பினரால் முன்வைக்கப்பட்டு அதற்கான வேட்பாளராக ஜானக பெரேராவின் பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது. சிங்கள பௌத்தர்களின் வாக்குகளினாலேயே மஹிந்த வெற்றி பெற இயலும். உங்களுக்கு சிங்கள பௌத்தர்களின் வாக்குகளுடன் சிறுபான்மை இனத்தவர்களின் வாக்குகளும் கிட்டும். நான் மூன்றாம் தரப்பு வேட்பாளரானால் மஹிந்தவுக்கு ஆதரவான சிங்கள பௌத்த தரப்பினரின் வாக்குகளில் ஒரு பகுதியை என் பக்கம் திருப்பிக் கொள்ள முடியும். அத்தகையதொரு நிலையில் உங்களால் ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயமாக வெற்றி பெற வாய்ப்பு உருவாகுமென அந்த வேளையில் ஆஸ்திரேலியாவில் இருந்து ஜானகபெரேரா, ரணிலைத் தொடர்பு கொண்டு தெரிவித்திருந்தார். ஆனால் ரணிலோ, ஜானக பெரேரா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் தன் மீதான பொதுமக்களின் ஈர்ப்பு அவர் பக்கம் திரும்பி விடுமெனக் கருதி ஜானக பெரேராவைத் தேர்தலில் போட்டியிட முயல வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். ஒருவேளை ஜானக பெரேரா அந்தத் தேர்தலில் போட்டியிட்டிருந்தால் தேர்தலில் மஹிந்த வெற்றி பெற இயலாது போயிருக்கக்கூடும் . நாட்டுப் பற்றாளர் தரப்புகளின் வாக்குகள் பிளவுபட நேர்ந்திருக்கும்.

அடுத்து இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சித் தலைமைப் பீடம் பொது வேட்பாளரொருவரை நிறுத்த விரும்பாது ஐ.தே.கட்சி சார்பில் ரணிலோ அல்லது வேறொருவரோ வேட்பாளராக நிறுத்தப்பட நேருமானால், மஹிந்தவைத் தேர்தலில் தோற்கடிக்க பொது வேட்பாளரொருவரின் தேவை அத்தியாவசியமாகும். ஒன்றில் ஜே.வி.பி. அந்த முயற்சியைக் கையில் எடுக்க வேண்டும்; அல்லது சரத் பொன்சேகா அந்தப் பணியைப் பொறுப்பேற்க வேண்டும். அன்றேல் இவ்விரு தரப்புகளும் ஒன்றிணைந்து அந்த முயற்சியை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை நோக்கும்போது மேற்குறித்த இரு தரப்புகளும் கூடுதலாக மஹிந்த அரசுக்கு ஆதரவான வாக்குகளையே தத்தமது தரப்புகளுக்கு அதிகரித்துக் கொண்டுள்ளன. அதேசமயம் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சியால் அரச தரப்பு ஆதரவு வாக்குகளைக் கவர்ந்து கொள்ள இயலவில்லை என்பதையும் அந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியுள்ளன. ஜே.வி.பி.மற்றும் பொன்சேகா தரப்புகள் இணைந்து ஐ.தே.கட்சி நிறுத்தும் வேட்பாளருக்கு ஆதரவு வழங்க முயன்றால் அவ்விரு தரப்பினராலும் அரச தரப்பு ஆதரவு வாக்குகள் மற்றும் புதிய வாக்காளர்களின் வாக்குகளை ஐ.தே.கட்சி சார்பான வேட்பாளருக்கு கிடைக்கச் செய்ய இயலாது. அதே போன்று புதிய மற்றும் எவருக்கு வாக்களிப்பது என முடிவு செய்ய இயலாத நடுநிலை வாக்காளர்களின் வாக்குகளை ரணில் போன்ற நலிவு நிலை ஐ.தே.க வேட்பாளரால் கவர்ந்து ஈட்டிக் கொள்ள இயலாது. அந்த வகையில் ஜே.வி.பி.யோ , பொன்சேகா தரப்போ மூன்றாம் தரப்பு வேட்பாளரொருவரைத் தேர்தலில் வேட்பாளராக நிறுத்தினால் அரச தரப்பு ஆதரவு வாக்குகள் போன்றே, புதிய வாக்காளர்கள் மற்றும் நடுநிலை வாக்காளர்களின் ஆதரவைப் பெற்று , அரச தரப்பின் வாக்கு வங்கியை பலவீனப் படுத்த இயலும்.

> கடந்த மேல் மாகாண மற்றும் தென் மாகாண சபைத் தேர்தல் முடிவுகளை நோக்கும்போது மேற்குறித்த இரு தரப்புகளும் கூடுதலாக மஹிந்த அரசுக்கு ஆதரவான வாக்குகளையே தத்தமது தரப்புகளுக்கு அதிகரித்துக் கொண்டுள்ளன. அதேசமயம் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கட்சியால் அரச தரப்பு ஆதரவு வாக்குகளைக் கவர்ந்து கொள்ள இயலவில்லை என்பதையும் அந்தத் தேர்தல் முடிவுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

அப்படியானால் அந்த மூன்றாம் தரப்பு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக எவர் நிறுத்தப்படவேண்டுமென்ற கேள்வி எழுவதும் இயல்பான ஒன்றே. மூன்றாம் தரப்பு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் நாட்டின் பொதுமக்களை கவரத்தக்க , பொதுமக்களின் மதிப்பை ஈட்டத் தக்க ஒருவராக - சோபித தேரர் அல்லது முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க போன்ற ஒருவராக அமைதல் வேண்டும். சரத் பொன்சேகாவால் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகப் போட்டியிட முடியுமாக இருந்தால் அவரும் வாக்காளர்களைத் தம் பக்கம் கவர்ந்திழுக்கக் கூடிய ஒருவராகவே இருப்பார்.

அவ்விதம் மூன்றாம் தரப்பு ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளரொருவர் தேர்தலில் நிறுத்தப்படுவாரானால், ஒன்றில் ஐ.தே. கட்சியின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர் வெற்றியீட்டக்கூடும். அல்லது மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீத வாக்குகளை எந்தவொரு வேட்பாளரும் பெறாத நிலையில் இரண்டாம் விருப்பு வாக்குக் கணக்கீட்டை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படக்கூடும். இவ்விரு ஊகங்களை விட, மூன்றாம் தரப்பு வேட்பாளராக நிறுத்தப்படும் வேட்பாளர் கூட சில சமயம் வாக்காளர்களின் பேராதரவு பெற்று ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாகை சூடக்கூடும் என்ற கருத்தையும் இலேசில் புறம் தள்ளி விட இயலாது.



# குடாநாட்டின் நிதி நெருக்கடியும்

## வங்கி வாடிக்கையாளரின் கடன் சுமையும்

ந.உதயசேகர்

"நிதி நெருக்கடி" என்ற பிரதான பதத்தில் பல்வேறுபட்ட பொருளாதார, அரசியல், தொழில்நுட்ப, சமூக மற்றும் சட்டச் செயற்பாடுகள் காணப்படுகின்றன. பிரதானமாக யாழ்ப்பாணத்தில் அதிகளவில் காணப்படும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் செயற்பாடுகளும் சேவை நாடுவோரின் நெறியற்ற நிதியியல் நடத்தைகளுமே நிதிச் சேவை நுகர்வோரின் வாழ்க்கை நீரோட்டத்தை கேள்விக் குறிகளாக்கியுள்ள காரணிகள் எனக் குறிப்பிடலாம்.

மேலும் வியாபாரச் செயற்பாட்டின் மந்த நிலைமை , காலநிலை மாற்றத்தின் காரணமாக விவசாயச் செய்கை மற்றும் மீன்பிடித் துறையில் ஏற்படும் பாதிப்புகள், கடன்களை வசூலிப்பதில் ஏற்படும் சிரமம் அல்லது கால தாமதம், வியாபாரச் செயற்பாடுகளின் இலாபமீட்டல் வீதத்தில் ஏற்படும் கணிசமான வீழ்ச்சி, திறந்த பொருளாதார செயற்பாடும், தடையற்ற இலகு வர்த்தகம் காரணமாக ஏற்படும் போட்டித் தன்மையும், மூலதனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சட்ட பூர்வமற்ற பண வழங்குநர்களை நாடும் மோகம், சீட்டுப் பிடித்தல் போன்ற சட்ட அந்தஸ்து அல்லாத பணமீட்டும் செயற்பாடுகளால் ஏற்படும் மோசடிகள் என சங்கிலித் தொடரான செயற்பாட்டு விளைவுகளும், பாரம்பரிய வியாபாரச் செயற்பாடுகள், விவசாய மற்றும் மீன்பிடி, கைத்தொழில் முறைகளில் இருந்து நவீன நடைமுறைச் செயற்பாட்டுக்கு ஒத்த சேவை மற்றும் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குரிய மூலதனப் பற்றாக்குறை, தேர்ச்சியற்ற ஊழியர், அரசியல் மற்றும் சட்டச் செயற்பாடுகள் பற்றிய அறியாமை மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவமின்மை, திட்டமற்ற உற்பத்தி சேவை முறைமை போன்ற பல்வேறு காரணிகளின் ஒட்டுமொத்த தாக்கங்களாகவே இந்த 'நிதி நெருக்கடி' என்ற பதம் கோடிட்டுக் காட்டப்படுகின்றது.

குறிப்பாக வங்கிகளின் செயற்பாட்டு அடிப்படைத் தன்மையை பணக் கொள்வனவு, விற்பனை என சுலபமாகக் கூறிவிட முடியும். எனினும், வங்கிகள் தமது வாடிக்கையாளரிடம் இருந்து பெறும் பணத்தைப் பாதுகாப்பாகவும், இலாபமீட்டும் வகையிலும் தகுந்த பயனாளிக்கு வழங்குவதன் மூலம் இரு சாராரும் நன்மையடையும் வகையிலான செயற்பாட்டைக் கருத்திற் கொள்ளும் என்பதை அனைவரும் உணர்வர். அந்த வகையில் கடனுக்கு விண்ணப்பிப்பவரின் பண்புகள் கடந்த கால நிதிச் செயற்பாடுகள் என்பன கடன் வழங்குதலின்போது கருத்திற் கொள்ளப்படும்.

பின்னர் வங்கியின் இலாப வரம்பு மற்றும் வட்டிவீதத்தை விலையிடல் என்பவற்றுடன் இணைத்து கடன் தொகை பற்றி வாடிக்கையாளர் வங்கிகளுக்கிடையான இணக்கப்பாடு ஏற்படுத்தப்படும். இதனைத் தொடர்ந்து கடனை மீளச் செலுத்துவதற்கான தகைமை ஆய்வு செய்யப்படும். இங்கு மேலதிகமான கடன் செலுத்துகையை உறுதிப்படுத்தும் முகமாக ஈடு எனப்படும் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் அடமானம் அல்லது குறித்துரைக்கப்பட்ட சட்ட வரைவு களுக்கு உட்பட்ட உத்தரவாதம் போன்றவை வங்கி சார்பான பாதுகாப்பு அரண்களாக கையகப்படுத்தப்படும். இருப்பினும் தற்கால நிதிச் செயற்பாட்டு மாற்றங்கள் காரணமாக ஈடு அல்லது உத்தரவாதச் செயற்பாடுகளில் இருந்து நீங்கி வங்கிகள் சிறந்த காசுப்பாய்ச்சல் கூற்றின் பகுப்பாய்வின் மூலமும் எதிர்வு கூறப்படும் பாதீட்டின் மூலமும் நிதி வழங்கல்களை மேற்கொள்வதானது சிறிய மற்றும் நடுத்தர முயற்சிகளை மூலதன நெருக்கடியில் இருந்து விடுவிப்பதாகவும், புதிய உற்பத்தி மற்றும் சேவைச் செயற்பாடுகளின் ஊடாகப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதாகவும் அமைகின்றன. இருந்தபோதிலும் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை உறுதி செய்தல் என்பது, மிகவும் கடினமான ஒரு மரபு ரீதியி லிருந்து விடுபட்டுச் செல்லுதலின் பக்க நிலை மையை வெளிப்படுத்துவதாகவே அமை கிறது.

குறிப்பாக வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் நிதி நெருக்கடிகளின் நேரடியான பாதிப்புகள் வங்கிகளையே சென்றடைகின்றன. அந்த வகையில் தமது வாடிக்கையாளர்களின் நலன்களைப் பேணுதல் என்பது வங்கிகள் அவசியமாகப் பின்பற்ற வேண்டிய கடமைப்பாடுகளாகவே கருதப்படுகின்றன. இன்றைய நடைமுறைச் சிக்கல் மிகுந்த நிதி நெருக்கடிச் செயற்பாட்டின் உக்கிரத்தை குறைப்பதற்கும், தவிர்ப்பதற்கும் வங்கிகள் பல்வேறு வகைப்பட்ட சலுகைகள் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுகின்றன.

வங்கிகள் கடன் கொடுத்தல் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் தறுவாயில் இருந்து , பின்னரான மேற்பார்வை மேற்கொள்ளும் செயற்பாடுகளுக்கென வெவ்வேறு செயற்பாட்டு திட்டங்களையும், ஆலோசனை முறைமைகளையும் கொண்டுள்ளன. அந்த வகையில் கடன் திட்டங்களின் கருணைக் காலத்தை அறிமுகப்படுத்தல் குறித்த கால அட்டவணையின் பிரகாரம் கடன் செலுத்துதல் (குறிப்பாக விவசாயக் கடன்கள் ஆறுமாத கால தவணை அடிப்படையில் வழங்கப்படுவதைக் குறிப்பிடலாம்.) அரச நிதியீட்ட கடன்களை முன்கூட்டியே நெகிழ்ச்சித் தன்மையின் அடிப்படையில் வழங்குவதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

இவற்றை விட மோசமான நிதி நெருக்கடி காரணமாக அல்லலுறும் கடனாளிகளுக்கு, கடன் ஒழுங்கமைப்பு, மீளச் செலுத்தலை மீள அட்டவணைப்படுத்தல், தொகைக் கழிப்பு, கடன்களை காலம் தாழ்த்திச் செலுத்துவதற்கான வசதிகள், மீள நிதியீட்டம் செய்தல் என நிதியியல் செயற்பாட்டு நிபுணத்துவம் மிக்க முறைமைகளினூடாக வாடிக்கையாளரின் நலன்களைப் பல்வேறு நெகிழ்ச்சித் தன்மைகள் ஊடாகப் பாதுகாக்க முனைகிறது. மேலும் தக்க சமயங்களில் இலவச நிதியியல் ஆலோசனைகளை வழங்குதல், உத்தரவாதங்களை வழங்குதல், இடைமுகவர்களாகச் செயற்படுதல், காப்புறுதி வழங்கல் போன்ற நேரடி நிதிசார் செயற்பாடுகளின் மூலமாக வாடிக்கையாளரின் நலன்களைப் பேணுவதில் அக்கறை செலுத்துகின்றன.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பயனாளிகள் தமது நம்பகத் தன்மை மற்றும் நேர்மை நிலைமையை உச்சமாக வெளிப்படுத்தக் கடமைப்பட்டுள்ளனர். வேறுபட்ட காரணிகளால் நிதி நெருக்கடிகள் ஏற்பட்டிருப்பினும் அவற்றின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்துதல் என்பது கடன்பெறுநர் மற்றும் பயனாளிகளின் அடிப்படைக் கடமையாக கருதப்படுகிறது.

மேலும் கடனின் நோக்கம், பெற்ற கடனின் நிதியை குறித்த தேவைக்கு பயன்படுத்தும் தன்மை, உரிய தவணையில் கடன்களை மீளச் செலுத்துவதற்கு ஏற்ற வகையில் நிதியியல் நன்னடத்தைகளைப் பேணுதல், கணக்கறிக்கைகள் மற்றும் பதிவுகளைப் பேணுதல், வியாபார நிதியியல் சார்ந்த அறிவுகளைப் பெறுதல், உற்பத்தி சேவைத் தரம் மற்றும் வாடிக்கையாளரின் தேவைகளைப் புரிந்து கொள்ளுதலும் வினைத்திறன் மிக்க நிபுணத்துவம் வாய்ந்த ஆற்றல் மிக்க தொழிலாளர் திறன்களை மேம்படுத்தல், பயிற்சி, அனுபவம் மற்றும் கற்றல் முறைமைகள் மூலம் நவீன வங்கியியல் செயற்பாடுகளுக்கு உள்வாங்கப்படுதல் என பல்வேறுபட்ட காரணிகளை கருத்திற் கொள்ள வேண்டிய தேவை, காலத்தின் மாற்றம் காரணமாக வாடிக்கையாளர்களுக்கு அவசியமாக வேண்டப்படுகின்றன.



மேலும் குறித்த நெருக்கடிகளை தம் வங்கியாளர்களுடன் பகிர்தலும், பரஸ்பர தொடர்பாடல்கள் மூலம் ஆலோசனைகளை பெறுதல் மற்றும் மாற்று வழி உதவிகளை நாடுதலும் பயனாளிகள் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகளாகக் கொள்ளப்படுகின்றன.

இதற்கேற்றாற் போல வங்கிகளும் தமது வாடிக்கையாளர் நலன்களைப் பேணுவதில் உண்மை நிலைமைகளை வெளிப்படுத்தல்,

"குறிப்பாக வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் நிதி நெருக்கடிகளின் நேர . டியான பாதிப்புகள் வங்கிகளையே சென்றடைகின்றன. அந்த் வகையில் தமது வாடிக்கையாளர்களின் நலன்களைப் பேணுதல் என்பது வங்கிகள் அவசியமாகப் பின்பற்ற வேண்டிய கடமைப்பாடுகளாகவே கருதப்படுகின்றன.

வெளிப்படைத் தன்மை, தனிநபர் இரகசியம் பேணுதல், நிதி மற்றும் நிதிசார் ஆலோசனை வழங்குதல், தகுந்த காப்புறுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பயிற்சிப் பட்டறைகள் மற்றும் அறிவியல் கூட்டங்களை நடத்துதல், இடர் முகாமைத்துவத்தை பேணும் முகமாக பல்வேறுபட்ட இடர் குறைப்பு, தவிர்ப்பு முறைகளைக் கையாளுதல், சட்ட ரீதியான பணக் கொடுக்கல் வாங்கல்களின் அவசியம் என வாடிக்கையாளர் நலன் பேண் செயற்பாடுகளை மேற்கொள்ளும் கடமைப்பாடுகளைக் கொண்டுள்ளன.

எனினும் வேண்டுமென்றே கடன்களை செலுத்த மறுப்பவர்கள் மற்றும் பல்வேறு நெகிழ்ச்சிகளுக்கும் , சலுகைகளுக்கும் அப்பாலும் கடன்களை மீளச் செலுத்தாத நபர்கள் அல்லது தமது கடப்பாடுகள் பற்றி அக்கறையையோ, நம்பிக்கைத் தன்மையையோ வெளிக்காட்டாத கடனாளிகளுக்கு' எதிராக வங்கிகள் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படு கின்றன. சில வேளைகளில் கடனுக்கான பிணையாளிகளும் இந்த நடவடிக்கைகளால் பாதிப்படையலாம். சட்ட நடவடிக்கைகள் ஆனது கேள்விக் கடிதம், இணக்க சபைக்குச் செல்லுதல், கடன் அறவீட்டு நடவடிக்கைகள் என்ற பல்வேறு நிதிசார் முறைமைகள் ஊடாக முன்னெடுக்கப்படுவதோடு இந்த முயற்சிகள் பயன ளிக்காத சந்தர்ப்பத்தில் தன்னிச்சையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வங்கிகளுக்கு உரிமை உள்ளது என்ற உண்மையைக் குறிப்பிட்டாக வேண்டும்.

எனினும் இத்தகைய நடவடிக்கைகள் இறுதியானதும், வேறு மாற்று வழிகள் இல்லாத சந்தர்ப்பங்களில் நடைமுறைப் படுத்தப்படுவதோடு இவை வங்கி மற்றும் வாடிக்கையாளர் நல்லுறவையும் பாதிக்கும் செயற்பாடுகளாக மாறுவதைக் கடந்தகால அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேண்டிய உதவிகள் மேல் அதிகாரிகள் மூலம் கிடைக்கும். பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும்.



**இடபம்:** எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் நோய்கள் வருவதைத் தடுக்கலாம். வீண் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. தாராளமாக பணம் செலவு செய்து தேவையானவற்றை வாங்குவீர்கள். மனதில் உற்சாகம் பிறக்கும். தேவையான உதவிகளும் கிடைக்கும்.



**மிதுனம்:** பொறுப்புகள் அதிகரிக்கும். வாழ்வில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் கூடும். செல்வம் சேரும். வெளியூர்ப் பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது.



**கடகம்:** திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் போது கவனம் தேவை. தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் கூடும். கூட்டுத் தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலைச் சுமை இருக்கும். எப்படியும் செய்து முடித்து நல்ல பெயர் வாங்கி விடுவீர்கள்.



**சிங்கம்:** குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடக்கும். நிம்மதி ஏற்படும். குடும்ப உறுப்பினர்கள் பற்றிய கவலைகள் நீங்கும். குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பார்கள். உறவினர்கள் வருகையும் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள்.



**கன்னி:** பெண்களுக்கு வீண் அலைச்சலும் எதிர்பாராத செலவும் உண்டாகும். கவனம் தேவை. முயற்சிகள் தாமதப்படும். வழக்கத்தை விட கூடுதல் நேரம் ஒதுக்கி உழைத்தால் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள்.



**துலாம்:** உடைமைகளைக் கவனமாகப் பாதுகாத்துக் கொள்வது நல்லது. தொழிலில் முன்னேற்றம் காணத் தேவையான பணிகளில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலை களில் அலைச்சல் இருக்கும். ஆனால் செய்த வேலைக்கு நல்ல பயனை எதிர்பார்க்கலாம்.



**விருச்சிகம்:** நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகளை, இலகுவாகக் கையாண்டு சமாளிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. குழந்தைகள் மூலம் மகிழ்ச்சி உண்டாகும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.



**தனுசு:** எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் தாமதம் ஏற்படலாம். வீண் அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. அடுத்தவர்களால் இருந்த தொல்லைகள் குறையும்.



**மகரம்:** தொழில், வியாபாரம் தொடர்பான விடயங்களில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பயன் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலக வேலை தொடர்பான கவலை ஏற்பட்டு நீங்கும். மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும்.



**கும்பம்:** குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கலாம். உறவினர்களிடம் நிதானமாகப் பேசுவது நல்லது. கோபத்தைக் குறைத்து நிதானமாகப் பேசுவதன் மூலம் நன்மை ஏற்படும். எதிலும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.



**மீனம்:** கடுமையாக உழைத்தால் மட்டுமே வெற்றிகளைக் குவிக்க முடியும். பணப் பற்றாக்குறையால், குடும்பத்தாரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாமல் போகும். இதனால் குடும்பத்தினரின் வெறுப்புக்கு ஆளாக நேரும். உங்கள் ஆரோக்கியமும் நலிவு காண நேரிடும்.

## நாளை

**சித்திரை-21 ஞாயிற்றுக்கிழமை | 04.05.2014**

திதி: பஞ்சமி பி.ப.03.33 வரை
நட்சத்திரம்: திருவாதிரை பி.ப.03.55 வரை

சுபநேரம்: 08-56.10.26 வரை
இராகுகாலம்: 04.26-05.56 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து...



### மனிதனின் உண்மை இயல்பு


மனிதன் தன் புலன்களிடம் பெருமளவில் பற்று வைத்திருக்கிறான். மனிதன் தான் வாழும் இந்த வெளி உலகத்தை உண்மை என்று எவ்வளவுதான் நினைத்தாலும், தனி மனிதர்களின், இனங்களின் வாழ்க்கையில், அவர்களை அறியாமலேயே, 'இது உண்மை தானா?' என்ற கேள்வி , அவர்கள் மனத்தில் ஏதாவது ஒரு சமயத்தில் எழத்தான் செய்யும்.

புலன்கள் நம்பத் தகுந்தவைதானா என்று எண்ண ஒரு நொடிநேரம் கூட அவகாசம் இல்லாத, ஒவ்வொரு நொடியும் ஏதாவது ஒரு புலனின்பத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மனிதனுக்குக் கூட மரணம் வந்து விடுகிறது. அப்போது அவன் 'இது உண்மை தானா?' என்று கேட்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. சமயம் இந்தக் கேள்வியில்தான் ஆரம்பிக்கிறது ; இதன் பதிலில்தான் முடிகிறது.

வரலாறும் கூட நமக்கு உதவ முடியாத மிகப் புராதன காலத்தில், புராணங்களின் மர்மமான ஒளியில், நாகரிகத்தின் மங்கலான அந்தி வெளிச்சத்தில், இதே கேள்விதான் கேட்கப்பட்டது. "இது என்ன ஆகிறது? எது உண்மை?" உபநிடதங்களில் ஒன்றானதும், மிகவும் கவிதை நயம் கொண்டதுமான கடோபநிடதம் இந்தக் கேள்வியுடன் தொடங்குகிறது.

"ஒரு மனிதன் இறந்தவுடன், விவாதம் ஒன்று எழுகிறது. அவன் அடியோடு அழிந்துவிட்டான் என்று ஒரு சாராரும், அவன் இன்னும் உயிரோடிருக்கிறான் என்று இன்னொரு சாராரும் அடித்துச் சொல்கிறார்கள். இதில் எது உண்மை?" இந்தக் கேள்விக்குப் பல பதில்கள் சொல்லப்பட்டுள்ளன. மனோதத்துவம், தத்துவம், சமயம் இவை மூன்றும் இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் பதில்களால் நிரம்பியுள்ளன. அதேவேளையில் இதை அடக்க முயற்சிகள் நடந்துள்ளன. "எல்லாவற்றையும் கடந்தது எது? எது உண்மை?" என்று கேட்கும் மனத்தின் அமைதியற்ற தன்மையையே தடுத்து நிறுத்த முயற்சிகள் நடந்துள்ளன. ஆனால், மரணம் என்பது இருக்கும்வரையில், இந்த அடக்குமுறைகள் எல்லாம் தோல்வியிலேயே முடியும்.

## சூரிய ஒளி மூலம் மண்ணெண்ணெய் ஜேர்மன் ஆராய்ச்சியாளர்கள் சாதனை



ஜேர்மன் மற்றும் சர்வதேச ஆராய்ச்சியாளர்கள். நீர். காபனீர்ஒக்சைட் மற்றும் சூரிய ஒளி மூலம் மண்ணெண்ணெய் தயாரிக்கும் முறையில் வெற்றி கண்டுள்ளனர்.

ஜேர்மன் விண்வெளி மையத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் முற்றிலும் புதுப்பிக்கத்தக்க ஜெட் எரிபொருளை உற்பத்தி செய்ய முயற்சி எடுத்தனர்.

அதனை அடுத்து அவர்கள் நீர், காபனீர்ஒக்சைட் மற்றும் சூரிய ஒளி வைத்து மண்ணெண்ணெய் தயாரிக்க முடியும் என்று நிரூபித்துள்ளனர்.

மேலும் ஆராய்ச்சியாளர்கள் இந்த திட்டம் பாதுகாப்பானது என்றும், விமான எரிபொருள் மட்டுமன்றி, டீசல், பெற்றோல், அல்லது பிளாஸ்ரிக் போன்றவற்றைத் தயாரிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளனர்.

நான்கு வருடங்களாக திட்டமிட்ட இந்த ஆய்வில், SOLAR JET எனப் பெயரிடப்பட்ட சூரியஒளியைப் பயன்படுத்தி உலோகம் கொதிக்க வைக்கப்படுகின்றது. அந்த உலை 700°C வெப்பத்தை நெருங்கிய பின் அதில் நீர் மற்றும் காபன் மோனோக்சைட் செலுத்தப்படுகிறது. இதனால் அது ஹைட்ரஜன் மற்றும் காபன் மோனோ ஒக்சைட் எரிவாயுவாக மாறுகிறது.

பின்னர் இந்த எரிவாயுவை ஒரு ஷெல்லில் (SHELL) அழுத்தி அதனை வழக்கமான மண்ணெண்ணெய் போன்ற ஹைட்ரோகார்பன் எரிபொருளாக மாற்றுகின்றனர்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | 4 | | | | | 9 | |
| 7 | 5 | | | 2 | | | | |
| 2 | | | 5 | 9 | 4 | 7 | | |
| | 4 | | 1 | 6 | 3 | 8 | | |
| | 7 | | 9 | | 2 | | 3 | |
| | | 3 | 4 | 5 | 7 | | 2 | |
| | | 7 | 8 | 4 | 5 | | | 6 |
| | | | | 1 | | | 5 | 9 |
| | 1 | | | | | 4 | | 7 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 5 | 2 | 9 | 3 | 6 | 4 | 8 |
| 4 | 3 | 6 | 7 | 1 | 8 | 2 | 5 | 9 |
| 9 | 2 | 8 | 5 | 4 | 6 | 1 | 7 | 3 |
| 6 | 9 | 7 | 4 | 3 | 1 | 5 | 8 | 2 |
| 8 | 5 | 4 | 6 | 2 | 9 | 7 | 3 | 1 |
| 2 | 1 | 3 | 8 | 7 | 5 | 4 | 9 | 6 |
| 7 | 8 | 1 | 9 | 6 | 4 | 3 | 2 | 5 |
| 5 | 6 | 2 | 3 | 8 | 7 | 9 | 1 | 4 |
| 3 | 4 | 9 | 1 | 5 | 2 | 8 | 6 | 7 |

### கணினிக்கு முன் அதிக நேரம் இருந்தால்

# பார்வைக் குறைபாடு, கழுத்து வலி ஏற்படும்



கணினியில் தொடர்ந்து பணியாற்று பவர்களுக்குக் கழுத்து வலி மற்றும் பார்வைக் குறைபாடு ஏற்படும் அபாயம் அதிகம் உள்ளது என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கண் பாதிப்பு**

இமைக்காமல் அதிக நேரம் கணினித் திரையை பார்த்துக் கொண்டிருப்பதால் கண் அழுத்தம், விழி உலர்வு நோய் ஏற்படுகிறது. அதிக வெளிச்சமான திரையை அதிக நேரம் உற்றுப் பார்ப்பது கண்களை மிகவும் பாதிக்கிறது. இதை மிகச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இதன் ஆபத்தை மெது மெதுவாக உணருமுன்னர் பார்வையை நிரந்தரமாக இழக்க நேரிடும். கணினி இருக்கும் அறையில் ஓரளவு வெளிச்சம் இருக்க வேண்டும். அடிக்கடி கண்ணை இமைப்பது நல்லது. இடைக்கிடை கண்ணை மூடி கண்ணுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். அடிக்கடி திரையிலிருந்து பார்வையை விலக்கி தூர உள்ள பொருளையோ பொருள்களையோ பார்க்க வேண்டும்.

**முதுகு வலி**

நல்ல வசதியான இருக்கை, சரியான உயரத்தில் இருக்க வேண்டும். முதுகை வளைக்காமலும் திரும்பாமலும் நேராக உட்கார்ந்திருக்க வேண்டும்.

**சமூகப் பாதிப்பு**

எந்தநேரமும் கணினியிலேயே நேரத்தைச் செலவிட்டால் மனைவி, குழந்தைகள், நண்பர்கள் போன்ற நம்மைச் சார்ந்தவர்களிடம் செலவிட நேரம் கிடைப்பதில்லை. இது அவர்களை நம்மிடமிருந்து பிரித்து பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கும். தினசரி கொஞ்ச நேரமாவது கணினியை மறந்து நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்காக நேரத்தை ஒதுக்க வேண்டும்.



# அறிவுத்திறனை அதிகரிக்கும் வெண்டிக்காய்



வெண்டிக்காய் பெரும்பாலான மக்களால் விரும்பி உண்ணத்தக்க ஒரு காய்கறி வகை. வெண்டிக்காய் இலை, தண்டு அனைத்துமே மருத்துவக் குணம் கொண்டவை. வெண்டிக்காயைச் சாப்பிட்டால் அறிவு கூடும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

தோல் வறட்சியைப் போக்கவும், உடலுக்குக் குளிர்ச்சியைத் தருவதற்கும், உடலைப் பளபளப்பாக மாற்றுவதற்கும் ஓர் அரிய மருந்தாக வெண்டிக்காய் பயன்படுத்தப்படுகிறது.

வெண்டிக்காயை நறுக்கித் தண்ணீரில் போடக் கூடாது. ஏனெனில் அதில் உள்ள கோழைத் திரவம் வெளியேறிவிடும். இருதய நோயாளிகளுக்கு சிறந்த மருந்தாகவும் வெண்டிக்காய் விளங்குகிறது.



## பாட்டுப்பாடி கடத்தல்காரரிடமிருந்து தப்பிய சிறுவன்



எரிச்சலூட்டும் வகையில் பாடல்களைப் பாடி கடத்தல்காரர்களிடமிருந்து சிறுவன் ஒருவன் தப்பிய சம்பவமொன்று ஜோர்ஜியாவில் இடம் பெற்றுள்ளது.

ஜோர்ஜியாவின் அட்லாண்டா பிரதேசத்தில் வசித்து வரும் வில்லி மிரிக் என்ற 10 வயது சிறுவனே இவ்வாறு கடத்தல்காரர்களிடமிருந்து தப்பியுள்ளான். கொள்ளைக்காரர் கும்பலொன்று இந்தச்சிறுவனைக் கடத்தி 3 மணித்தியாலங்கள் காரொன்றினுள் அடைத்து வைத்திருந்தது.

இதேவேளை, குறித்த சிறுவனின் குடும்பத்தாரிடம் தொடர்புகொண்டு சிறுவனைக் கடத்தி விட்டதாகவும் ஒருதொகைப் பணத்தைக் கொடுத்தால் மட்டுமே சிறுவனை உயிருடன் விடுவிக்க முடியுமென்றும் கூறியுள்ளனர்.

இந்தநிலையில் தான் கடத்தப்பட்டதைப் பொருட்படுத்தாத சிறுவன் எரிச்சலூட்டும் வகையில் தொடர்ந்து 3 மணித்தியாலங்கள் காரினுள் இருந்தபடி பாடல்களைப் பாடியுள்ளான்.

சிறுவனின் தொந்தரவைத் தாங்க முடியாத கடத்தல்காரர்கள், கடத்தப்பட்ட விடயம் தொடர்பில் ஒருவருக்கும் எதையும் கூறக்கூடாது என்று எச்சரித்துவிட்டு சிறுவனை காரிலிருந்து தள்ளிவிட்டுள்ளனர். காரின் கதவைத்திறந்து என்னை வெளியே தள்ளிவிட்டு, யாரிடமும் சொல்லாதே என்று கடத்தல்காரர்கள் கூறினர் என்று குறித்த சிறுவன் அந்த நாட்டு ஊடகங்களுக்குத் தெரிவித்தான்.

# நாய்கள் நக்குவதற்கான காரணம் என்ன?

வீட்டில் செல்லப்பிராணிகள் என்றாலே ஏராளமானவர்களது வீடுகளில் அதிகமாக வளர்க்கப்படுவது நாய் தான். ஏனெனில் நாய்கள் நன்றியுடன் நடப்பதுடன், நல்ல துணையாகவும் இருக்கின்றன.

அப்படிப்பட்ட நாயை வளர்க்கும் போது, நாயிடம் உள்ள ஒரு பழக்கம் நம்மைக் கண்டவுடன் ஓடி வந்து நம்மை நக்குவது ஆகும்.

இந்த நாய்கள் ஏன் நக்குகின்றன என்று தெரியுமா?

குட்டி நாய்கள் பசிக்கும்போது, அதை வெளிப்படுத்து வதற்கு நக்க ஆரம்பிக்கும். எனவே உங்கள் வீட்டில் குட்டி நாய் இருந்தால், அது உங்களை நக்க ஆரம்பித்தால், அதற்கு பசி என்று புரிந்து கொண்டு, அதன் பசியை போக்குங்கள். நாய்கள் கூட மன அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றன.



இத்தகைய மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு, நரம்பு மண்டலத்தைச் சாந்தப்படுத்துவதற்கு, நாய்கள் தம்மைத் தாமே நக்க ஆரம்பிக்கின்றன. மனிதனின் உடலில் சுரக்கும் உப்பின் சுவையானது நாய்களுக்கு பிடிக்கும். அதன் காரணமாகவும், நாய்கள் அவ்வப்போது மனிதர்களின் உடலில் நக்குகின்றன.


நீங்கள் வெளியே சென்று விட்டு வீட்டுக்குள் நுழைந்தால், உங்கள் வளர்ப்பு நாய் ஓடி வந்து, உங்களை நக்க ஆரம்பிக்கும். ஏனெனில் அது உங்களை அவ்வளவு நேசிக்கிறது. எனவே நீங்கள் வந்த சந்தோஷத்தை நக்குவதன் மூலம் வெளிப்படுத்துகிறது.

நாய்களுக்கு காயம் அல்லது வலி இருந்தால், அவற்றைச் சரி செய்ய, அவை தம்மைத் தாமே நக்கிக் கொள்கின்றன. ஏனெனில் நாய்களின் எச்சிலில் பக்டீரியாக்களைக் கொல்லும் நொதிகள் உள்ளன. இருப்பினும் அதிகமாக நக்கும் போது, அது காயத்தை இன்னும் பெரியதாக்கிவிடும்.

எனவே நாய்கள் அப்படிக் காயத்தின் மீது நக்க ஆரம்பித்தால், உடனே மருத்துவரிடம் கொண்டு சென்று சிகிச்சை அளித்து கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மரண அறிவித்தல்

### சவரிமுத்து சைமன்பிள்ளை



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.23, பெரியதம்பனை, மடுக்கோவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து சைமண்பிள்ளை (30.04.2014) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானம்மாவின் அன்புக் கணவரும், மேரிரஞ்சினி, சேவியர் மரியதாஸ், றெஜி ராஜேஸ்வரன், அன்ரன் ஜெயபாலன், ஞான தயாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை நாளை (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் குருசு கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல். 23, பெரியதம்பனை,
மடுக்கோவில், வவுனியா.
(43279) (10.6)

தகவல் :
குடும்பத்தினர்.

## ஸ்கந்த மகாயாகம்

காரைநகர், மே 3

ஸ்கந்த மகாயாகம், காரைநகர் புகலி சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 15ஆம் திகதி வியாழக்கிழமை வரை பத்துத் தினங்கள் நடைபெற உள்ளது.

5ஆம் திகதி திங்கட்கிழமை ஆலயத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று மீண்டும் இரவு ஆலயத்தை வந்தடையும். ஸ்கந்த மகாயாக ஆரம்பக் கிரியைகள் 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.25 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஆரம்பமாக உள்ளது. தினமும் காலை, மாலை யாகம் நடைபெற்று மயூர பூசையும் இடம்பெறும். எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு விநாயக வழிபாட்டுடன் ஸ்கந்த மகாயாக ஹோமம் இடம்பெறும். மாலை விசேட பூசையுடன் முருகப்பெருமானின் வீதியுலாவும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

இவ்வாலயத்தில் கடந்த வருடம் தென்னிலங்கை மற்றும் பாகிஸ்தானிலிருந்து குதிரைகள் கொண்டு வரப்பட்டு அஸ்வமேத மகாயாகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாண்டும் ஸ்கந்த மகாயாகத்துக்கும் மயூர பூசைக்குமாக மயில்கள் ஆலயத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (வ-250)



யாழ். மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு சபையின் அலுவலக வளாகத்தில் புதிய கட்டடம் ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா உட்பட மாநகர சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். சுமார் ஐந்து மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. (ஓ-7)

## பாலர் பாடசாலை விளையாட்டு விழா

நெல்லியடி சனசமூக நிலைய சன்மார்க்க சபை பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா பாடசாலை முன் றிலில் இன்று சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நெல்லியடி நிலையத் தலைவர் சு.கிருஷ்ணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக புற்றளை மகா வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-35)

## இளைஞரை வழிமறித்துத் தாக்குதல்

தென்மராட்சி, மே 3

தமது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் வீட்டில் உள்ள பொருள்களை சேதப்படுத்துவதாக அறிந்து ஓடி வந்த இளைஞரொருவரை வழிமறித்த வேறு சிலர் அந்த இளைஞரைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை இரவு நாவற்குழியில் இடம்பெற்றது. விளையாட்டு மைதானத்தில் குறிப்பிட்ட இளைஞருடன் ஏற்பட்ட வாக்குவாதத்தின் எதிரொலியாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான நாவற்குழி ஐந்து வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த தம்பிராசா நிஷாந்தன் (வயது - 22) என்பவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (வ-9)

## மரண அறிவித்தல்கள்

### கனகசபை நாகேந்திரன்

(ஓய்வுபெற்ற சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி)



கடைத்தெரு, முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும் முதலாம் கட்டை ஒழுங்கை, புலோலி வடகிழக்கு, பருத்தித்துறையை வதிவிடமாக வும் கொண்ட கனகசபை நாகேந்தி ரன் 30.04.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரபல வர்த்தகர் கனகசபை-இலட்சுமி அம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், சுப்பிரமணியம் மகாலட்சுமியின் மருமகனும், பரமேஸ்வரி, கனகேந்திரன், சிவனேந்திரன், கமலேஸ்வரி, சுரேந்திரன் ஆகியோரின் அன்பு சகோதரனும், தங்கராசா, செல்வராசா, யோகராசா, ஜெமணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (03.05.2014) சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் கட்டை ஒழுங்கை,
புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை.
077 634 1427
(47602) (10.6)

தகவல்:
நா.தங்கமணி (மனைவி)

## நூல் வெளியீடு

எழுத்தாளர் இ.இராஜேஸ் கண்ணன் எழுதிய இலக்கியத்தில் 'சமூகப்பார்வைகளும், பதிவுகளும்' என் னும் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக் கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு தி.வரதராசன் தலைமையில் வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய ரவீந்திர சர்மா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் சி.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (வ-173)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வம் கந்தையா



அராலியைப் பிறப்பிடமாகவும் வேலணை பள்ளம் புலத்தை வசிப்பிடமாகவும் அராலியில் வசித்து வந்தவருமான திருமதி செல்வம் கந்தையா நேற்று முன்தினம் (01.05.2014) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (01.05.2014) வியாழக்கிழமை அராலியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சி.தியாகராஜா (மருமகன்)
அராலிதெற்கு, அராலி.
021 490 9493
(47547)(6.4)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### மைக்கல் அஞ்சலோ

(ஓய்வுபெற்ற யாழ் மாநகர சபை படவரைஞர்)



இல. 13, சின்னக்கடை வீதி, குருநகர், யாழ்ப்பாணத்தை பிறப்பிட மாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் அஞ்சலோ 29.04.2014 கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியோ மைக்கல்-கொறோ ணம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆசிரியர் லூயிஸ் கிறேசியன்-மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இனசன்சியாவின் (ராஜேஸ்) அன்புக் கணவரும், யூட் கமில்டன், வோல்டர் கலிஸ்ரின், காலஞ்சென்ற மறிலா இராறென் சியா மற்றும் ஒட்றின் விறிங்ரன், பமிலா றெனிற்றா வினோதினி, கலிஸ்ரா (வினோஜன்), கொலற் ஆஞ்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், மரியா எழிலரசி, ஆன் உருத்திரா, டினேஷ் ஆகியோரின் மாமனாரும், யூலியஸ் மங்கையர்க்கரசி, எமில் காலஞ்சென்றவர்களான யூஜின் பிறின்ஸ் எட்வேட் றோய் மற்றும் அஞ்சலி, அருள்நேசன், ஞானசோதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர் களான விக்ரர் ஏணஸ்ட், எஸ்தர்ராணி மற்றும் மேரி ஆன், பொலின் ஜெயராணி மரிய கொல்ற்றா,மேஜாய், விக்னராஜா, கொலின், அல்ஸ்ரன், பவல்ஸ், றீற்றா, அன்னக்கிளி, றஜனி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.05.2014) சனிக்கிழமை கனடாவில் நல்லடக்கம் செய்யப்படும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (03.05.2014) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு புதுமை மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பின்னர் அவரது இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டில் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

13, சின்னக்கடை வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.
(47542)(7.8)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணத்தில் நுண்கலைத் துறையில் பட்டம் பெற்ற நான்கு பெண்களின் ஓவியக் கண்காட்சி கொழும்பில் இடம்பெறவுள்ளது. கடந்த மாதம் 27 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தக் கண்காட்சி இம்மாதம் 18 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

அச்சம், கவலை மற்றும் இதர விடயங்கள் தொடர்பான ஓவியங்களை கொழும்பு பொறளையிலுள்ள டீஸ்ஸேனநாயக்க மாவத்தையில் மேற்படி தினங்களில் முற்பகல் 11 மணி முதல் இரவு 7 மணி வரை பொது மக்கள் பார்வையிடலாம். (க)

## 10 ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகளில்

அமரர்

### தில்லைநாதன் கெங்காதரன்

(உரிமையாளர் தரன் மரக்காலை, கொக்குவில்)



அன்னைமடியில்
20 ★ 08 ★ 1970

அனைவரும் நெகிழ
03 ★ 05 ★ 2004

03.05.2014

கெங்கா என்ற மங்கா மாணிக்கமே
ஆண்டுகள் தசாப்தம் ஆனாலும்
உங்கள் நினைவுகள் நிசப்தம் இல்லை
மீண்டும் வருவீர் என்று இலவு காத்த கிளியானோம்
என்றும் நீர் எம்முடன் இல்லை என்றாலும்
உம் நினைவதனால் இன்னல்கள் நிறைந்து
இருண்டு போனது ஐயா எம் வாழ்வு
நீயில்லா இந் நீண்ட பயணத்தால்
நெஞ்சம் கலங்குகின்றோம் நினைவு தடுமாறுகின்றோம்.

தரன் மரக்காலை,
நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்

குடும்பத்தினர்.
(47554)(4.6)

உதயன் 03.05.2014



# வடக்கில் ஆசிரியர்கள் சிலரின் சம்பளத்தை நிறுத்த உத்தரவு

## கண்டிக்கிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், மே 3

வடக்கு மாகாணத்தில் நிர்ணயிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதாகவும் அவர்களின் மாதாந்த கொடுப்பனவை மே மாதத்தில் இருந்து நிறுத்துவதற்கான உத்தரவை வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் மாகாணக் கல்விப் பணிப்பாளருக்கு விடுத்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

இதனை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது.

இதுகுறித்து அந்தச் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளமைக்கு அதிபர்களோ, ஆசிரியர்களோ, வலயக் கல்விப் பணிப்பாளர்களோ, மாகாணக் கல்விப் பணிப்பாளரோ காரணமல்லர்.

மாகாணத்தில் உள்ள மாணவர்களின் தொகை மதிப்பீட்டை இன்னும் சீர் செய்யாமல் ஆசிரியர்களின் தொகையை மதிப்பீடு செய்வது பொருத்தமானதல்ல. வழ கப்பட்ட ஆசிரிய நியமனங்கள் அனைத்தும் அமைச்சரவை அங்கீகாரத்துடனேயே வழங்கப்பட்டன.

அதற்காக ஆசிரியர்களின் தொகை அளவுக்கு அதிகமாக உள்ளதாகவும், மேலதிக ஆசிரியர்களின் கொடுப்பனவை நிறுத்துவதற்கான உத்தரவை வட மாகாண பிரதம செயலாளர் விடுத்திருப்பது வேடிக்கையானதாகும். மேலதிகமான ஆசிரியர்கள் யார்? என்பதனை முதலில் கண்டறிய வேண்டும். அவர்களின் நியமனம் யாரால் வழங்கப்பட்டது? நியமனம் வழங்கியது பிரதம செயலாளருக்குத் தெரியாதா? இவ்வாறான கேள்விகளுக்கு விடை தேடமுடியாமல் ஆசிரியர்களின் வேதனத்தை நிறுத்துவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்.

வட மாகாணத்தில் உள்ள அத்தனை ஆசிரியர்களும் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவேண்டி ஏற்படும்.

மே மாத கொடுப்பனவு நிறுத்தப்பட்டால் பிரதம செயலாளர் அலுவலகம் முன்பாக தொடர்ச்சியான முற்றுகைப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதுவரை பல ஆசிரியர்களுக்கு நிலுவைகளை வழங்காமலும், உரிய காலத்தில் பதவி உயர்வுகள், சம்பள அதிகரிப்பு, கடன் வசதிகள் என்பன வழங் காமலும் இருக்கின்ற வட மாகாண அமைச்சு இப்பொழுது கொடுப்பனவை நிறுத்துவதற்கு முயற்சி செய்வது வட மாகாணத்தின் கல்வியை சீர்குலைக்கும் திட்டம் என்றே நாம் கருதுகின்றோம் - என்றுள்ளது. (வ)

## ஓட்டோ மோ. சைக்கிள் விபத்தில் காயம்

தென்மராட்சி, மே 3

சாவகச்சேரி எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக ஓட்டோவொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

ஏ-9 வீதியில் பயணித்த ஓட்டோ சமிக்ஞை எதுவுமின்றி எரிபொருள் நிலையத்துக்குச் செல்லத் திரும்பிய போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண் டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை நிஷான் (வயது-26), சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்த கந்தசாமி முருகையா (வயது-55) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

குறித்த இருவரும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (வ-9)

## வசமாக மாட்டிய திருடன்

யாழ்ப்பாணம், மே 3

நீர்வேலி தெற்கு விவசாயத் தோட்டத்தில் வைக்கப்பட்ட நீர் இறைக்கும் குழாயின் முக்கிய பாகத்தைக் களவாடிச் செல்ல முற்பட்ட ஒருவர் வசமாக அகப்பட்டார்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

குறித்த தோட்டக் கிணற்றில் தண்ணீர் இறைப் பதற்காக வைக்கப்பட்ட குழாயின் முக்கிய பாகத்தை திருடர் குழுவினர் களவாட முயன் றனர்.

அந்த சமயத்தில் விவசாயி ஒருவர் தோட்டத் துக்கு வந்த வேளை திருடர்கள் தப்பி ஓட்டம் பிடித்தனர். இருந்த போதிலும் அவர்களில் ஒருவர் வசமாக மாட்டிக்கொண்டார்.

விவசாயிகளிடம் மாட்டிக் கொண்ட நபருக்குத் தகுந்த கவனிப்பு அளிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார். (வ-17)

# உடற்கூற்று அறிக்கையின் பிரகாரமே குருநகர் பெண்ணின் இறப்பு விசாரணை

## வாராந்த செய்தியாளர் சந்திப்பில் பொலிஸார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 3

குருநகர் பெண்ணின் இறப்பு தொடர்பான உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் இறப்பு தொடர்பான விசாரணைகள் தொடர்பில் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் நேற்று கேட்கப்பட்ட போதே பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

சும்பவம் தொடர்பாக ஏற்கனவே பொலிஸாரிடம் கேட்ட போது பெண்ணின் இறப்பு தொடர்பாக பெற்றோரிடமும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாதிரியார்களிடம் வாய் மொழி மூல முறைப்பாடுகள் பெறப்பட்டுள் ளன. ஆனால் இதனை வைத் துக் கொண்டு பொலிஸாரால் எதுவும் செய்ய முடியாது.

சட்ட வைத்திய அதிகாரியால் கடந்த 23 ஆம் திகதி உடற் கூற்றுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அந்த அறிக்கை யின் பிரகாரமே அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

குறித்த பெண்ணின் இறப்பு தற்கொலையா, கொலையா என்பது தெரியாத நிலையில் அவர் எவ்வாறு உயிரிழந்தார் என்பதை மருத்துவர்களின் அறிக்கைதான் உறுதிப்படுத்த வேண்டும்.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பாதிரியார்கள் மறைக்கல்வி தொடர்பில் குறித்த பெண்ணிடம் தாம் அடிக்கடி தொடர்பில் இருந்ததாகவும் படிப்பு சம்பந்தமாகவே தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தி வந்ததாகவும் சம்பவத்துக்கு 2 வாரங் களுக்கு முன்னரிருந்தே குறித்த பெண் மறைக் கல்வி நிலையத்துக்கு வருகை தரவில்லை என்றும் முறைப் பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் ஆரம்ப கட்ட விசாரணைகளை மேற்கொண்ட போதே கிணற்றில் இருந்து பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. எனினும் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே மேலதிக விசாரணைகளை மேற் கொள்ள முடியும் என்று நேற் றைய செய்தியாளர் சந்திப்பில் பொலிஸார் தெரி வித்தனர். (வ-14)



கொழும்புத்துறை வீதியில் 5 ஆம் குறுக்குச் சந்தியில் நீண்ட காலமாக சேதமடைந்திருந்த வெள்ள வாய்க்கால் மதகு புதிதாக அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது. யாழ்- கொழும்புத்துறை மினிபஸ் போக்குவரத்து மற்றும் பொதுமக்களின் பிரயாண வசதிகள் இதனால் இலகுபடுத்தப்பட்டுள்ளது. (வ-135)

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சை ஜூன் 2 இல்

அச்சுவேலி, மே 3

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைகள் ஜூன் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள ஒன்பது ஆசிரிய கலாசாலைகளிலும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

ஆசிரிய கலாசாலைகளில் பயிற்சி பெற்று வெளியேறும் பயிற்சி ஆசிரியர்களுக்கு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சைகள் இந்த வருடம் இரண்டுவாரகால இடைவெளியில் நடைபெறும். பயிற்சி ஆசிரியர்கள் மே 15 ஆம் திகதி பயிற்சிகள் நிறைவடைந்த நிலையில் வெளியேறி பாடசாலைகளில் நியமனம் பெறவுள்ளனர்.

இவர்கள் 12 பாடங்களுக்குத் தோற்றி பரீட்சையில் சித்தியடைந்த பின்னரே பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டு இலங்கை ஆசிரியர் சேவை தரம் 3-IIக்கு உள்ளீர்ப்பு செய்யப்படுகின்றனர்.

கலாசாலை மட்டத்திலும் கல்வி உளவியல், கல்வித் தத்துவம், வரலாறு, கல்வி அளவீடும் மதிப்பீடும் உள்ளடங்கிய மற்றும் பயிற்சி பெறும் பாடத்துறை ரீதியிலான கற்பித்தல் முறை உள்ளடங்கிய பாடங்களிலும் பரீட்சைகள் பொதுநிலையாக இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்றன.

இந்த வருடம் பயிற்சி முடித்து இரண்டு வார கால இடைவெளியில் இறுதிப் பரீட்சை நடத்தப்படுவதால் பரீட்சைக்குத் தயார் செய்வதற்கு வசதியான நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் பல மாதங்களின் பின்னரே இறுதிப் பரீட்சை நடைபெற்றதால் பரீட்சைக்கு தயார் செய்வதில் பல இடர்பாடுகளை எதிர்கொண்டு வந்தனர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இருந்து இந்த வருடம் பயிற்சியை முடித்துக் கொண்டு 480 ஆசிரியர்கள் வெளியேறுகின்றனர். (ஓ-11)

## சிமெந்து தொழிற்சாலையில் இரும்பு உடைத்த 15 பேர் கைது

யாழ்ப்பாணம், மே 3

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் பகல் வேளையில் இரும்பினாலான உபகரணங்களை உடைத்துக் களவாட முயன்ற 15 பேர் கொண்ட குழுவினரை அவர்களது வாகனம் மற்றும் இயந்திரங்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி மாவிட்டபுரம் பகுதியைச்சேர்ந்த இராணுவத்தினரால் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் வாகனம் மற்றும் இரும்பு உடைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் சந்தேக நபர்களாக 25 பேரையும் கைது செய்துள்ளனர்.

இரும்பு உடைத்தெடுக்க குறித்த பிரதான சந்தேக நபர் சார்ந்த நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டு அதற் கான காலம் முடிவடைந்திருந்த போதிலும் அவர்கள் தொடர்ந்தும் இரும்பு உடைப்பை ,மேற் கொண்டுள்ளனர். பிரதான சந்தேக நபர் மல் வானை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் ஏனையவர்கள் வெளி மாவட் டங்களைச் சேர்ந்தவர்கள் என் றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-86)

# கல்வி நிர்வாக சேவை நேர்முகப் பரீட்சைக்கு தமிழர்கள் 22 பேருக்கு அழைப்பு

அச்சுவேலி, மே 3

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம்III இற்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கு நடத்தப்பட்ட (திறந்த நிலை) போட்டி பரீட்சைகளில் சித்தியடைந்த 140 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். அதில் 22 பேர் தமிழர்கள்.

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளன. திறந்த நிலை மூலம் கல்வி நிர்வாக சேவைக்கு ஆள்தெரிவு செய்யப்படுவதற்கு முதற்கட்ட போட்டிப் பரீட்சைக்கு நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் பேர் வரை தோற்றியிருந்தனர்.

அதில் உரிய வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற 5ஆயிரம் பேர் இரண்டாம் கட்டப் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி இருந்தனர்.

இண்டாம் கட்டப் போட்டிப் பரீட்சையில் உரிய புள்ளிகளைப் பெற்று தகுதிபெற்ற 140 பேர் நாடளாவிய ரீதியில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

திறந்த நிலை போட்டிப் பரீட்சை மூலம் இந்த வருடம் பாட ரீதியிலான பதவி ஆளணிக்கு தெரிவுகள் நடைபெறவில்லை. முழுவதும் பொது நிலை பதவி ஆளணிக்கே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள தமிழர்களின் பெயர் விவரம் வருமாறு:

ரி.ராஜசேகர் (காரைதீவு), என்.வாரணியா (அம்பாறை), ஆர்.ஹம்சத்தனி( யாழ்ப்பாணம்), எஸ்.பாமினி (நீர்கொழும்பு), எஸ்.சுரனு தன் (காரைதீவு), பி.மைதிலி (திருகோணமலை), ரி.தர்மிகா (யாழ்ப் பாணம்), ஜே. ஜெனிற்றன் (வவுனியா) எம்.நீரஜா (நாயன்மார்கட்டு),கே. ராதிகா (கரவெட்டி), ரி.ஜெயந்தன் (திருகோணமலை), எஸ்.ஜனனி (அல்வாய்), வி.நிதர்ஷினி (கல்முனை), ஏ.அஸ்கா (பேராதனை), ஆர்.செந்தில்மாறன் (யாழ்ப்பாணம்), ஏ.சுமதி (கொட்டகல), ஏ.எவோர்ன் (மன்னார்), ஆர்.சுதர்சன் (மட்டக்களப்பு), எம்.தேவேந்திரா (பருத்தித்துறை), ரி.பால்ராஜ் (தும்பளை ), கே.ஜெயந்திமாலா (களுவாஞ்சிக்குடி), எம்.ஜெகதீசன் (வசாவிளான்). (வ-11)

CEYLON THEATRES
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm




Silver 10.15am, 2.15pm, 6.15pm




Bronze 10.30am, 2.30pm, 6.30pm

விசாரணை 021-2227712

www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

மலிவு
கட்டடப்பொருள்கள்
ஆன்லைன் ஸ்ரோரில்.
077 278 8899 (47540) (6.4)
www.ammatraders.com

**வாடகை அறை தேவை**

வவுனியா நகரில் அரச சார்பற்ற துறையில் வேலை செய்பவருக்கு, அமைதியான சூழலில், இரவு உணவுடன் கூடிய, வெளியே சென்று வரக்கூடிய அறை தேவை.

தொடர்பு: 077 633 9403 (41256) (7.6.3)

DMI COMPUTER EDUCATION
COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpack, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS6, Adobe Photoshop, Adobe AfterEffet, Pinnacle Studio,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Advanced Diploma in **Hardware & Networking**

**Java** (for Developers) | **3D-MAX**

முழுமையானதும் தரமானதுமான கணினிக்கல்வி
இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும்
அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம். (TVEC REG.NO P25/0056)

DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, HNB அருகில் Tel. :021-227 0775 |
| சுன்னாகம் | KKS வீதி. NSB அருகில். Tel. :021-224 1970 |

# சமய சந்நிதியில்

காரைநகர், மே 3

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெற உள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை காலை 9.40 மணி தொடக்கம் 10.31 மணி வரை உள்ள சுபவேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ வை. சுப்பிரமணியக் குருக்கள் பிரதிஷ்டா பிரதமகுருவாக இருந்து கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும் நிகழ்வில் ஆசியுரைகளை பிரதிஷ்டா பிரதம குரு வை. சுப்பிரமணியக் குருக்கள், ஆலய ஆதீனகுரு பிரம்மஸ்ரீ கு. சரவணபவானந்தசர்மா, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோர் வழங்குவர். வாழ்த்துரைகளை புலவர் வேகுமாரசாமி, ஓய்வு நிலை அதிபர் ஆ. பாலகிருஷ்ணன், ந. பரமசிவம் ஆகியோர் நிகழ்த்துவர். (வ-250)

# பொதுக் கூட்டம்

வடமராட்சி, மே 3

அல்வாய் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இளங்கோ பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அல்வாய் வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஆண்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (வ-173)

**வீடு வாடகைக்குண்டு**

சங்கம் வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில்
3 அறைகள், இணைந்த குளியலறை மற்றும் சகல
வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 111 6578, 021 222 1956 (47538) (45.6)

**பதவி வெற்றிடங்கள்**

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **சண்றைஸ்**
விளம்பர நிறுவனத்தின்
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணக்
கிளைகளுக்கான கீழ்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

* முகாமையாளர்
* உதவிமுகாமையாளர்
* மேற்பார்வையாளர்

தகைமை: O/L, A/L. ஆர்வமுள்ளவர்கள்

மேலதிக விவரங்களுக்கு அழையுங்கள்
076 657 7512 (சி/47603) (45.6)

**மதுரா அழகுக்கலை பயிற்சி-நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)

பிரைடல் மேக்கப் 4, மேக்கப் 4, கோம் மேக்கப், பேசியல் 20, அல்ட்ரா சொனிக் பேசியல், பிம்பில் ரீட்மென்ட், கறுப்பு காய் அகற்றுதல், ரீபொன்டிங், பேமிங், கேளிங், வன்டே அயனிங், ஸ்டா ரீட்மென்ட், கொட் ஒயில் மசாஜ், பெடிகியூர், மெனிகியூர், நெயில் ஆட், மெகந்தி டிசைனிங், கெயா கலறிங், கெயர் டை, வக்சிங், திரெட்டிங், அடிசனல் மசாஜ், TC சொக்கட் மசாஜ், பிலக் ஸ்பொட் ரீட்மென்ட், கெயா ஸ்டைல்



இவை அனைத்தும் பயில ரூபா 8000/= மட்டுமே
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்.

பயிற்சிக் காலம் - 3 மாதம்
பயிற்சி நிறைவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
★ மகளிர் மட்டும்

பழைய வீதி,
கோப்பாய்.
077 936 2642 (47545)(7.6)

**இரணைப்பாலை புனித பற்றிமா மாதா**
**திருவிழாவும்**
**மாபெரும் கலை நிகழ்வுகளும்**



13.05.2014 காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெறும்

விளையாட்டு நிகழ்வுகள்:

01)சைக்கிள் ஓட்டப்போட்டி ஆண்கள் 70km
(விரும்பிய அனைவரும் பங்குபற்றலாம்)
02)மரதன் ஓட்டப்போட்டி 10km
(விரும்பிய அனைவரும் பங்குபற்றலாம்)

மாலை நிகழ்வாக 2.30 மணிக்கு மைதான விளையாட்டுக்களும் அதனைத் தொடர்ந்து இன்னிசை நிகழ்வுகளும் இடம்பெறும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 12.05.2014 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: தலைவர்: தினேஸ்ராஜ் 077 564 8177
உபதலைவர்: சத்தியராஜ் - 077 962 6892
செயலாளர்: மதன்ராஜ் - 077 534 5240
(41260)(6.4)

# கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மே 3

"வணிகத்துடன் தொடர்புடைய எழுது திறன்களும் வினைத்திறன் மிக்க தொடர்பாடல் திறன்களும்" என்ற தலைப்பிலான இரு நாள் கருத்தரங்கு ஒன்று யாழ். கிறீன் கிறாஸ் ஹோட்டலில் இன்றும் நாளையும் இடம்பெறுகின்றது.

ஊடகத்துறை ஆலோசகர் அஜிதா கதிர்காமர் வளவாளராகக் கலந்து சிறப்பிக்கும் இக் கருத்தரங்கு செல்வி ஜனனி புஷ்பநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

யாழ். மாவட்ட உயர்தர வங்கியாளர்கள் கலந்து கொள்ளும் இச் சிறப்பு கருத்தரங்கு சனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களும் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை நடைபெறும் எனவும் வங்கியாளர்கள் இக் கருத்தரங்கில் கலந்து பெரும் பயன் பெறலாம் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ)

**RALEIGH**

மகளிர்களிற்கான புத்தம்புதிய நவீன
தொழில்நுட்பத்துடன் கூடிய
றலி துவிச்சக்கரவண்டிகள் விற்பனையில் உள்ளன.
வியாபாரிகளிற்கு விசேட கழிவு வழங்கப்படும்.



Ride a Raleigh and feel the Difference
A tradition since 1887

ஆதுஸ் என்ரபிறைசஸ் பிறைவேற் லிமிட்,
30, கன்னாதிட்டிறோட், (சிவன்கோயில் முன்பாக), யாழ்ப்பாணம்.
TP:077 742 7322 (சி/47171)(12.3.6)

**பிரிவுபசார விழாவும் வரவேற்பு நிகழ்வும்**

03.05.2014







சிவபாதசுந்தரம்
சத்தியசீலன்

திருமதி
ஜெயராணி பரமோதயன்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் அபிவிருத்தியில்
பெரும் பங்காற்றி, பூநகரி பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் சென்ற
**சி. சத்தியசீலன்** அவர்களின் சேவையைப் பாராட்டி
பிரிவுபசார விழாவும், அத்துடன் புதிதாக எமது பிரதேச செயலராக
கடமையேற்ற **திருமதி ப. ஜெயராணி** அவர்களை
வரவேற்கும் விழாவும் நடைபெறும் இப் பொன்னான தருணத்தில்
இவர்கள் இருவரையும் வாழ்த்தி, அவர்கள் வாழ்வு
சிறக்க மனப்பூர்வமாக வேண்டுகின்றோம்.

**கிராம மாதர்-கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசம்**
**பச்சிலைப்பள்ளி.** (41258)(10.6)

**மணமக்கள் தேவை**

* 89 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 29பாவ முடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மண மகளுக்கு கனடாவில் அல்லது உள்நாட்டில் பட்டதாரி மணமகன் தேவை.
* 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 26¼ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு பட்டதாரி மணமகன் ஆஸ்திரேலியாவில் அல்லது உள்நாட்டில் தேவை.
* 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20 பாவ முடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற எக்க வுண்டன் மணமகனுக்கு StudentsVisa மணமகள் அல்லது உள்நாட்டில் படித்த அழகான மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 2 இல் செவ்வாய் 42 பாவமுடைய விவசாய Officer மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
* 79 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 36 பாவமுடைய BBA முடித்து முகாமைத்துவ உதவியாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகள் தேவை.
* 81 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 23¼ பாவமுடைய லண்டன் பிரஜாவுரிமை பெற்ற சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. (43726) (4.6.3)

தொடர்பு: கமலக்கண்ணன் திருமண சேவை
இல.435/3, கோயில் வீதி, நல்லூர். 077 607 0862

**Freezer லொறி விற்பனைக்கு**

Isuzu Lorry. Freezer, 14½', 2012 Registered.
Cruise Control. Manual. AC/PS/ PM,
மிகக் குறைந்த பாவனை. புதியது போன்றது.
(47541) (6.4) தொடர்பு: 077 344 4801

**வீடு வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, புத்தூர்சந்தி
அருகில் 6 அறைகள் கொண்ட வீடு
சகல வசதிகளுடன்
வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 956 3255 (47545)(6.4)
குடும்பத்தவர்களுக்கு மட்டும்

**அறைகள் நாள் வாடகைக்கு**

ஒருவருக்கு 500/=, இருவர் 1000/=,
நால்வர் 2000/=(Attached Bathroom)
Hotel Villa City
422 Galle Road, Wellawatte
T.P: 072 255 2222

# யாழ். தட்டாதெருச் சந்தியில் வீடு எரிந்து உடைமைகள் நாசம்

## நேற்று முற்பகல் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 3

யாழ். நகரில் கே.கே.எஸ். வீதியில் தட்டாதெருச் சந்திக்கு மிக அருகிலுள்ள வீடு ஒன்று எரிந்து அதன் ஓர் அறையில் இருந்த உடைமைகள் அனைத்தும் கருதி நாசமாகிவிட்டன.

குறித்த வீட்டில் ஓர் அறையை வாடகைக்கு அமர்த்தி அதில் தங்கியுள்ளது நகைத் தொழிலாளி ஒருவரின் குடும்பம். அவர்களினது அறையே நேற்றுப் பகல் முழுவதுமாக எரிந்து பணம், நகைகள் உட்பட அனைத்துப் பொருள்களுமே அழிவடைந்து போய் விட்டன.



எரிந்த வீட்டு உடைமைகள்

மின்னொழுக்குக் காரணமாகவே வீடு தீப் பிடித்ததாகக் கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது அருகில் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் தீயை அணைத்தனர். அந்தச் சமயம் வீட்டில் குறித்த அறையில் எவரும் இருக்கவில்லை. வீட்டுக்காரர் வெளியில் சென்றிருந்தார். அவரது மனைவியும் தாயாரின் வீட்டுக்குப் போய்விட்டார். தகவல் தெரிந்து இருவரும் வந்து சேர்ந்தனர். அவ்வேளை, எல்லாமே எரிந்து கருகிப் போயிருந்தன.

அறையிலிருந்த நகைகள், பணம், தளபாடங்கள், நகை வேலைக்குரிய தராசு, அடையாள அட்டைகள் மற்றும் பொருள்கள் அனைத்துமே அழிந்துபோய் விட்டதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதேவேளை, தீப் பற்றிய சமயம் அதனை அணைக்க பாடுபட்ட தொழிலாளர்கள், யாழ்ப்பாணம் மின் சார நிலையத்துடன் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது அவர்கள் தொடர்பை துண்டித்து விட்டதாகக் குறிப்பிட் டனர். (ஒ-21)

ஓம் வீரா; விளைய பிரமமே நமஹ

**புது மண்டப புகுவிழா அழைப்பு**
**"ஆதவன்" மண்டபம்**

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான ஜய வருடம் வைகாசி மாதம் 20 ஆம் நாள் இன்று (03.05.2014) சனிக்கிழமை மு.ப. 11.00 மணி முதல் 01.00 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எங்களால் புதிதாக அமைக்கப்பெற்ற

**ஆதவன் மண்டபம்**

என்னும் புதிய மண்டபத்தை இறைவன் திருவருளுடன் திறப்புவிழா இடம்பெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து புதுமண்டபத்தை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய விருந்துபசார நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்தை வீதி,
ஆவரங்கால் வடக்கு. (47607)

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே நாடும்
**ஆதவன் மண்டப நிர்வாகத்தினர்.**

உ
குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**யாழ்ப்பாணம்**
**மனவளக்கலை மன்றம் வழங்கும்**
**சிறப்பு யோகா வாழ்வு பற்றிய பயிற்சிகள்**
**அருட்தந்தை தத்துவஞானி வேதாத்ரி மகரிஷி**
**அவர்களால் வடிவமைக்கப்பட்ட**
**முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை**
**யோகா பயிற்சிகள்**

உலக மக்கள் அனைவரும் அமைதியாக வாழ வழி செய்திட வேண்டும் என்ற பெருநோக்குடன் இம்மனவளக்கலை யோகாப்பயிற்சிகளை பல வருட ஆராய்ச்சிகளுக்குப்பின் அருட்தந்தை வேதாத்ரி மகரிஷி அவர்களால் எமக்கு அளிக்கப் பட்டவையே இந்த அற்புதமான எளிய முறை உடற்பயிற்சிகளாகும்.

**காலம்:**
**05.05.2014** திங்கள்
மாலை 5.30 மணி தொடக்கம்
(அறிமுக உரையும், காயகல்ப பயிற்சியும்)
**06.05.2014, 07.05.2014, 08.05.2014, 09.05.2014, 10.05.2014, 11.05.2014** ஆம் திகதிகளில் மாலை 5.30 மணி தொடக்கம்
(பயிற்சிகள் ஆரம்பம்)

**இடம்:**
இணுவில் அறிவாலயம்,
கந்தசுவாமி கோயிலடி, இணுவில்,
யாழ்ப்பாணம்.
(47611) (10)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
adv@uthayan.com
0215671111

**ANGEL INTERNATIONAL SCHOOL**
*Extention Branch Chavakacheri*

ANGEL INTERNATIONAL SCHOOL MANIPAY
In God we trust
humedica

* New admissions for Pre-School
2014
Uthayasooriyan Road,
Chavakacheri.

* Angel International School is the first and the largest International School in Jaffna Penisula with 1000+ students.




* 3+ - Gr 2 மாணவர்களிற்கு புதிய அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன!
(சாவகச்சேரி, யாழ்ப்பாணம், மானிப்பாய்)

**Contact Information:**
**Phone:** 021-225-5628/0777238300
**Email:** angelism2006@gmail.com
**Website:** www.aismanipay.info

புதிய அனுமதிகள்!

**Chemistry Personal Classes**
Theory (Organic, inorganic physical) and 20 வருட கடந்தகால வினாக்கள் Tamil / English medium வீடு வந்து ஆசிரியரால் (B.Sc (cey) M.Sc (cey) Chemistry) கறபிக்கப்படும்.
தொடர்பு: 077 603 8913 (47610)(10)

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1974 ஆம் ஆண்டு பிறந்த உத்தராடம் 3 ஆம் பாதம் லண்டனில் வசிக்கும் PR உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 075 242 1580 (47606)(6.4)
Email: rubantp@hotmail.com

**சோதிடம்**
★ கல்வியில் சித்தியுண்டா?
★ உத்தியோகம் கிடைக்குமா?
★ வியாபாரம் விருத்தியாகுமா?
★ வெளிநாடு போகலாமா?
★ திருமணம் நடைபெறுமா?
★ நோய் நீங்குமா?
கேட்டுத் தான் பாருங்களேன்!
ஜாதகம், கைரேகை, எண் விஞ்ஞானம் மூலமாகப் பலன்கள் சொல்லப்படும்.
"சிவா சோதிடம்" (47605) (7.6)
100, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(யாழ் இந்து மகளிர் கல்லூரியடி) கைபேசி : 077 899 6281

**உடனடி பயணம் (ஒரு வாரத்தில்)**
**இச்சலுகை 3ஆம், 4ஆம் திகதிகளில் மட்டுமே!**
கட்டார், நெஸ்லே வோட்டர் கம்பனியில்
**வேலைவாய்ப்புகள்**
சாரதிகள் - **70,000/=** இருந்து மேல் சம்பளம்
சேல்ஸ் விநியோகஸ்தர் - **40,000/=** இருந்து மேல்
இன்னும் பல கம்பனிகளில் வேலை வாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| AC Technician | - 12 | விசா, ரிக்கட் விமானச்சீட்டு உட்பட கட்டுப்பணம் 39,000/= இலிருந்து 69,000/= வரை |
| Electrician | - 40 | |
| Plumber | - 35 | |
| Dutch Fitter | - 30 | |
| Pipe Fitter | - 30 | |
| Hel per | - 15 | |

இன்னும் ஏராளமான வேலை வாய்ப்புகள் எம்மிடம் உள்ளன
அரச அங்கீகாரம் பெற்றவர்கள் PV 72052 LL 2502

**Head Office**
Rifraa International(Pvt)Ltd.
Main Street, Nintavur,
Sri Lanka.
T.P.: 0675677777,
0674929149,
0674929159.
E.mail.rifraa@gmail.com.
www.rifraa.com

**Branch Office**
Rifraa International(Pvt)Ltd.
No.95, Muslim College Road,
Jaffna.
Sri Lanka.
T.P.: 077 843 6475,
021 221 7085
E.mail.rifraajaffna@gmail.com.
www.rifraa.com

(47604)(7.5)

**கண்ணீர் அஞ்சலி**



பளைக் கல்விக் கோட்டத்தின்
கிளி/அல்லிப்பளை சி.சி.த.க பாடசாலை
அதிபர் த. ஜெபதாஸ் அவர்களின்
பாசமிகு தாய்
திருமதி **மனோன்மணி தங்கராசா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**கோட்டக் கல்வி அலுவலர் மற்றும் அதிபர்கள்,**
**பளைக் கல்விக் கோட்டம்** (சி/7686) (10)

**மரண அறிவித்தல்**

திருமதி **மனோன்மணி தங்கராஜா**



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி தங்கராஜா 01.05.2014 வியாழக்கிழமை காலமாகிவிட்டடார்.

அன்னார் தங்கராஜாவின் அன்பு மனைவியும், ஜெபதாஸ் (அதிபர், அல்லிப்பளை சி.சி.த.க பாடசாலை), ஜெபசுதன் (ஆசிரியர், கிளி/இராமநாதபுரம் ம.வி), யசோதா ஆகியோரின் பாசமிகு தாயும், சாமினி (ஆசிரியர், யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), சுலக்சனா (தாதிய உத்தியோகத்தர் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபினாஸ், அஸ்வினாத், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி.** (43633) (10)

தகவல் :
**குடும்பத்தினர்.**

# இந்தியாவின் இயந்திரத்தை பயன்படுத்தியதாலேயே விபத்து

## பொத்துஹர ரயில் விபத்துக்கு விளக்கம்

கொழும்பு,மே 3
உதவி ரயில்வே கண்காணிப்பாளரொருவர் இல்லாதிருந்தமை மற்றும் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டிருந்த எஸ் - 11 வகையைச் சேர்ந்த ரயில் என்ஜினுடன் பயணித்திருந்தமையே பொத்துஹர ரயில் விபத்து நிகழ்ந்தமைக்கான பிரதான காரணம் என்று அகில இலங்கை ரயில்வே பொது ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
உதவி ரயில்வே கண்காணிப்பாளர் ஒருவர் இல்லாது 12 ரயில் பெட்டிகளுடனான 'இன்ரசிற்றி' கடுகதி ரயில் பயணம் செய்வதற்கு அதிகாரி கள் எவ்வாறு அனுமதியளிக்க முடியும் என்று இந்தச் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.
எஸ் -11 வர்க்க என்ஜின்களின் வேகக் கட்டுப்பாட்டு விசைத் தொகுதியில் உள்ள பலவீனம் மற்றும் அந்த என்ஜின்கள் கண்ணாடி இழைநார் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதனால் இலங்கையில் பயணங்களை மேற்கொள்ள பொருத்தமற்றவை என்று ஏற்கனவே எமது சங்கம் அறிவித்திருந்தது.
எஸ்-11 வர்க்க ரயில் என்ஜின்கள் எமது நாட்டுப் பயணங்களுக்குப் பொருத்தமற்றவைகள் என்று ரயில் சாரதிகள்கூட ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தனர். ஆதலால் இந்த ரயில் விபத்துக்கு அதிகாரிகள் தரப்பும் பொறுப்புக்கூற வேண்டும் என்று சங்கம் கூறியுள்ளது.
எனவே இந்த எஸ் -11 வர்க்க என் ஜின்கள் பயணத்தின் போது இடை நடுவில் நின்றுவிடும் சாத்தியம் உள்ளதாக சங்கம் கூறியுள்ளது. இந்த விபத்துக் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படுவது அவசியம் என்றும் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச-22)

# வழமைக்குத் திரும்பியது வட மார்க்க ரயில் சேவை

கொழும்பு,மே3
குருநாகல், பொத்துஹர ரயில் விபத்தின் பின்னர் வடக்கு மார்க்கத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல் மீண்டும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
மஹவ, குருநாகல், பொல்கஹவெல ரயில் நிலையங்களில் இருந்து மூன்று அலுவலக ரயில்கள் பயணத்தை ஆரம்பித்துள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.
பொத்துஹர ரயில் நிலையத்துக்கு அருகில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.
இந்த விபத்தால் வடக்கு மார்க்கத்திலான ரயில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# காயமடைந்தவர்களுக்கு ரூ.25 ஆயிரம் இழப்பீடு

கொழும்பு,மே 3
குருநாகல், பொத்துஹெர ரயில் நிலையத்துக்கு அருகில் நடைபெற்ற ரயில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கப்படவுள்ளது.
இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம அறிவித்துள்ளார்.
அதன் அடிப்படையில் ரயில்வே திணைக்களத்தின் ஊடாக இந்த இழப்பீட்டு தொகை வழங்கப்படும் என்று திணைக்களத்தின் வணிக அத்தியட்சகர் பி.டப்ளியூ. எஸ். சிசிர குமார தெரிவித்தார்.
இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த 4 பேர் கொண்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். (ச)

கணினி திருத்தம்
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம்.
அழையுங்கள். 0779086737 Computer Repair
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna.

# வினாப் பத்திரங்களை தயாரிக்கப் புதிய குழு

கொழும்பு,மே 3
ஜி.சீ. ஈ. உயர்தரப் பரீட்சை வினாப் பத்திரங்களைத் தயாரிக்கும் பேராசிரியர்கள்தரப்பொன்று அக் கடமையிலிருந்து நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களத்தின் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன. அதற்கமைய எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடத்தப்படவுள்ள உயர் தரப் பரீட்சையின் வினாத் தாள்களைத் தயாரிக்கும் பொறுப்பு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் பரீட்சைவினாப் பத்திரங்களைத் தயாரிப்பது குறித்த அனுபவமில்லாத சிலரும் உள்ளடங்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
பொருளாதார விஞ்ஞானம், வர்த்தக ஆய்வுகள் உட்பட மேலும் சில வினாப் பத்திரங்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருந்துள்ள பேராசிரியர்களே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி ச.கோடீஸ்வரன் அவர்களின்
தந்தையார்

### விநாசித்தம்பி நல்லையா

அவர்கள் அமரத்துவம் அடைந்ததையிட்டு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பெறப்பதி வீதி,
கொக்குவில். (47612)

ஆசிரியர் நலன்புரி சங்கம்,
யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்


# மாநாட்டு செய்தி சேகரிப்பில் 250 ஊடகவியலாளர்கள்

கொழும்பு,மே 3
எதிர்வரும் 6 ஆம் திகதியில் இருந்து 10 ஆம் திகதி வரை இலங்கையில் இடம்பெறவுள்ள உலக இளைஞயோர் மாநாட்டின் செய்தி சேகரிப்பில் 250 இற்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்று இளையோர் மாநாடுகள் செயலகம் தெரிவித்துள்ளது. இந்த மாநாட்டில் 107 நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பல சர்வதேச கண்காணிப்புக் குழுக்கள் கலந்து கொள்ளவுள்ளன. (ச-22)

## மரண அறிவித்தல்

# ஞானப்பிரகாசம் அன்ரன்

(முன்னாள் உதயன் நிறுவன சந்தைப்படுத்தல் அலுவலர்)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் அன்ரன் நேற்று (02.05.2014) வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஞானப்பிரகாசம்-மாசிலாமணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆனந்தம்-அருளம்மா தம்பதியரின் மருமகனும், சகாய மேரி பிலோமினா (ஜெயமெனிக்கா) வின் பாசமிகு கணவரும், அனிற்றாவின் அன்புத் தந்தையும், தேவானந்தின் மாமனும், ஏஞ்சல், ஏய்டன் ஆகியோரின் பேரனும், முத்துக்கிளி, காலஞ்சென்ற ஜோண்சன் மற்றும் கிறேசியன், யசிந்தா, வின்சன், சகாயம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், றஞ்சிதம், காலஞ்சென்றவர்களான மரியதாஸ், இயேசுராசா மற்றும் யோகராசா, ஜோர்ஜ், கிளமென்ற் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்கம் நாளை (04.05.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

# மகளிர் அமைச்சுக்கு ரூ. 400 மில். வழங்கிய அரசு

கொழும்பு,மே 3
சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சுக்கு விசேட நிதி ஒதுக்கீட்டின்கீழ் 400 மில்லியன் ரூபா அரசால் வழங்கப்பட்டுள்ளது.
சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் வன்புணர்வுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துதல் உட்பட இந்தத் துறையின் அபி விருத்திக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
பாதுகாப்பற்ற மற்றும் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களுக்கு தற்காலிகப் புகலிடம் வழங்கும் மையங்கள் உட்படப் பல தேவைகளுக்காக இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று சிறுவர் மகளிர் அபிவிருத்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-22)

# 11,531 வன்புணர்வு சம்பவங்கள்

கொழும்பு,மே3
இலங்கையில் கடந்த ஆறு ஆண்டுகளில் பெண்கள் மீது 11,531 வன்புணர்வுச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என்று பொலிஸ் புள்ளி விவரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
2007ஆம்ஆண்டுமுதல் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வரை 11531 வன்புணர்வுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் 12229 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# தேங்காய் சார்ந்த பொருள்களின் ஏற்றுமதிகள் ஜனவரியில் அதிகரிப்பு

## பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு தகவல்

கொழும்பு,மே 3
தேங்காய் சார்ந்த பொருள்களின் ஏற்றுமதி வருவாய் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது இந்த ஆண்டின் ஜனவரி மாதத்தில் உயர்ச்சி அடைந்துள்ளது.
இந்தத் தகவலை தென்னை அபிவிருத்தி மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.
2013 ஆம் ஆண்டில் தேங்காய்கள் உற்பத்தி ஏற்றுமதியின் ஒட்டுமொத்த வருவாய் 44,952 மில்லியன் ரூபாவாகும். அது 2014 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 4,768 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் ஜனவரி மாதத்து டன் ஒப்பிடும்போது நூற்றுக்கு 94 வீத வளர்ச்சியாகும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

**2014 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் மாத்திரம் 4,768 மில்லியன் ரூபா வாக அதிகரித்துள்ளது.**

தேங்காய் சார்ந்த ஐந்து வகையான உற்பத்திகளின் கீழ் இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தேங்காயின் உள்ளேயிருக்கும் வெண்மையான பகுதி சார்ந்த உற்பத்திகள், தும்பு சார்ந்த மூலப்பொருள்கள் ஏற்றுமதி, தும்பு சார்ந்த உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் ஏற்றுமதி, சிரட்டை சார்ந்த மற்றும் ஏனைய தேங்காய் சார்ந்த பொருள்களே இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
தேங்காய் சார்ந்த 35 வரையிலான உற்பத்திப் பொருள்கள் உலகிலுள்ள 135 நாடுகளுக்கு இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக ஸ்தாபகரும் முன்னை நாள் செந்தாரகை விளையாட்டுக் கழக செயலாளரும், முன்னாள் இல. 75, கிராஞ்சிக் கிராம சேவகரும் ஆகிய

### செல்லன் சிவபாலன்

அவர்கள் போட்டிப் பரீட்சைக்கூடாக நிர்வாக கிராம உத்தியோகத்தராக (அதிசிறப்பு தரம் SUPRA G.N) பதவி உயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகமும், கிராஞ்சிக் கிராம மக்களும்.

# பான் கீ-முனைச் சந்தித்து நவிப்பிள்ளை முக்கிய பேச்சு

## இலங்கைக்கான விசாரணைக் குழு குறித்து முக்கிய ஆலோசனை

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலர் பான் கீ-மூனுக்கும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் இடையே நேற்று முக்கிய சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது என்று தெரியவருகின்றது. ஐ.நா. தலைமையகத்தில் நியூயோர்க் நேரப்படி நேற்று பிற்பகல் 12.45 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமைமீறல்கள்தொடர்பான சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கும் நிலையில் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைக் குழுவை அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் நிலையில், அதுதொடர்பான ஆலோசனைகளை ஐ.நா. பொதுச் செயலரிடம் பெற்றுக் கொள்ளும் முகமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. எனினும் சந்திப்புக் குறித்த மேலதிக விவரங்கள் வெளியாகவில்லை. (ற)

# ஊர்காவற்றுறை பயனாளிகளுக்கு தண்ணீர் கொள்கலன்கள்

தீவகம்வடக்கு, ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் 150 இற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு சுமார் 30 லீற்றர் தண்ணீர் கொள்ளக் கூடிய பிளாஸ்ரிக் கொள்கலன்கள் நேற்று இலவசமாக வழங்கப்பட்டன. பிரதேச செயலர் திருமதி எ.அன்ரன் யோகநாயகத்தின் வழிகாட்டலின் கீழ் ,பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி வ.தர்சினியால் குறித்த நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ற-115)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கோபியின்

பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தேடப்படுபவராக, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி கோபி என்பவர் அடையாளப் படுத்தப்பட்டிருந்தார். அதன் பின்னர் மார்ச் மாதம் 13 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன், தேடுதல் வேட்டை தீவிரப்படுத்தப்பட்டது. வடக்கில் பெருமெடுப்பிலான கைது நடவடிக்கைகளிலும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் ஈடுபட்டிருந்தனர்.

தேடப்படுபவர்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் ஜெயக்குமாரி மற்றும் அவரது 13 வயதான மகளான விபூசிகா ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் காணாமற்போனார் தொடர்பான போராட்டங்களில் முன்னின்று குரல் கொடுத்து வந்தவர்களாவர்.

அதனைத் தொடர்ந்து தேடப்படுபவராக அறிவிக்கப்பட்ட கோபியின் மனைவி சர்மிளா மற்றும் அவரது தாயார் ஆகியோரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 11 ஆம் திகதி நெடுங்கேணியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், கோபி மற்றும் அவருடன் தேடப்பட்ட அப்பன், தேவிகன் ஆகியோரும் கொல்லப்பட்டு விட்டனர் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருந்தது.

அதனையடுத்து கோபியின் தயார் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்த நிலையில் தற்போது கோபியின் மனைவியான சர்மிளாவை பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் விடுவித்துள்ளனர். (ற-5)

### சீருடை

2006ஆம்ஆண்டுமேமாதம்2 ஆம் திகதி உதயன் பத்திரிகைப் பணிமனைக்குள் புகுந்து காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்பட்ட தாக்குதலில் இரு உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அச்சியந்திரங்கள் சேதமாக்கப்பட்டன. இந்த மிலேச்சத்தன்மான தாக்குதல் நடத்தப்பட்டு 8 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையில், உயிர்நீத்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு நேற்று உதயன் பணிமனையில் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

"ஊடகத்துறை வரலாற்றில் உதனுக்கு என்று தனியிடம் உண்டு. இரத்தத்தை வடித்துக் கொண்டு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப, விடுதலைக்கான சமுதாயத்தை உருவாக்க இந்தப் பத்திரிகை செயலாற்றியதை நாம் அறிவோம். இந்தச் சந்தர்ப்பத்தில் தமது உயிர்களைக் கொடுத்து சமுதாயத்தின் மீட்சிக்காக உழைத்தவர்களை நாம் வணங்குகின்றோம்.

இன்றைய (நேற்று) உதயன் பத்திரிகையில் ஆசிரியர் ம.வ. கானமயில்நாதனுக்கு விருது கிடைத்துள்ள செய்தி பிரசுரமாகியுள்ளது.

அதைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அவரைப் போன்ற அனுபவசாலிகள் இன்றும் உதயனோடு இணைந்திருப்பது பத்திரிகைக்குப் பலமாக அமையும். அதே போன்று ஒரு விடுதலைக்கான சமுதாயத்தைக் கட்டியெழுப்பியதில் மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரனுக்கும் பங்குண்டு.

தமிழ், தமிழ் தேசியம், தமிழ் மக்களின் விடிவு பற்றி எழுதும் பத்திரிகைகள் மோசமாகத் தாக்கப்பட்டுள்ளன. ஆனால் பல இழப்புகளைக் கடந்தும் இன்று மக்களின் குரலாக உதயன் வளர்ந்து நிற்கின்றது. அதற்கு நிறுவனத்தின் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்தவர்களின் பங்களிப்பும் ஒரு காரணம்.

எமது இனத்துக்கென பல பத்திரிகைகள் வெளிவந்தாலும், மண்ணின் விடுதலையையும், உணர்வுகளையும் எமக்காக உயிர் கொடுத்தவர்களின் நினைவையும் தாங்கி வெளிவருவது உதயன் பத்திரிகை.

இன்று இலங்கையில் ஊடக சுதந்திரம் மோசமாக நசுக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஜனாதிபதிதான் ஒருகாலத்தில் ஊடக சுதந்திரம் குறித்து ஐ.நா. சபையில் மனுக் கொடுத்திருந்தார். ஆனால் ஊடக சுதந்திரம் மோசமாக நசுக்கப்படுவது அவரது தற்போதைய ஆட்சியிலேயேதான்.

பணிக்கு வரும் ஊடகவியலாளர்கள் "பாதுகாப்பாக இன்று வீடுபோய்ச் சேர்வோமா?"- என்று அஞ்சும் அளவுக்கு இலங்கையின் ஊடக சுதந்திரம் காணப்படுகின்றது. இலங்கையின் தற்போதைய தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவின் சகோதரும், ஊடகவியலாளருமான சுனந்த தேசப்பிரிய தனது இனத்துக்காக மட்டுமன்றி, எமக்காகவும் குரல் கொடுத்தவர். மனித உரிமைகள் தொடர்பான பரப்புரைகளில் ஈடுபட்டவர். அவரின் போராட்டங்களில் நாமும் பங்கெடுத்திருந்தோம். அவர் தற்போது அரசுக்கும், அதன் அடியாள்களுக்கும் பயந்து வெளிநாட்டில் மறைந்துள்ளார்.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்கவின் சாவின் மர்மங்கள் இன்னமும் களையப்படவில்லை. ஆங்கிலப் பத்திரிகை ஒன்றின் ஆசிரியரான அவர் பற்றி விவரங்கள் பலருக்குத் தெரிந்தும் யாரும் வெளிப்படுத்தவில்லை.

17ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி, 18 ஆம் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தன் மூலம், உலகில் யாருக்கும் இல்லாத நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவராக மாறியுள்ளார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. இன்று நாட்டின் நீதித்துறை கூட ஜனாதிபதியின் காலடியிலேயே கிடக்கின்றது. அதனால் நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே.

கடந்த 60 ஆண்டுகாலப்போராட்டத்தில் என்றும் இல்லாத அளவுக்குப் பேரினவாத இராணுவ, சர்வாதிகாரத்தனமான அடக்குமுறையின் சிறைக்கூடமாக தமிழ் மக்களும், அவர்களின் பிரதேசமும் மாறியிருப்பது கடந்த ஐந்து ஆண்டுகள் தான். எமது மக்களின் குரலை அடக்கியே ஆகவேண்டும் என்று அரசு செயற்படுவதை நாம் பகிரங்கமாகப் பேச ஆயத்தமாகியுள்ளோம்."- என்று தெரிவித்துள்ளார். (ற-10)

### அப்பனுக்கு

மிட வசதிகளை வழங்கினார் என்று தெரிவித்து தற்போது அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

அநுராதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்தே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், தற்போது அநுராதபுரம் பொலிஸார் இதுகுறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று மேலும் கூறப்படுகின்றது. (ற)

### இராணுவ

விச் செயலர் நிஷா பிஸ்வால்.

கடந்த புதன்கிழமை 'தெற்காசியாவில் அமெரிக்க உதவி முன்னுரிமைகளை மதிப்பிடுதல்' என்ற தலைப்பில், வெளிவிவகாரக் குழுவின் ஆசிய பசுபிக் உபகுழுவின் முன்பாக உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். "இலங்கையில் நாம் தொடர்ந்து நல்லிணக்க முயற்சிகளுக்கும், மனித உரிமைகள் பாதுகாப்புக்கும் ஆதரவளித்து வரு கிறோம்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 2014 ஆம் ஆண்டு மார்ச் அமர்வில், உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த பின்னர், நல்லிணக்கம், பொறுப்புக்கூறலுக்கு நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டும், இலங்கை தொடர்பான மூன்றாவது தீர்மானம் அமெரிக்கா தலைமையில் கொண்டு வரப்பட்டது.

அதேவேளை, மனித உரிமைகள் பற்றிய கவலைகள் மற்றும் மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள், வெளிப்படும் ஏனைய துஷ்பிரயோகங்களால் இலங்கையுடன் எமது இராணுவ ஒத்துழைப்புகளை அதிகரிப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லாட்சி, நிலையான அமைதியை உருவாக்க பெரும்பான்மை சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவது போன்றவற்றில் எமது திட்டங்கள் கவனம் செலுத்துகின்றன.

நல்லிணக்கத்துக்கு ஆதரவான மானியங்கள் சிவில் சமூகம் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான ஆதரவு, பெண்களுக்கு அதிகாரமளித்தல், நாடுமுழுவதும் இனங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்தும் திட்டங்கள் என்பனவற்றை இந்த நடவடிக்கைகளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அமைதியான, ஒன்றுபட்ட, வளம்மிக்க இலங்கையை எதிர்பார்க்கும் எமது நீண்டகால ஆவலின் காரணமாகவே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன"- என்று அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-5)

### எதேச்சதிகார

திட்டத்தில் தெற்காசியாவுக்கான தேவைகள் குறித்து அளித்த விளக்கத்திலேயே அவர் இவ்வாறு விவரித்துள்ளார்.

இலங்கையில் தேசிய அளவில் எதேச்சாதிகாரத்தை வலுப்படுத்தும் பலமான போக்கு இருந்தாலும், இலங்கை தொடர்ந்தும் உள்ளூர் தேர்தல்களை நடத்தி வருகின்றது என்று குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையில் போர் நடந்த பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த பெருமளவு மக்கள் மீளவும் திரும்பியுள்ள போதிலும், பாலின அடிப்படையான வன்முறைகள் நாட்டின் சமூக கட்டமைப்புக்கு அச்சுறுத்தலாக இருகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5)

### ஊடக சுதந்திரம்

நிலையில் உள்ளது என அந்தக் கணிப்பில் கூறுப்படுகின்றது. அந்த நாடுகளுக்கு தலா 10 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

'ஊடகச்சுதந்திரம் - 2014' என்ற தலைப்பிலான இந்த அறிக்கையில், இலங்கையில் இணைய ஊடகங்கள் ஓரளவுக்குச் சுதந்திரமாக இயங்குகின்றபோதும், அச்சு ஊடகங்களுக்கு அவ்வாறானதொரு நிலை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை தயாரிப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் காரின் கர்லேகர் இதுதொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்;

"தகவல்கள் மக்களைச் சென்றடைவதைத் தடுக்க முனையும் அரசுகள், மக்களிடம் தகவல்களை எடுத்துச் செல்வோரைத் தண்டிப்பதுதான் - உலகளாவிய ரீதியில் ஊடகச் சுதந்திரம் வீழ்ச்சியடையக் காரணமாகும். கடந்த ஆண்டு உலகின் எல்லா பிராந்தியங்களிலுமே அரச தரப்புக்களினாலும், தனியார் துறையினராலும் கூட ஊடகத்துறையினர் தாக்கப்பட்டனர். செய்திப் பெறுமதி உடைய சம்பவ இடங்களுக்குச் செல்லாது அவர்கள் தடுக்கப்பட்டனர். அவர்கள் சேகரித்த தகவல்கள் தணிக்கை செய்யப்பட்டன. அரசியல் உள்நோக்கம் கொண்ட தாக்கங்களுக்கு அவர்கள் உள்ளாக்கப்பட்டனர் - என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பில் முடிவுகள் எட்டப்படாத 9 சம்பவங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளன என ஊடகவிலாளர்கள் பாதுகாப்புக் குழுவை ஆதாரங்காட்டி 'த காடியன்' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

உலக நாடுகளிலுள்ள ஊடகவியலாளர்களின் கொலைகள் தொடர்பில் கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான 10 வருடகாலப் பகுதியில் 261 சம்பவங்கள் முடிவுகள் எட்டப்படாத நிலையிலுள்ளன என்றும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### ஊடக

யில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களது குடும்பங்கள் நீதியை எதிர்பார்த்து இன்னும் காத்துக் கொண்டிருக்கின்றன.

ஊடகவியலாளர்களைப் பாதுகாத்தல், கடந்தகால குற்றச் செயல்களை விசாரணைக்கு உட் படுத்துவதற்கான உறுதிப்பாட்டை வழங்குதல் ஆகியவற்றின் மூலம் கருத்துச் சுதந்திரத்தைப் பேணுவதற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும்.

உலக ரீதியாக மாற்றம் ஏற்பட்டு வரும் ஒரு யுகத்தில் நாம் வாழ்கின்றோம். சுபீட்சமும், மனித உரிமைகளும் கைகோத்துச் செல்கின்றன. இந்த மாற்றம் எமது சமூகங்களுக்கு ஜனநாயக சுதந்திரம், சட்ட ஒழுங்கு முறைமை, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு வழிசமைக்கிறது"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### மன்னாரில்

அவர் நேற்றுக் காலை மன்னார் துறைமுகத்தில் இருந்து தனது படகில் புறப்பட்டு மாலை 6 மணியளவில் தனுஷ்கோடி கடற்கரையை சென்றடைந்துள்ளார்.

இந்த உலகம் சுற்றும் பயணத்துக்காக இவர், 10 அடி நீளமுள்ள பைபர் கிளாஸ் படகை பயன்படுத்துகிறார். அதன் உட்புறம் அமைந்துள்ள 2 பெடல்களை கால்களால் மிதித்து சைக்கிள் ஓட்டுவது போன்றும், துடுப்பின் உதவியுடனும் எந்த இயந்திர உதவியும் இல்லாமல் பல்வேறு நாடுகளை கடந்து அரபிக் கடல் பகுதிக்கு வந்தார். தனுஷ்கோடியில் சில நாள்கள் தங்கியிருக்கும் இவர் படகில் ஏனைய நாடுகளுக்கும் பயணித்து 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆஸ்திரேலியா திரும்பவுள்ளார்.

சிறிய படகில் தனியாக இதுவரை 8 ஆயிரம் கி.மீ. தூரத்தை கடந்து வந்துள்ளேன் என்று கூறும் சான்ட்ரா ஸுப்சன், "சிறிய படகாக இருப்பதால் சிறிய அளவில் உணவு பொருள்களையே கொண்டு செல்கின்றேன். சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உலக மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் படகு பயணம் செய்கின்றேன்"- என்று தெரிவித்துள்ளார். (ற)

### தமிழர்களின்

டுக்கப்பட்டிருந்தன. இதனை வடக்கு மாகாண சபையின் வவுனியா மாவட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று கண்டிருந்தனர்.

இதன் பின்னர் வடக்கு மாகாண சபையின் மார்ச் மாத அமர் வில் மேற்படி பிரதேசத்தில் இராணுவத்தினரால் சிங்கள குடியேற்றத்துக்கு முன்னெடுக் கப்பட்டிருக்கும் நடவடிக்கையை நிறுத்துமாறு கோரி, உறுப்பினர் இ.இந்திரராசாவால் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்தப் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருந்தது.

குறித்த பிரதேசத்துக்கு அண்மையில் மூவின மக்களும் வாழ்ந்து வருகின்றனர். அத்துடன் பாவற்குளம் பிரதேசத்தில் இடப்பெயர்வுக்கு முன்னர் - 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் - தமிழ் மக்கள் மானாவாரி பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் பரம்பரை பரம்பரையாக அதனை மேற்கொண்டிருந்தனர்.

பாவற்குளம் பிரதேசம் வெண்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்டதாக இருந்த போதிலும், வவுனியா தெற்குப் பிரதேச செயலகமே (சிங்களப் பிரதேச செயலகம்) அந்தப் பகுதியில் சிங்கள குடும்பங்கள் குடியே றுவதற்குரிய ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த இந்தப் பாவற்குளம் பிரதேசத்தில், 'அவரந்தலாவ' என்று சிங்களப் பெயர் சூட்டியுள்ள பகுதியில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, கடந்த புதன்கிழமை 77 குடும்பங்கள் இங்கு குடியமர்வதற்காக தலா அரை ஏக்கர் காணி மற்றும் வீடுகட்டத்தேவையான பொருள்கள் இலங்கை அரசினாலும் இராணுவத்தினராலும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில், சியம்பலகஸ்வெவ விமலசார தேரோ், வவுனியா அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர, வவுனியா தெற்கு பிர தேச செயலர் ஜனக, இராணுவத்தின் 21 ஆவது டிவிஷன் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் விதானகே, ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர். அதேவேளை இரண்டாவது கட்டமாக, 48 சிங்களக் குடும்பங்கள் இங்கு குடியமர்த்தப் படவுள்ளன. (ற-5)

# வலிகாமம் வலய ஹொக்கி; யூனியன் கல்லூரி சம்பியன்



யூனியன் கல்லூரி அணியினர்

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வயைச் சம்பியனானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கோல் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில், போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு அடிகளைத் தொடர்ந்து யூனியன் கல்லூரி 3:2 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணக் கல்லூரியை வென்று சம்பியனாகியது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியும் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், மோதிக் கொண்டன. இரு அணிகளும் கோல்கள் எதனையும பெறாமல் போட்டி சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து மானிப்பாய் இந்துக் கல்லாரி 2:0 என்ற கோல் கணக்கில் மகாஜனாக் கல்லூரியைவென்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (கு-86)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 3

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான டொனால்ட் கணேசகுமார் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

* * *

இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கம் 6 ஆவது வருடமாக நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான அகில இலங்கை ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் இன்று சனிக்கிழமை கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வவுனியா சீனியர் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சிரேஷ்ட சங்கத்தின் தலைவர் ரி.டெஸ்மன் ஜோசப் கலந்து கொள்ளவுள்ளார். (கு-23)

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை இடம்பெறும் 3 ஆவது இடத்துக்கான ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (கு-23)

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடத்தும் "வடக்கின் சுப்பர் கிங்" உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின் லீக் முறையிலான 2 ஆம் சுற்று ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (கு-23)

# கிரிக்கெட் போட்டி



தென்மராட்சி, மே 3

கைதடி மேற்கு சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கைதடி குமரன் விளையாட்டுக் கழகத்தினர் தென்மராட்சி பிரதேசகிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 9 பேர் கொண்ட 12 பந்துப் பரிமாற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளனர். சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கிரிக்கெட் அணிகள், எதிர்வரும் எட்டாம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு பதிவு செய்யுமாறு கழகச் செயலாளர் சி.விதுஷன் அறிவித்துள்ளார். (கு-9)

# பெண்களுக்கான உதைபந்தாட்டம் மாவட்ட சம்பியனானது மகாஜனா

வலி வடக்கு மே 3

யாழ் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சானுவின் அதிரடிக் கோல்களினால் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாவட்டச் சம்பியனாகியது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் புங்குடுதீவு மகா வித்தியாலயமும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மகாஜனக் கல்லூரி அணியைப் பொறுத்த வரை தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட வீராங்கனைகள் கொண்டதாகக் காணப்பட்டதுடன் அனுபவசாலிகளையும் கொண்டுள்ளது. புங்குடுதீவு மகா வித்தியாலயம் முதல் தடவையாக இவ்வாறு இறுதிப்போட்டியில் மோதியது.

> மகாஜனக் கல்லூரி அணியைப் பொறுத்த வரை தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட வீராங்கனைகள் கொண்டதாகக் காணப்பட்டதுடன் அனுபவசாலிகளையும் கொண்டுள்ளது.

முதல் பாதி ஆட்டத்தில் மகாஜனக் கல்லூரியின் வீராங்கனையான சானு இரண்டு கோல்களைப் பெற்றுக்கொள்ள அனித்தா ஒரு கோலைப் பெற 3:0 என்ற நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் மேலும் தலா ஒவ்வொரு கோலை சானு, கௌரி ஆகியோர் பெற்றுக் கொள்ள போட்டியின் இரண்டாம் பாதி ஆட்டம் 2:0 என்ற நிலையில் முடிவடைந்தது. ஆட்ட நிறைவில் மகாஜனக் கல்லூரி அணி 5:0 என்ற நிலையில் புங்குடுதீவு மகாவித்தியாலய அணியை வென்று சம்பியனாகியது. (கு-86)

# அரியாலை, கோப்பாய் அணிகள் வென்றன

கொழும்புத்துறை, மே 3

கொழும்புத்துறை ஜெற்லைனர்ஸ் சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஜெற்லைனர்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டத்தில் அரியாலை சனசமூக நிலைய அணி, கோப்பாய் சென்.மேரிஸ் அணி என்பன சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டன.

8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட 9 வீரர்கள் பங்கு பற்றும் போட்டியில் அரியாலை ச.ச.நிலைய அணியும் கோப்பாய் சென்.மேரிஸ் அணியும் மோதிக் கொண்டன.

அரியாலை அணி 89 ஓட்டங்களைப் பெற்றது. எதிர்த்து ஆடிய கோப்பாய் சென்.மேரிஸ் அணி 62 ஓட்டங்களைப் பெற்றது. 27 ஓட்டங்களால் அரியாலை ச.ச.நிலைய அணி வெற்றி பெற்றது.

பொற்பதி விளையாட்டுக்கழகத்துக்கும் கோப்பாய் சென். மேரிஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற 6 வீரர்கள் பங்கு பற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட போட்டியில் கோப்பாய் சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்றது. (கு-135)

# யாழ்.சென்றல் - பல்கலை இறுதியாட்டத்தில் மோதல்



யாழ்.சென்றல் அணியினர்



யாழ்.பல்கலை அணியினர்

யாழ்ப்பாணம், மே 3

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் துடுப்பாட்ட அணியும் இணைந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ்.பல்கலைக் கழக அணியை எதிர்த்து யாழ்.சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.


பிரதம விருந்தினராக வர்த்தக வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் எஸ்.பி.றஜீவனும், சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துடுப்பாட்ட அணியின் முன்னாள் வீரரும், பூநகரி மத்திய கல்லூரி ஆசிரியருமான என்.பிரதீபனும் கலந்து கொள்ளவுள்ளனர். (கு-23-86-422)

# ஐந்தாவது வெற்றியைப் பதிவு செய்தது சென்னை




சென்னை சுப்பர்கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 34 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. ஐ.பி.எல். 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாம் கட்டப் போட்டிகள் நேற்று இந்தியாவில் ஆரம்பமாகியது. இப்போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மோதின. மழை காரணமாக 17 பந்துப்பரிமாற்றங்களாகக் குறைக்கப்பட்டு இடம் பெற்ற போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடக் கள மிறங்கியது. சென்னை அணியில் ஸ்மித், மக்கலம், ரெய்னா, டோனி, டுபிளேசிஸ், மன்ஹாஸ், அஸ்வின், ஹில்பெனாஸ், மோகித் சர்மா, ஈஸ்வர் பாண்டே ஆகியோரும் கொல்கத்தா அணியில் கம்பீர், கலிஸ், மணீஷ் பாண்டே, அல் ஹசன், யூசுப் பதான், எஸ். யாதவ், உத்தப்பா, ருசெல், வினய்குமார், சுனில் நரைன் ஆகியோரும் இடம்பெற்றனர். சென்னையின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஸ்மித்-மக்கலம் களம் இறங்கினர். இருவரும் அதிரடியாக விளையாடினார். ஸ்மித் 16 ஓட்டங்களில் ஷாகிப்அல் ஹசன பந்தில் எல்.பி.டபி.யூ. ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த சுரேஷ் ரெய்னா 25 பந்தில் 31 ஓட்டங்கள் எடுத்து பெவிலியன் திரும்பினார். ஒருபுறம் இரண்டுஇலக்குகள் வீழ்ந்தாலும் மறுமுனையில் மக்கலம் சிறப்பாக விளையாடி 56ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அதன்பின் வந்த டோனி 22 ஓட்டங்களும், ஜடேஜா 17 ஓட்டங்களும் எடுக்க சென்னை அணி 17 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்கள்பெற்றது. பந்து வீச்சில் அல் ஹசன்2 இலக்குகளையும் ருசெல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இதனை அடுத்து 149 ஓட்டங்களைவெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் 17 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 114ஓட்டங்களைப் பெற்று 34 ஓட்டங்களால் படுதோல்வி அடைந்தது. அவ்வணி சார்பாக ரொபின் உத்தப்பா 47 ஓட்டங்களையும் யூசுப் பதான் 41 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர். சென்னையின் பந்து வீச்சில் ரவீந்திர ஜடேஜா 4இலக்குகளையும் மோகித்சர்மா 3 இலக்குகளையும் ரவிச்சந்திரன் அஷ்வின் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ரவீந்திர ஜடேஜா ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (400)

# அனைத்திலும் தோல்வி



ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்ற முதல் கட்டப் போட்டியில் தொடர் தோல்விகளைச் சந்தித்த மும்பை அணி ஏமாற்றத்துடன் நாடு திரும்பியது.
இந்தியாவில் மக்களவைத் தேர்தல் நடைபெற்று வருவதால் ஐ.பி.எல். போட்டிகளின் முதல் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்றது. நேற்றுமுன்தினம் அங்கு போட்டிகள் முடிவடைந்ததை தொடர்ந்து இன்று இந்தியாவில் 2 ஆவது கட்டப்போட்டிகள் தொடங்குகின்றன.
எப்ரல் 16ஆம் திகதி தொடங்கிய முதல் போட்டியில் கொல்கத்தா- மும்பை அணிகள் மோதின. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணி 163 ஓட்டங்கள் எடுத்தது. பின் 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கிய மும்பை அணி 122 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து முதல் தோல்வியைச் சந்தித்தது.
முதல்தோல்வியைச்சந்தித்த மும்பை அணி 2ஆவது போட்டியில் பெங்களூர் அணியிடம் 7 இலக்குகள் வித்தியாசத்திலும், 3வது போட்டியில் சென்னை அணியிடம் 7 இலக்குகள் வித்தியாசத்திலும் தோற்றது.
இந்தத் தோல்வி டெல்லி அணியிடம் 4ஆவது முறையாகவும், ஹைதராபாத் அணியிடம் 5ஆவது முறையாகவும் தொடர்ந்தது.
கடந்த போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற மும்பை அணி 5 போட்டிகளில் ஒன்றில் கூட வெற்றி பெறாததால் மும்பை இந்தியன்ஸ் ரசிகர்கள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். (கு)

# ரசிகர்களுக்கு 'வைபை' பெங்களூர் அணி அதிரடி



கிரிக்கெட் மைதானத்தில் பெங்களூர் அணி நிர்வாகம் வைபை இணையத்தள வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளதால் ரசிகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
பெங்களூர் சின்னசாமி கிரிக்கெட் மைதானம் 34 ஆயிரம் ரசிகர்கள் அமரும் வசதி கொண்டது. இவர்கள் அனைவருக்கும் இலவச இணையத்தள வசதியை பெற ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி நிர்வாகம் முடிவெடுத்தது. இதற்காக 50 இடங்களில் வைபை இணைய இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக அந்த அணி நிர்வாகம்வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், உலகிலேயே ரசிகர்களுக்கு இலவச இணையத்தள வசதி அளிக்கும் ஒரே அணி என்ற பெருமை பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸுக்கு கிடைத்துள்ளது. பெங்களூர் அணி மோதும் போட்டிகளின்போது மட்டும் மைதானங்களுக்கு வரும் ரசிகர்களுக்கு இந்த வசதி கிடைக்கும். இலவச 'வைபை' வசதி கிடைக்க ரசிகர்கள் தாங்களது பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)



கம்பீர்

# அப்பாவானார் கம்பீர்

கம்பீர் பெண் குழந்தைக்குத் தந்தையாகியுள்ளார் எனக் கொல்கத்தா அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் அணித்தலைவர் கௌதம் கம்பீர் ஐ.பி.எல். போட்டிகளில் ஆர்வமுடன் விளையாடி வருகின்றார். இரண்டாம் கட்டப் போட்டிகளும் இந்தியாவில் தொடங்கி விட்டன.
இந்நிலையில் கம்பீருக்கு மகிழ்ச்சி அளிக்கும் விதமாக அவரது மனைவி நடாஷாவுக்கு நேற்று முன் தினம் பெண் குழந்தை பிறந்துள்ளது.
கம்பீர்நடாஷா தம்பதிக்கு இது முதல் குழந்தையாகும். இந்த தகவலை கொல்கத்தா அணி நிர்வாகம் டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளது.(கு)

# சொந்த ஊரில் வெல்வோம்



இந்தியாவில் தங்களின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என பெங்களூர் அணியின் அதிரடி வீரர் யுவராஜ் சிங் கூறியுள்ளார்.
ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லும் வாய்ப்புகள் உள்ள அணியாக கருதப்பட்ட பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணி தொடர்ச்சியாக 3 ஆட்டங்களில் தோற்று நெருக்கடியில் தவித்து வருகின்றது.
அந்த அணியில் ரூபா 14 கோடிக்கு வாங்கப்பட்ட யுவராஜ் சிங் 5 ஆட்டத்தில் விளையாடி 121 ஓட்டங்கள் எடுத்துள்ளார். தனது முதல் கட்டப்போட்டிகளை முடித்து விட்டு இரண்டாம் கட்டப் போட்டிகளை இந்தியாவில் தொடங்கவிருக்கும் யுவராஜ் இது பற்றி கூறுகையில், ஐக்கிய அரபு எமிரேட்சில் 15 நாள்கள் விளையாடினோம்.
தொடர்ந்து 3 ஆட்டங்களில் தோல்வியடைந்தது எங்களுக்குப் பெரும் பின்னடைவு என்பதில் சந்தேகம் இல்லை. இப்போது இந்தியாவில் விளையாடி சரிவில் இருந்து மீள்வதற்கான நேரம் வந்துள்ளது. தோல்வியில் இருந்து நாங்கள் சீக்கிரம் எழுச்சி பெறுவது அவசியம். ராஜஸ்தான் ரோயல்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் மட்டும் படுமோசமாக ஆடினோம். மற்றப் போட்டிகளைப் போல 20/20 போட்டிகள் எளிதாக அமையாது. இந்த வடிவிலான போட்டியில் வெற்றியோ தோல்வியோ குறுகிய நேரத்தில் மாறிவிடும்.
சரிவில் இருந்து மீள்வது சொந்த ஊரில் கொஞ்சம் எளிதாக இருக்கும் என்று கூறியுள்ளார். (கு)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வீடு விற்பனைக்கு
யாழ். நல்லூர் ஆலய சூழலில் 1 ½ பரப் புக் காணி யில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை) விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0778149347. 0718565672

BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
புதிய கற்கை நெறிகள்

Spoken English With Grammar - Quick Learning Course (1 ½ Months)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிறபகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும்
(Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

Diploma In English (2 Months)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி
ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது.
இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

IELTS Toping centre for registering more IELTS candidates in Jaffna & Approved centre for IELTS online Registration system for Exam
< We gurantee minimum 6.0 band and above > Duration: 2 ½ Months

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

EVENING & WEEKEND CLASSES STARTS ON
03.05.2014 @11.30 - 02.30PM
05.05.2014 @02.00 - 05.00PM
07.05.2014 @03.00 - 05.00PM

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines : 0777222422 0777585913, 0714299935, 0777730074

# நீடிப்பார் மிஸ்பா

உலகக்கிண்ண கிரிக்கெட்டுக்குப் பாகிஸ்தான் அணிக்கு அணித்தலைவராக மிஸ்பா உல் ஹக் நீடிப்பார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

2015ஆம் ஆண்டின் உலகக்கிண்ணப் போட்டிகளுக்கு யார் பாகிஸ்தான் அணியின் அணித்தலைவராகத் தெரிவு செய்வது என்பது குறித்து, தொடர்ந்து குழப்பம் நிலவி வந்தது.

இந்நிலையில் அணித்தலைவராக மிஸ்பா உல் ஹக் பதவி வகிப்பார் என அந்நாட்டு கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

முன்னதாகப் பாகிஸ்தான் அணிக்கு வேறு அணித் தலைவர் நியமிக்கப்படலாம் என்று பேச்சு அடிபட்டது. பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்சியாளர் மொய்ன் கானும் அதையே கூறி வந்துள்ளார்.

மொய்ன் கான், அதிரடி வீரர் ஷாஹித் அப்ரிடிக்கு ஆதரவாக கருத்து தெரிவித்து வந்துள்ள நிலையில், அதை பாகிஸ் தான் கிரிக்கெட் சபை ஏற்கவில்லை. ஆனால் கிரிக்கெட் சபைத் தலைவர் நஜம் சேத்தியின் ஆதரவு அவருக்குக் கிடைத்ததால் மிஸ்பா அணித் தலைவராக நீடிப்பார் என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நஜம் சேத்தி கூறுகையில்;

அணித் தலைவரை மாற்றும் பேச்சுக்கே இடமில்லை. ஏற்கனவே சொன்னது போல மிஸ்பாவே உலகக்கிண்ணத் தொடருக்கும் அணித் தலைவ ராக நீடிப் பார். அணித் தலைவரை நியமிப்பதும் நீக்குவதும் சபைத் தலை வரின் உரிமை. அதை யாரும் கேள்வி கேட்க முடியாது. தேசிய அளவிலான அணிகளைத் தேர்வு செய்வதோடு தேர்வாளர்களின் வேலை முடிந்து விடும் என்று கூறியுள்ளார்.

(த)

வெளிவந்து விட்டது
கணக்காய்வும் உறுதிப்பாடும் புலனாய்வுகளும்
ஆக்கம்: தேவஞானன்
(உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி)
கிடைக்கும் இடம்:
யாழ்ப்பாணத்தில்
அன்னை புத்தகசாலை
021 222 9881
(சி/14149)(3.5.4)


அடிப்படை
ஆங்கிலம்
அடிப்படை ஆங்கில அறிவில்லாதவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் எழுத,வாசிக்க எளிமையாக உரையாட விரும்புவோர் வயதுவேறுபாடின்றி இணையமுடியும்
பயிற்சிநெறி ஆரம்பம் - 05.05.2014 திங்கள்
பிரிவு 1 : காலை 08.00-09.00 பிரிவு 2 : மு.ப 11.00-12.00
பிரிவு 3 : பி.ப 03.00-04.00 பிரிவு 4 : மாலை 04.00-05.00
வாரத்தில் 3 நாட்கள் பயிற்சி இடம்பெறும்.
Note:- ஒரு பிரிவில் 16 பேர் மட்டும். பயிற்சியில் இணையும் அனைவருக்கும் புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்
SAAMSON LANGUAGE SCHOOL
179, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
077 621 4567

# மரண அறிவித்தல்

## செல்வி விக்னேஸ்வரன் துஸ்யந்தி

(உரிமையாளர்,மயூரா மருந்தகம்,திருநெல்வேலி)



நீர்வேலி, மாசுவனைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி, ஆடிய பாதம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி விக்னேஸ்வரன் துஸ்யந்தி நேற்று (02.05.2014) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விக்னேஸ்வரன்(RMP) மற்றும் சேதுலட்சுமி தம்பதியரின் அன்பு மகளும், ஜெயந்தி (ஆசிரியை, நாவலர் தமிழ் மகாவித்தியாலயம்,கோப்பாய்), ஜெயராஜா(ஆசிரியர்,செங்குந்தா இந்துக் கல்லூரி), ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீஸ்கந்தராஜா (உதவி ஆசிரியர்,தினக்குரல்), பத்மா (பிரதம முகாமை உதவியாளர், யாழ். மாநகரசபை கணக்குப் பகுதி) ஆகியோரின் மைத்துனியும், ஜெயவைசாலி(வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), ஜெய்மாறன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் சித்தியும், ஜெயசேது பனின் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை(04.05.2014) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

47/18, ஆடிய பாதம் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
வி.ஜெயராஜா
ஆசிரியர், யா/செங்குந்தா இந்துக் கல்லூரி.

(47548)(6.6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.